140
140
7 APR 1941
MADRAS

# பாரதநாட்டுச்சரித்திரம்

E.M. கோபாலகிருஷ்ணக்கோன்
மதுரை சென்னை

2-ம் பாரம்

விலை அணா 10

# Bharatha Nattu Charitram

## Form II

**Prepared**
**According to the New Syllabus for High Schools, 1940**

BY

R. TIRUNARAYANA AYYANGAR, B.A., L.T.,

SENIOR HISTORY ASSISTANT

Madura College, A. R. High School, Madura

954

E. M. GOPALAKRISHNA KONE

MADURA MADRAS

Copy Right)

1941

(Price As. 10

V44

First Edition 1941

Printed at the Excelsior Power Press, Madura

# முகவுரை

1940—ம் ஷூ அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ள புதிய பாடத் திட்டத்தை யொட்டியே, இப் பாரத நாட்டுச் சரித்திரப் புத்தகங்களை முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் பாரம் மாணவர்களுக்குப் பயன்படக் கூடியனவாக எழுதியுள்ளேன். அரசாங்கப் பாடத் திட்டத்திற்கண்ட தலைப்புக்களையே இப்புத்தகங்களில் பாடங்களின் தலையங்கங்களாகக் கொண்டும், சரித்திரத் தொடர்பு விட்டுப் போகாவண்ணம் வெகு ஜாக்கிரதையுடனும், சிரமத்துடனும் தயாரித்துள்ளேன். இதன் நடை அவ்வகுப்புக்களுக்கு ஏற்ப எளியதாகவும், மாணவர்கள் மனத்தில் ஊக்கத்தையும், சரித்திர ஆர்வத்தையும் எழுப்பக் கூடியதாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. சரித்திர சம்பந்தமானவர்களின் உருவப்படங்களும், அழகிய வர்ணங்களாலான தேசப் படங்களும் ஆங்காங்கே சேர்க்கப்பட்டிருககின்றன. ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் பயிற்சிகள் சேர்த்துள்ளேன். மாணவர்களுக்கு இவை பெரிதும் பயன்படு மென்பது என் துணிபு.

ஆசிரியர்களும், பள்ளிக்கூட அதிகாரிகளும் இப்புத்தகங்களை அன்புடன் வரவேற்று ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.

மதுரை,
30-1-41

ஆர். திருநாராயண அய்யங்கார்.

# பொருள் அடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகம்மது கஜினியின் படையெடுப்பு | 1 |
| 2. | முகம்மது கோரியின் படையெடுப்பு | 5 |
| 3. | டில்லி சுல்தான்கள் | 9 |
| 4. | அலாவுதீன் கில்ஜி | 11 |
| 5. | முகம்மது துக்ளக் | 16 |
| 6. | பாமினி ராஜ்யம் | 20 |
| 7. | சித்தூர்ராஜபுத்திரர்கள் | 23 |
| 8. | விஜயநகர ராஜ்யம் | 20 |
| 9. | மொகலாயரின் ஆட்சி | 32 |
| 10. | பாபர் | 33 |
| 11. | ஹுமாயூன் | 36 |
| 12. | அக்பர் | 39 |
| 13. | ஜஹாங்கீர் | 46 |
| 14. | ஷாஜஹான் | 49 |
| 15. | ஔரங்கஸீப் | 54 |
| 16. | மொகலாய ராஜ்யத்தின் அழிவு | 56 |
| 17. | மகாராஷ்டிரர்களின் சரித்திரம் | 61 |
| 18. | சிவாஜிக்குப் பின் வந்த அரசர்கள்: பீஷ்வாக்களும் மகாராஷ்டிரத் தலைவர்களின் ஐக்கியமும் | 67 |
| 19. | பிந்திய பீஷ்வாக்களும், ஆங்கிலேயரும், மகாராஷ்டிர அதிகாரத்தின் அழிவு | 72 |
| 20. | சீக்கியர்கள் | 74 |
| 21. | ஐரோப்பியரின் வருகை- இந்தியாவில் போர்ச்சுகீசியரும் டச்சுக்காரரும் | 77 |
| 22. | இங்கிலீஷ்காரரும்,பிரெஞ்சுக்காரரும் இங்கிலீஷ் கிழக்கு இந்தியா கம்பெனி | 81 |
| 23. | இந்தியாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த சண்டைகள் | 87 |
| 24. | கிளைவ் பிரபு | 98 |
| 25. | வாரன் ஹேஸ்டிங்ஸ் | 110 |
| 26. | கார்ன் வாலிஸ் பிரபு | 116 |
| 27. | ஸர் ஜான் ஷோர் | 120 |
| 28. | வெல்லெஸ்லி பிரபு | 128 |
| 29. | மின்டோ பிரபு | 129 |
| 30. | ஹேஸ்டிங் பிரபு | 131 |

# பாரத நாட்டுச் சரித்திரம்

## இரண்டாம் பாரம்

---

### 1. முகம்மது கஜினியின் படை யெடுப்பு

**இந்தியாவின்மீது முகம்மதியர் முதல் படையெடுப்பு** : கி. பி. ஆறும் நூற்றாண்டில் முகம்மது நபியால் ஸ்தாபிக்கப்பட்ட இஸ்லாம்மதம் நாளாவட்டத்தில் அரேபியா முழுவதிலும், பிறகு பாரசீகம், ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளிலும் பரவிற்று. கி. பி. 712-ஆம் வருஷம் அரேபியாவிலிருந்து **காஸிம்** என்பவரின் குமாரரான **முகம்மது** என்பவர் இந்தியாவிற்குவந்து சிந்துநாட்டைக்கைப்பற்றி அதைச்சிலகாலம் ஆண்டுவந்தார். பின்னர் துருக்கி வகுப்பைச்சேர்ந்த ஆப்கானிய அரசரான **ஸபக்டிஜின்** இந்தியாவின்மீது படையெடுத்துப் பஞ்சாபில் ஆண்டுவந்த ஜயபாலரைப் போரில் தோற்கடித்தார். அக்காலத்தில் **கஜினி** என்னும்நகரம் ஆப்கானிஸ்தானத்தின் ராஜதானி.

**கஜினி முகம்மது** : ஸபக்டிஜினுக்குப் பின் அவர்குமாரர் **முகம்மது** என்பவர் தமது பதினாறுவது வயதில் பட்டத்திற்கு வந்தார். அவரை முகம்மது கஜினி என்று சொல்லுவதுண்டு. அவர் மகா தீரர் ; போர்செய்வதில் மிகுந்த விருப்பம் உடையவர். மத்திய ஆசியாவில் ஒரு முகம்மதிய இராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று; அதற்கு வேண்டிய படையை

யும், பொருளையும் திரட்ட நோக்கங்கொண்டார். இளமை முதலே அவர் இந்தியாவின் செல்வத்தையும் செழிப்பையும் பல வர்த்தகர்கள் மூலம் கேள்விப்பட்டிருந்தார். இதனால், இந்தியாவுக்குவந்து ஏராளமான செல்வத்தைத் தாம் அடையவேண்டுமென்ற ஆசை அவருக்கு உண்டாயிற்று. ஆகையால், இந்தியாவின்மேல் அவர் 17 முறை படையெடுத்து வந்தார். அப்பொழுது வட இந்தியாவைப் பல சிற்றரசர் ஆண்டு வந்தனர். அவர்களுக்குள் ஒற்றுமையில்லாததால், அவர்கள் அடிக்கடி தங்களுக்குள் சண்டை செய்து, பலம் குன்றி இருந்தார்கள்.

கஜினி முகம்மது

**முகம்மதின் படை யெடுப்புகள்:**—முகம்மது கி.பி. 1001-ல் வட மேற்குக் கணவாய் வழியாக நம் நாட்டின்மீது படையெடுத்துப் பஞ்சாபில் ஆண்டுவந்த **ஜயபாலரைத்** தோற்கடித்தார். ஜயபாலர் அவமானம் பொறுக்கமாட்டாமல் இறந்தார். அதற்கு மூன்று வருஷங்களுக்குப் பின் ஜயபாலருடைய குமாரர் **அனங்கபாலர்**, உஜ்ஜயினி, குவாலியர், கன்னோசி முதலிய பல நாட்டு ராஜபுத்திர மன்னர்களைச் சேர்த்துக்கொண்டு முகம்மதை எதிர்த்துப் போர் செய்து **பெஷாவர்** என்னுமிடத்தில் தோல்வியுற்றார்.

வெற்றிகொண்ட முகம்மது, **நாகர் கோட்டை** என்னும் நகரைப் பிடித்துக்கொண்டு, அங்கிருந்த தேவி ஆலயத்தைக் கைப்பற்றி, ஏராளமான பொருள்களையும் அடைந்தார். கி. பி. 1011-ம் ஆண்டில் அவர் **தனேஸ்வரம்** என்னுமிடத்திலுள்ள கோயிலின் பொருள்களை அடைந்தார். கி. பி. 1021-ல் அவர் **லாகூரின்மீது** படை யெடுத்துச் சென்று வெற்றிகொண்டு, அதைத் தமது ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார்.

**முகம்மது சோமநாத புரத்தைத் தாக்கினது:**—அக்காலத்தில் கூர்ஜரத்தில் **சோமநாதபுரம்** என்னும் நகரில் பிரசித்தி பெற்ற ஒரு கோயில் இருந்தது. அக்கோயிலுக்குப் பல அரசர்கள் நகைகளும் பாத்திரங்களும் அளித்திருந்தார்கள். இதையறிந்த முகம்மது கி. பி. 1024-ல் சோமநாதபுரத்தின் மேல் படை யெடுத்து வந்தார். அதுவே அவருடைய கடைசிப் படையெடுப்பு. கோயிலின் முன்பு அவருடைய சைனியத்துக்கும், இந்துக்களுக்கும் கடும்போர் நடந்தது. இந்துக்களின் சைனியத்தில் அநேகச் சிற்றரசர்களும், போர் வீரர்களும் சேர்ந்திருந்தார்கள். முடிவில் இந்துக்கள் தோற்றுப் போனார்கள்.

முகம்மது கஜினி கோயிலுக்குள் நுழைந்து அங்கிருந்த ஏராளமான பொன்னையும், மற்றத் திரவியங்களையும் அநேக ஒட்டகைகளின் மீது ஏற்றிக்கொண்டு கஜினிக்குத் திரும்பினார். கி. பி. 1030-ல், அவர் கஜினி நகரில் காலஞ் சென்றார். ஆகவே, மத்திய ஆசியாவில்

பயிற்சி

1. முகம்மது கஜினி எந்த நாட்டரசர்? இந்தியாமீது அவர் ஏன் படை யெடுத்தார்?

2. முகம்மது கஜினியின் குணதிசயங்கள் யாவை?

3. அவரால் ஆதரிக்கப்பட்ட வித்வான்கள் யார்? அவர்களைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

---

## 2. முகம்மது கோரியின் படையெடுப்பு

**முகம்மது கோரி**: கோரி வமிசத்தில் பிரபலமானவர் முகம்மது கோரி என்பவர். அவர் ஆப்கானி ஸ்தானத்தில் **கோர்** என்னும் நகரத்தில் அரசாண்டு கொண்டிருந்தார். முகம்மது கஜினியைப் போல அவரும் சிறந்த போர் வீரர்; செல்வத்தில் ஆசையுடையவர். இந்தியாவை ஜயித்து ஆள வேண்டுமென்ற எண்ணமும் அவருக்கு உண்டு. ஒன்பது முறை அவர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார். அவர் முதலில் பஞ்சாபை ஜயித்தார். அக்காலத்தில் வட இந்தியாவில் புகழுடன் விளங்கிய ராஜபுத்திர அரசர் இருவர் இருந்தனர். அவர்களுள் ஜயசந்திரர் என்பவர்

முகம்மது கோரி

ஒரு பெரிய ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்ற அவருடைய எண்ணம் நிறைவேருமல் போயிற்று. அவர் இறக்குந் தருணத்தில் அவர் கொண்டுவந்த திரவியங்களைக் குவிக்கும்படி செய்து, ‘இந்த ஏராளமான திரவியத்தை விட்டுப் பிரியவேண்டி இருக்கிறதே!’ என்று துயரமடைந்தார் என்று சொல்லப்படுகிறது.

**முகம்மதின் குணதிசயங்கள்:**— முகம்மது சிறந்த வீரர்; ஊக்கமும், விடாமுயற்சியும் கொண்டவர்; யுத்தம் செய்வதில் பிரியம் உடையவர்; கல்வியிலும், கற்றோரிடத்திலும் விசேஷ அபிமானம் கொண்டவர். அவர் கவிகளையும், வித்துவான்களையும் ஆதரித்து வந்தார். **பர்தூஸி** என்ற சிறந்த பாரசீகக் கவிவாணர் அவருடைய சமஸ்தானத்தில் இருந்து வந்தார். அவர் முகம்மது நபியின் பிரதாபங்களைப் பற்றி **ஷா நாமா** என்னும் நூலில் எழுதி இருக்கிறார். **அல்புருனி** என்னும் பிரசித்தமான ஒரு வான சாஸ்திரியும் அக்காலத்தில் முகம்மதுடன் இந்தியாவுக்கு வந்திருந்தார். அவர் இந்திய சரித்திரம் ஒன்று எழுதி இருக்கிறார்.

கஜினி வமிசத்தவர்களின் ஆட்சி ஆப்கானிஸ்தானத்தில் 150 வருஷகாலம் நிலைத்திருந்தது. பின்பு கோரி வமிசத்தைச் சேர்ந்த வேறு துருக்கி வகுப்பினர் ஆப்கானிஸ்தானத்தின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டனர்.

கன்னேசி நாட்டையும், பிருதிவி ராஜர் என்பவர் டில்லி, ஆஜ்மீர் நாடுகளையும் ஆண்டு வந்தனர்.

இந்த இரண்டு அரசர்களுக்கும் விரோதம் உண்டு. ஜயசந்திரர் தம்மால் பிருதிவியைஜயிக்க முடியாதென்று கண்டு, முகம்மது கோரியின் உதவியை நாடி, அவரைப் படையெடுத்துவர வேண்டினர். முகம்மது கோரி தக்க சமயம் கிடைத்ததென்று சந்தோஷத்துடன் ஒரு பெரும்படையைச் சேர்த்துக்கொண்டு, கி.பி. 1191-ல் இந்தியாவிற்கு வந்து பிருதிவியை எதிர்த்தார். **தனேஸ்வரம்** என்னுமிடத்தில் இருவருக்கும் கடும்போர் நடந்தது. ஜயசந்திரர் நீங்கலாக மற்ற ராஜபுத்திர மன்னர்களெல்லாம் பிருதிவியுடன் சேர்ந்து சண்டை செய்தார்கள். முகம்மது கோரி முற்றிலும் தோல்வியுற்றுத் திரும்பிச் சென்றார். எனினும், மனம் தளராது இவர் 1192ல் மறுமுறை வந்து, அதே இடத்தில் பிருதிவியுடன் போர் செய்தார். அந்த யுத்தத்தில் முகம்மதியர் ஜயமடைந்தனர். பிருதிவி இறந்தார்.

**முகம்மது இந்தியாவில் ராஜ்யத்தை ஸ்தாபித்தல்:** அடுத்த வருஷம் முகம்மது கோரி முன்பு தம்மை விரும்பி அழைத்த ஜயசந்திரரையும் தோற்கடித்துக் கன்னேசி நாட்டைப் பிடித்துக்கொண்டார். இவ்வாருக டில்லி, ஆஜ்மீர், கன்னேசி, காசி, குவாலியர் முதலிய பல நாடுகள் ஒன்றன் பின் ஒன்ருகக் கோரி வசப்பட்டன. வட

இந்தியாவில் மாளவம் நீங்கலாக மற்ற ராஜ்யங்களெல்லாம் அவருக்குக் கீழ்ப்பட்டிருந்தன.

முகம்மது கோரி இவ்வாறு வட இந்தியாவில் முகம்மதிய ராஜ்யத்தை ஸ்தாபித்தார். பிறகு தமது சேனைத் தலைவர்களில் சிறந்தவரான குத்புதீன் என்பவரைத் தமது இந்திய ராஜ்யத்தில் தமக்குப் பிரதிநிதியாயிருந்து ஆண்டுவரும்படி நியமித்துவிட்டுத் தம் சொந்த ஊருக்குத் திரும்பிச் சென்றூர். குத்புதீன் வாலிபத்தில் முகம்மது கோரியிடம் அடிமையாயிருந்தவர்; பிறகு தமது யோக்கியதையால் படிப்படியாக உயர்ந்து சேனைத்தலைவர் பதவியை அடைந்து ராஜப்பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டார்.

முகம்மது கோரி தமது பூர்வீக ராஜ்யத்திற்குத் தலைநகரான கோர் என்னும் பட்டணத்திலேயே இருந்து வந்தார். கி.பி. 1206ஆு அவர் கக்கர் என்னும் முரட்டு ஜாதியார்களுடன் சண்டை செய்யுங்கால் கொல்லப்பட்டார். அவருக்கு ஆண் சந்ததி இல்லாமையால், அவர் இறந்தவுடன் அவர் பிரதிநிதியான குத்புதீனே அவருடைய இந்திய ராஜ்யத்திற்கு அரசராய்விட்டார். அவருடைய கோர் ராஜ்யம் வேறொரு சேனைத்தலைவரால் பிடித்துக்கொள்ளப்பட்டது.

**கஜினி, கோரி ஆகிய இவர்களது படையெடுப்பினுலுண்டான பலன்கள்:**—முகம்மது கஜினியும், கோரியும் நமது

தேசத்தின்மீது படையெடுத்து ஜயித்ததினால் நம் தேசத்தில் முகம்மதிய ஆட்சி நிலையாய் ஸ்தாபிக்கப்பட்டது.

குத்புதீன்

இந்தியாவில் இஸ்லாம் மதம் அபிவிருத்தியடைந்து பரவ ஆரம்பித்தது. தவிர நம் தேசத்துக்கும், அதற்கு மேற்கிலுள்ள தேசங்களுக்கும் இடையே வியாபாரமும், போக்கு வரத்தும் விருத்தியடைந்தன. இந்தியாவில்இஸ்லாமியா நாகரிகமும், நடையுடை பாவனைகளும் பரவின.

பயிற்சி

1. முகம்மது கோரி இந்தியாவின்மீது படையெடுத்து வரக் காரணமென்ன? அவருக்கும், பிருதிவி ராஜருக்கும் எந்த இடத்தில் யுத்தம் நடந்தது? அதன் முடிவென்ன?

2. பிருதிவி ராஜருக்குப் பிறகு டில்லியில் ஆண்ட அரசர் யார்?

3. கஜினி, கோரி ஆகிய இவர்களது இந்தியப் படையெடுச்சிகளினால் உண்டான பலன்கள் எவை?

காலக் குறிப்பு :—

கி. பி. 1019 முகம்மது கஜினி கன்னோசியை அழித்தல்
1021 லாகூரை ஜயித்தது
1024 சோமநாதபுரப் படையெடுப்பு
1191 பிருதிவி கோரியை ஜயித்தல்
1192 பிருதிவியின் மரணம், கோரி டில்லியைக் கைப்பற்றல்

1193 கன்னேசி கோரி வசமானது

1206 கோரியின் மரணம், குத்புதீன் டில்லி சுல்தான் ஆனது

## 3. டில்லி சுல்தான்கள்-பால்பன்

கி. பி. 1206 முதல் குத்புதீன் டில்லி நகரிலிருந்து நான்கு வருஷகாலம் ஆண்டு வந்தார். அவர் வாலிபத்தில் முகம்மது கோரியிடம் அடிமையாய் இருந்து பிறகு அரசரானதால், அவருக்கும், அவர் சந்ததியார்களுக்கும் **அடிமை அரசர்கள்** அல்லது **மாமேலுக் சுல்தான்கள்** என்ற பெயர் ஏற்பட்டது. குத்புதீனுக்குப் பின் டில்லியை ஆண்டவர்களில் **அல்டமிஷ், சுல்தானு ரஸியா, நஸீருதீன்** முதலானோர் முக்கியமானவர்கள்.

நஸீருதீன் 20 வருஷ காலம் கி. பி. 1246—1266-ல் ஆட்சி புரிந்தார். அவர் அதிகத் தெய்வ பக்திஉடையவர். இஸ்லாம் வேதமாகிய **கோரான்** புஸ்தகத்தைத் தாமே எழுதுவதிலும், ஜபம் செய்வதிலும் அவர் தமது காலத்தைக் கழித்து வந்தார். ராஜ்ய காரியங்களை எல்லாம் **கியாஸ் உதீன் பால்பன்** என்னும் அவருடைய மந்திரியே கவனித்து வந்தார். பால்பன் ஒரு சிறந்தவீரர். அவர் அக்காலத்தில் இந்தியாவின்மீது படையெடுத்து வந்த **மங்கோலியர்கள்** (மொகலாயர்கள்) என்ற ஓர் முரட்டு ஜாதியாரைத் தோற்கடித்துத் துரத்தினர். நஸீருதீன் கி. பி. 1926-ல் இறந்தார்.

நஸீருதீன்

**பால்பன் கி. பி. 1266—87:** நஸீருதீனுக்குப் பிறகு பால்பனே அரசரானார். அவர் ஆளும் திறமை வாய்ந்தவர்; குற்றம் செய்தவர்களையும், கலகம் செய்தவர்களையும் அவர்கள் அரசாங்க உத்தியோகஸ்தர்களாயினும், தாட்சண்யம் இல்லாமல் கடுமையாகத் தண்டித்தார்; இதனால் நாட்டில் குற்றங்கள் குறைந்தன. அவர் சில காடுகளை அழித்து, அவைகளில் நல்ல ரஸ்தாக்கள் போட்டார். அதனால் தேசத்திலுள்ள கலகக்காரர்களும், மற்றத் துஷ்டர்களும் அவைகளில் ஒளிந்து கொள்ள முடியாமற் போயிற்று. தம் ராஜ்யத்தை அடிக்கடி தாக்கின மொகலாயரைத் தடுப்பதற்காகப் பால்பன் தமது சைனியத்தை நன்றாய்ப் பழக்கி உயர்ந்த நிலையில் வைத்திருந்தார். பால்பனுக்குப் பின் பட்டத்துக்கு வந்தவர் அவர் பேரர் **கைகுபாத்** என்பவர். அப்பொழுது அவருக்கு வயது பதினெட்டு. அவர் குடி முதலிய பல கெட்ட பழக்கங்களுடையவர். கி. பி. 1290-ல் அவரை **ஜலால்உதீன் கில்ஜி** என்ற துருக்கி நாட்டார் ஒருவர் கொலை செய்துவிட்டுத் தாமே சுல்தானானார். அத்துடன் அடிமை வமிச ஆட்சி முடிவடைந்தது.

## பயிற்சி

1. அடிமை அரசர்கள் யார்? அவர்களுக்கு ஏன் அப் பெயர் வந்தது?

2. பால்பனுடைய குணாதிசயங்கள் எவை?

---

## 4. அலாஉதீன் கில்ஜி (1296—1315)

**ஜலால் உதீன்:**—ஜலால் உதீன் கில்ஜி அரசராகும் பொழுது அவருக்கு வயது எழுபது. முதிர்ந்த வயதில் அவர் ஆளத்திறமையற்றுப் பலஹீனராயிருந்தார். அவருடைய பிரபுக்கள் அவருக்கு அடங்காமல் ஜனங்களை மிகவும் துன்புறுத்தி வந்தார்கள். ஜலால் உதீனுடைய சகோதரர் மைந்தரான **அலா உதீன்** என்பவர் மிகவும் சாமர்த்திய முள்ளவர். அவர் அநேகப் பிரபுக்களுடன் சண்டை செய்து அவர்களை அடக்கினர். தக்காணத்திலுள்ள மகாராஷ்டிர நாட்டில் அக்காலத்தில் **தேவகிரி (தௌலதாபாத்து)** என்ற ஒரு நகரம் செழித்திருந்தது. யாதவ வமிசத்தைச் சேர்ந்த **இராமதேவர்** என்பவர் அதற்கு அரசராயிருந்தார். அலாஉதீன் ஜலால் உதீனல் **மாளவ** நாட்டை ஜயித்து வரும்படி அனுப்பப்பட்டார். அலாஉதீன் மாளவத்தை ஜயித்து, அதோடு நிற்காமல் தேவகிரியின் செல்வத்தையும், செழிப்பையும் அறிந்து, சுல்தான் உத்தரவில்லாமலே, கி. பி. 1294-ல் 8000 குதிரைகளடங்கிய ஒரு படையுடன் அந்நகரைத் தாக்கினர்.

அலாஉதீன் கில்ஜி

இராம தேவர் அலாஉதீனை எதிர்க்க முடியாதென்று அறிந்து, டில்லி சுல்தானுக்குக் கப்பம் கட்டி

வர ஒப்புக்கொண்டார். மிகுந்த செல்வத்தோடு அலா உதீன் டில்லிக்குத் திரும்பினர்.

ஜயம் பெற்றுத் திரும்பிவரும் அலாஉதீனை ஜலால் உதீன் எதிர் கொண்டு வர வேற்ருர். அலாஉதீன் மிகுந்த பயத்தோடு இருப்பவர் போலப் பாசாங்குசெய்து, தக்க சமயம் பார்த்து, அவரை வஞ்சகமாகக் கொன்று விட்டார். பின்பு அவர் தாமே டில்லியில் கி. பி. 1296-ல் தானுக முடி சூட்டிக்கொண்டார்.

**சித்தூர் முற்றுகை:**—அலாஉதீன் **கூர்ஜர** நாட்டின் மீது படை எடுத்து அதை ஜயித்தார். பின்னர் அவர் அந் நாட்டு இராணியை விவாஹம் செய்துகொண்டார்.

அலாஉதீன் செய்த வீரச்செயல்களில் **சித்தூர்** முற்றுகை முக்கியமானது. சித்தூர் **மீவார்** நாட்டின் தலைநகர். **பீம்சிங்** என்னும் ராஜபுத்திர மன்னர் அங்கு ஆண்டு வந்தார். அவர் மனைவி **பத்மினி** என்பவள் அக் காலத்துப்பெண்கள் எல்லோரையும்விட அதிக அழ குடையவள். அவள் அழகைக் கேள்வியுற்று அவளை மணந்து கொள்ள விரும்பி, அலாஉதீன் கி. பி. 1303-ல் சித்தூர்க் கோட்டையை முற்றுகையிட்டார். அதை ஜயிக்க முடியாமல் இருபது முறை அவர் மீண்டும் மீண் டும் முயன்ருராம்.

கடைசியாக அவர் தமது முழுப் பலத்தையும் உப யோகித்துச் சித்தூரின்மேல் படையெடுத்து வந்தார். அது சமயம் ராஜபுத்திரர்கள் தோல்வியடைவார்க

ளென்பது தோன்றிற்று. உடனே பத்மினியும் மற்ற ராஜ புத்திர ஸ்திரீகள் எல்லோரும் தமது உயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு, தீ வளர்த்து, அதில் வீழ்ந்து மடிந்தனர். ராஜ புத்திரர் எல்லோரும் போர்க்களத்தில் மாண்டனர். இந்தப் பிரபலமான சண்டையில் ஒரு சிறு ஆண் குழந்தை தவிர, ராஜ புத்திர ஆண் பெண் எல்லோரும் மடிந்ததாகச் சொல்லப்படுகிறது.

**தக்காணத்தின்மீது படையெடுப்பு:**—அலாஉதீன் தக்காணத்தை ஜயிக்க எண்ணி, கி. பி. 1307-ல் **மாலிக்காபூர்** என்னும் தம் தளகர்த்தர் வசம் ஒரு பெரிய சேனையை அனுப்பினர். மாலிக்காபூர் மூன்று வருஷம் சுல்தானுக்குக் கப்பங் கட்டாமல் பாக்கி வைத்திருந்த தேவகிரி அரசரை அடக்கி, அவரிடமிருந்து ஏராளமான பொன், வெள்ளி, குதிரைகள், யானைகள் முதலியவற்றைப் பிடுங்கிக்கொண்டார். அதன் பின்பு அவர் **வாரங்கலில்** இருந்த தெலுங்கு ராஜ்யத்தின்மேல் படையெடுத்து, அதையும் ஜயித்தார்; பின்னர் மைசூர் நாட்டின் தலை நகரான **துவார சமுத்திரத்தைக்** கைப்பற்றினர். அவர் பின்னும் தெற்கேசென்று, பாண்டியநாட்டில் பல ஆலயப் பொருள்களையும், ஏராளமான செல்வத்தையும் கவர்ந்து, இராமேஸ்வரம் வரை சென்று, மிகுந்த திரவியத்தோடு டில்லிக்குத் திரும்பினர். டில்லியில் அதுவரை யாரும் கண்டிராத அவ்வளவு திரவியங்கள் இந்தத் தக்காணப் படையெழுச்சியில் காபூரால் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டன.

**அலாஉத்தீனுடைய குணாதிசயங்கள் :—** இந்தியா முழுவதை யும் ஜயித்து ஆண்ட முதல் முகம்மதிய சுல்தான் அலா உத்தீனே யாவர். இந்திய ஸ்திரீயை மணம் செய்து கொண்ட முதல் முகம்மதிய அரசரும் அவரே. அவர் மிகுந்த பராக்கிரமமும், தைரியமும் உடையவராயிருந்த தால், அவருக்குக் கீழிருந்தவர்கள் ஒழுங்காய் நடந்து வந்தார்கள். அவர் கல்வி கேள்விகளில் சிறந்தவர் ; பாரசீக பாஷையில் தேர்ச்சி பெற்றவர் ; அநேக வித்து வான்களை ஆதரித்தார்; அழகிய கட்டிடங்கள் கட்டினார்.

அவர் மதுபானம் செய்வதில்லை; பிரஜைகளும் அப்படியே நடக்க வேண்டுமென்று சட்டம் செய்தார் ; எல்லாப் பொருள்களும் எப்போதும் தாழ்ந்த விலைக்கு விற்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டார். மீறி நடந்தவர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

அலாஉத்தீன் காலத்தில் மங்கோலியர்கள் அடிக்கடி படையெடுத்து வந்தார்கள். அவர் அவர்களுடன் போராடி அவர்களைத் துரத்தினார். இந்தியாவில் தங்கி யிருந்த பல மங்கோலியர்களையும் அவர் ஒரே முறை யில் வாளுக்கு இரையாக்கினார்.

அவருடைய அந்தியகாலத்தில் சித்தூரிலிருந்த முகம்மதிய சேனையை ராஜபுத்திரர்கள் விரட்டிவிட்டார் கள். தேவகிரியிலிருந்த முகம்மதியர்களும் துரத்தப்பட் டார்கள். கூர்ஜர தேசத்து ராஜபுத்திரர்கள் கலகம் செய்தார்கள். மாலிக்காபூரே சுல்தானுக்கு விரோதமா



அலாவுத்தீன் இராஜ்யம்
காஷ்மீரம்
ஆப்கானிஸ்தானம்
பஞ்சாப்
ஸ்தானேஸ்வரம்
டில்லி
ஜெயபுரம்
சிந்து
அஜ்மீர்
பாட்னா
காசி
வங்காளம்
சித்தூர்
மாளவம்
குஜராத்
பீரார்
ஒரிஸா
மஹாராஷ்டிரம்
வாரங்கல்
அராபிக்கடல்
வங்காளக்
குடாக்கடல்
துவாரக
சமுத்திரம்
மதுரை

கச் சதியாலோசனை செய்துவந்தார். தம்முடைய ஆட்சியின் கீழுள்ள நாடுகள் சுதந்தரம் பெற்றதையும், தமக்கு அடங்கியிருந்தவர்கள் தன்னை எதிர்த்துக் கலகம் செய்வதையும் எண்ணி மனம் வருந்தி, கி. பி. 1316-ல் அலாஉதீன் உயிர் துறந்தார்.

**கில்ஜி வமிசத்தின் அழிவு** :—அலாஉதீனுக்குப் பின்னுல் அவர்மூன்ரும் குமாரர் **முபாரக்கு** என்பவர் பட்டம் அடைந்தார். அவர் ஆளும் திறமையில்லாதவர். அவருடைய ராஜ்யத்தைக் **குஸ்ரூ கான்** என்பவர் கவனித்து வந்தார். அவர் சிறிது காலத்தில் சுல்தானைக் கொன்றுவிட்டுத் தாமே சிம்மாசனம் ஏறினர். அவருடைய கொடுங்கோன்மையையும், யதேச்சாதிகாரத்தையும் கண்டு சகிக்க முடியாத பிரபுக்கள் அவருக்கு அடங்காது கலகம் செய்தார்கள். அக்காலத்தில் பஞ்சாபில் ஆண்டு வந்த **கியாஸ் உத்தீன் துக்ளாக்** என்பவர் டில்லியின்மேல் படையெடுத்துக் குஸ்ரூ கானைக் கொன்று, தாமே சுல்தானுகச் சிம்மாசனம் ஏறினர்.

பயிற்சி

1. தக்ஷிணத்தைப் படை எடுத்த முதல் முகம்மதிய வீரர் யார் ?

2. அலாஉதீன் சித்தூரை ஏன் முற்றுகையிட்டார்? அது எவ்வாறு முடிந்தது?

3. மாலிக்காபூர் யார் ? அவருடைய தக்காணப் படையெழுச்சியைப் பற்றி எழுதுக.

---

## 5. முகம்மது துக்ளக் (1325-1351) இப்ராஹீம் லோடி (1512-1526)

கியாஸ் உதீன் துக்ளக்கு, ஜனங்கள் எதிர்பார்த்த வண்ணம் நான்கு வருஷம் நீதியாய் அரசுபுரிந்தார். பிறகு அவர் குமாரர் ஜுனு கான் தம் தந்தையைக் கொலை செய்துவிட்டு, **முகம்மது துக்ளக்** என்னும் பட்டத்துடன் சிம்மாசனம் ஏறினர்.

முகம்மது துக்ளக் மிகவும் படித்தவர் ; முரட்டுச் சுபாவமுள்ளவர்; எதற்கும் அஞ்சாதவர்; பிடிவாதக் குணமுள்ளவர்; தம் மனத்தில் தோன்றியதைச் சிறிதும் ஆலோசியாமல் செய்து முடித்துவிடுபவர். இவர் ராஜ்ய வருமானத்தைக் கண்டபடி செலவிட்டார்; பல விதமான வரிகளை விதித்தார். இவர் காலத்திலேயே ராஜ்யம் தாழ்நிலை யடைந்தது.

**தேவகிரியைத் தலைநகராகக் கொண்டது:**—முகம்மது தக்காணத்தில் வாரங்கல் முதலிய நாடுகளை ஜயித்துத் தமது ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். இவர் டில்லியை விட்டு அதற்குத் தெற்கே 800 மைல் தூரத்திலிருந்த தேவகிரியைத் (தௌலதாபாத்து) தலைநகராக்கி, டில்லியிலிருந்த ஜனங்கள் எல்லோரையும் அந்நகரிற் சென்று குடியேறும்படி உத்தரவு செய்தார். ஏழை ஜனங்கள் முகம்மதின் கட்டாயத்தின்மேல் அவ்வளவு தூரம் புறப்பட்டுச் சென்றார்கள். வழியில் பலர் மடிந்து போயினர். எஞ்சியிருந்தவர்கள் தேவகிரியை அடைந்தார்கள். அங்கு வசதி இல்லாததால், முகம்மது

அவர்களை மறுபடியும் டில்லிக்குப் போகும்படி கட்டளையிட்டார். அப்படிப் போனவர்களிலும் பலர் மடிந்தனர்.

சீனுமீது படை எடுத்தது:—முகம்மது துக்ளக், சீனம், பாரசீகம் முதலிய வெளி நாடுகளையும் ஜயிக்க வேண்டுமென்று ஒரு லக்ஷம் குதிரைப்படையைச் சேகரித்து அனுப்பினர். இமய மலையிலுள்ள பனியாலும் குளிராலும் அவ்வீரர்கள் மாண்டார்கள். பிழைத்திருந்த சிலர் சுல்தானிடம் சென்று நடந்ததைத் தெரிவித்தனர். முகம்மது கோபங்கொண்டு அவர்களையும் கொன்றுவிட்டார்.

முகம்மது ஆட்சி செய்துவரும்பொழுது மங்கோலியர்கள் அடிக்கடி படையெடுத்து வந்தார்கள். இவர் அவர்களோடு எதிர்த்துப் போர் செய்ய முடியாமல் ஏராளமான திரவியங்களைக் கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டார். அதனல் பொக்கிஷம் காலியாய்விட்டது. இவர் பொன் நாணயங்களுக்கு உள்ள விலையைச் செம்பு நாணயங்களுக்கு வைத்து, செம்பு நாணயங்களையே ஏராளமாகப் பரவச்செய்தார். இதனல் நாட்டில் செம்புநாணயம் நிறைந்துவிட்டது. அன்னிய தேசத்து வியாபாரிகள் அந்த நாணயங்களை வாங்க மறுத்து விட்டார்கள். மேலும், சிலர் கள்ளத்தனமான அநேக செம்பு நாணயங்களைச் செய்தும் வெளியிட்டனர்.

முகம்மது, செலவிற்குப் பணமில்லாமல், பல கொடிய வரிகளை விதித்தார். வரிகளைச் செலுத்த முடியாத ஜனங்கள் நாட்டைவிட்டுக் காட்டுக்கு ஓடிவிட்டார்கள். முகம்மது அங்கும் சென்று அவர்களை வேட்டையாடிக் கொன்றார்.

இவ்வாறு இவர் காலத்தில் ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஆகையால், அநேக கலகங்கள் ஏற்பட்டன. இவருக்குக் கீழ்ப்பட்டிருந்த வங்காளம், தக்காணம் முதலிய நாடுகள் சுயேச்சை பெற்று விலகிவிட்டன. இவர் ராஜ்யம் க்ஷீணித்தது. மந்திரிகளும் இவருக்கு விரோதமாய்க் கிளம்பினார்கள். தக்காணத்தில் **பாமினி, விஜய நகரம்** என்னும் இரண்டு ராஜ்யங்கள் ஏற்பட்டன. சிந்து நாட்டில் ராஜ புத்திரர்கள் கலகம் செய்தார்கள். இவர் அவர்களை அடக்குவதற்குப் போயிருந்த பொழுது ஜுரங் கண்டு 1351-ல் இறந்தார்.

இவருக்குப் பின் **பிரோஜ்ஷா துக்ளக்** என்பவர் பட்டத்திற்கு வந்து, 37 வருஷம் ஆட்சி புரிந்தார். பல சாலைகள் அமைத்தும், சத்திரங்கள், பாடசாலைகள், வைத்திய சாலைகள் கட்டியும் கால்வாய் வெட்டியும் அவர் ஜனங்களுக்குப் பல நன்மைகளைச் செய்தார். அவர் காலத்தில் நாட்டில் சமாதானம் நிலை நின்றது.

அவருக்குப் பின் வந்தவர்கள் பலமற்றவர்கள். அவர்கள் காலத்தில் தக்காணத்தில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. மாளவம், கூர்ஜரம் முதலிய மாகாணங்கள் சுயாதிகாரம் பெற்றன. அக்காலத்தில் மங்கோலியர், **தைமூர்** என்பவரின் தலைமையின் கீழ் மறுபடியும் இந்தியாவின் மேல் படையெடுத்து வந்தனர். கடைசித் துக்ளக் வமிச அரசர் தோற்கடிக்கப்பட்டார்.

**சையது, லோடி வமிசங்கள்:—** துக்ளக் வமிசம் 1412-ல் முகம்மது ஷாவோடு முடிவடைந்தது. அதன் பின்பு **சையது** வமிசத்தைச் சேர்ந்த நான்கு அரசர்கள் 1451 வரையில் டில்லியில் ஆண்டு வந்தார்கள். அவர்

கள் வல்லமையற்றிருந்ததால், முகம்மதிய ராஜ்யம் சிதைந்துகொண்டே வந்தது. அவர்களுக்குப் பின்னல் லோடி வமிசத்தைச் சேர்ந்த அரசர்கள் தோன்றிச் சுமார் 75 வருஷகாலம் அரசு செலுத்தினர்கள். அவர்கள் ஆப்கானிஸ்தானத்தில் இருந்து வந்த பட்டாணிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். லோடி வமிசத்துக் கடைசி அரசரான இப்ராஹிம் லோடி தமது பிரபுக்களையும் சேனை வீரர்களையும் கடுமையாக நடத்தினர். அதனல் ஜனங்கள் அவரைத் தொலைப்பதற்கு வழி தேடினர்கள். அக்காலத்தில் பஞ்சாபில் தௌலத்கான் என்னும் ஒரு கவர்னர் இருந்தார். அவர் ஆப்கானிஸ்தானத்தில் திறமையுடன் அரசு செலுத்தி வந்த பாபர் என்னும் மொகலாயத் தலைவரை உதவிக்கு அழைத்து, டில்லியின் மேல் படை யெடுக்கச் செய்தார். பாபர் படை யெடுத்து வந்து, 1526-ல் பானிப்பட்டு என்னுமிடத்தில் போர் தொடுத்து, இப்ராஹிம் லோடியைத் தோற்கடித்துக் கொன்ருர். அதோடு லோடி வமிச ஆட்சி ஒழிந்தது. மொகலாய வமிசத்தாரின் ஆட்சி டில்லியில் ஏற்பட்டது.

### பயிற்சி

1. முகம்மது துக்ளக்கின் பிடிவாதச்செய்கைகள் இரண்டு சொல்லுக.

2. டில்லியில் ஆண்ட கடைசி ஆப்கானிய அரசர் யார்? அவரைப் போரில் வென்று ராஜ்யத்தைக் கைப்பற்றினவர் யார்? போர் நடந்த இடத்தையும் காலத்தையும் சொல்லுக.

காலக் குறிப்பு:—

கி. பி. 1266 பால்பன் பட்டத்துக்கு வந்தது
,, 1296 அலாவுதீன் கில்ஜி சிம்மாசனம் ஏறியது

,, 1303 சித்தூர் முற்றுகை
,, 1307 மாலிக் காபூரின் தக்காணப் படையெடுப்பு
,, 1329 முகம்மது துக்ளக்கு செம்பு நாணயங்கள் அச்சிட்டது
,, 1338-39 வங்காளம் முதலிய நாடுகளில் கலகம்
,, 1526 முதலாவது பானிப்பட் யுத்தம்

---

## 6. பாமினி ராஜ்யம்

துங்கபத்திராவின் வடகரையில் **பாமினி** என்ற முகம்மதிய ராஜ்யம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதை ஸ்தாபித்தவர் **ஜாபர்கான்** என்பவர். அவர் பாமன் என்ற பாரஸீக மன்னன் வமிசத்தைச் சேர்ந்தவர். டில்லி சுல்தானிடம் வேலை பார்த்து வந்தார். அவர் சுல்தானுடைய தக்காண ராஜ்யத்தைப் பார்த்து வருவதற்காக ஒரு முறை முகம்மது துக்ளக்கால் அனுப்பப்பட்டார். அப்பொழுது டில்லியிலும், வங்காளம் முதலிய பிற இடங்களிலும், கலகங்களும் குழப்பங்களும் நடந்தன. அச்சமயத்தில் ஜாபர்கானும் தக்காணத்தில் தாமே சுல்தானுனர்; 1346-ல் **ஹாஸன் கங்கு பாமினி** என்ற பட்டம் வைத்துக்கொண்டு முடி சூட்டிக் கொண்டார்; தம்முடைய வமிசத்திற்குப் **பாமினி வமிசம்** என்றும், தமது ராஜ்யத்திற்குப் **பாமினி ராஜ்யம்** என்றும் பெயர் வைத்தார். பாமினி ராஜ்யம் நருமதையிலிருந்து தெற்கே துங்கபத்திரா வரையிலும், மேற்கே அரபிக் கடலிலிருந்து கிழக்கே வங்காளக்குடாக் கடல் வரையிலும் பரவியிருந்தது. ஆரம்பத்தில் **குல்பர்க்கா** நகரம் அதன் தலைநகராயிருந்தது. பின்னல் **பீடார்** நகரம் தலைநகராக்கப்பட்டது.

இந்த ராஜ்யத்திற்கும் இதன் தெற்கிலுள்ள விஜய நகர ராஜ்யத்திற்கும் தீராப் பகைமை ஏற்பட்டுப் பல யுத்தங்கள் நடந்து வந்தன. துங்கபத்திராவுக்கும் கிருஷ்ணுவுக்கும் இடையிலிருந்த செழிப்பான **ரைச்சூர் (முத்கல், ரைச்சூர்** முதலிய நகரங்கள் இருக்கும் இடம்) நாட்டு உரிமை விஷயம் சண்டைகளுக்கு முக்கிய காரணமாயிருந்தது. அலாவுதீன் ஹாஸன் இறந்த பின்னர் பாமினி ராஜ்யத்தை முகம்மது ஷா என்பவர் ஆண்டு வந்தார். அப்பொழுது முதல் சண்டை தொடங்கியது. அது முதல் 200 வருஷ காலம் ஒன்றின் பின் ஒன்ருய்ப் பல யுத்தங்கள் நடந்தன. இரண்டு நாட்டு அரசர்களும் அடிக்கடி மாறி மாறி வெற்றியும் தோல்வியும் பெற்று வந்தார்கள்.

கடைசியில் ஆண்ட பாமினி அரசர் துர்நடத்தையால் ராஜ்யத்தைக் கவனிக்க வில்லை. அதனல், பாமினி ராஜ்யம் சிதறுண்டு, ஐந்து பிரிவுகளாகப் பிரிந்து போயிற்று (1489). **பிரார், பீடார், ஆமது நகர், பீஜப்பூர், கோல்கோண்டா** என்ற இவ்வைந்து பிரிவுகளிலும் ஐந்து சுல்தான்கள் ஆண்டு வரலானர்கள்.

**யூஸப் அடில் ஷா:**—பீஜப்பூரைத் தனியாகப் பிரித்துக்கொண்டு சுதந்திரத்துடன் ஆண்டு வந்தவர் சுல்தான் **யூஸப் அடில் ஷா.** அவர் துருக்கியர். துருக்கிச் சுல்தானயிருந்த அவருடைய சகோதாருக்குப் பயந்து, அவருடைய தாயார் அவரைப் பாரசீகத்திற்கு அனுப்பினர். அங்கே அவர் 17 வயது வரை இருந்து வளர்ந்து, பின்னர் இந்தியாவுக்கு வந்து, பீடாரில் வேலை பார்த்து

வந்தார்; நாளடைவில் பீஜப்பூர்க் கவர்னராகவும் நிய மிக்கப்பட்டார். பின்னர் அவர் தாமே பீஜப்பூருக்குச் சுல்தானுகிவிட்டார்.

அவர் வீரத்திற் சிறந்தவர்; ஒரு சமயம் விஜய நக ரத்தோடு போர் செய்து ஜயம் பெற்ருர்; இந்துக்க ளுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுத்து, கௌரவ மாகவே நடத்தி வந்தார். அவர் பீஜப்பூரில் அழகிய மசூதிகளும் அருமையான பல கட்டிடங்களும் கட்டி இருக்கிருர்; பல வித்துவான்களையும் சித்திர வேலைக் காரரையும் ஆதரித்து வந்தார்.

அவருடைய சந்ததியார் அடில்ஷாஹி வமிசத்தார் என்று வழங்கப்பட்டனர். அவர்களில் ஒருவராகிய அலி என்பவர் பீஜப்பூர் நகரத்தைப் பெரிதாகக் கட்டி, மதில் அமைத்து, பல புத்தக சாலைகள், கலாசாலைகள், மசூதிகள் கட்டினுர்.

பாமினி ராஜ்யத்தின் ஐந்து பிரிவுகளையும் ஆண்டு வந்த சுல்தான்கள் அடிக்கடி தங்களுக்குள்ளே சண்டை இட்டுக்கொண்டார்கள். ஆனுல், அவைகளில் வசித்த முகம்மதியர்களும் இந்துக்களும் ஒற்றுமையாகவும் சுக மாகவும் வாழ்ந்து வந்தார்கள்.

பயிற்சி

1. பாமினி ராஜ்யம் யாரால், எப்பொழுது, எங்கே ஸ்தா பிக்கப்பட்டது?

2. பாமினி ராஜ்யம் சீர் குலையக் காரணமென்ன? இதி லிருந்து பிரிந்த ஐந்து ராஜ்யங்கள் எவை?

3. யூஸுப் அடில் ஷாவைப் பற்றிக் குறிப்பெழுதுக.

## 7. சித்தூர் ராஜபுத்திரர்கள்

இராஜபுதனத்தில் ஏற்பட்டிருந்த ராஜபுத்திர ராஜ்யங்களில் **மீவார்** ராஜ்யம் மிகப் பழமையானது. அந்த ராஜ்யம் 8ம் நூற்றுண்டில் **பாப்பாராவல்** என்ற அரசரால் ஸ்தாபிக்கப்பட்டது. அவரே **சித்தூரை** அதற்குத் தலைநகராகச் செய்தவர். மீவார் அரசர்களுக்கு **மகாராணு** என்ற பட்டம் வழங்கி வந்தது. மற்ற ராஜபுத்திரர்கள் முகம்மதியர்களால் தங்கள் நாட்டை விட்டுத் துரத்தப்பட்டு, வேறு நாடுகளில் போய்த் தங்கினுர்கள். ஆனுல் மீவார் ராஜபுத்திரர்கள் ஆதி முதல் நாளதுவரை அதே நாட்டில் இருந்து வருகிறுர்கள். இயற்கையாய் அமைந்த சித்தூர்க் கோட்டையின் பலத்தினுல், ராணுக்கள் வெகு காலம் வரை முகம்மதியர்களோடு எதிர்த்துப் போராடினுர்கள். அவர்கள் முகம்மதியர்களை ராஜபுதனத்திலிருந்தே துரத்தவும் எண்ணினுர்கள். மற்றைய ராஜபுத்திரர்கள் செய்தது போல, அவர்கள் தங்கள் குடும்பத்துப் பெண்களை முகலாயச் சக்கரவர்த்திகளுக்கு விவாகம் செய்து கொடுக்கவில்லை.

சித்தூர்க் கோட்டையை அலாவுதீன் கில்ஜி கி. பி. 1303வது வருஷத்தில் முற்றுகை செய்து கைப்பற்றினுரென்று முன்னெரு பாடத்தில் படித்திருக்கிறீர்களல்லவா? சில வருடங்களுக்குப் பின் **ராணு ஹமீர்** என்பவர் அதை மறுபடியும் முகம்மதியரிடமிருந்து கைப்பற்றினுர். ஹமீர் ராணுவின் சந்ததியார்கள் மிகுந்த பராக்கிரமசாலிகளா யிருந்திருக்கிறுர்கள்.

## கும்பராணு (1419—1469)

கும்பராணு மீவாரை ஆண்ட காலத்தில் சித்தூர் ராஜ்யம் மிகவும் உன்னதமான நிலைமை அடைந்தது. அவர் தமது ராஜ்யத்தில் அநேக கோட்டைகளைக் கட்டினர். அவர் ராஜஸ்தானி பாஷையை அபிவிருத்தி செய்தார். அவர் மாளவம், குஜராத் என்ற ராஜ்யங்களை ஜயித்து, அதன் ஞாபகார்த்தமாக ஓர் கீர்த்தி ஸ்தம்பத்தை நாட்டினர். அவரது மனைவி **மீராபாய்** என்பவள் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் மிக்க பக்தியுடையவள். அவள் ஸ்ரீ கிருஷ்ணன்மேல் அநேக பாடல்கள் இயற்றியிருக்கிருள். அவைகள் இப்பொழுதும் பக்தியுடன் பாடப்படுகின்றன.

## சங்கிராம சிங்கர் (1509—28)

சங்கிராம சிங்கர் என்ற ராணு மிகவும் பிரசித்தி பெற்றவர். அவர் யுத்தத்துக்குச் செல்லும் பொழுது, அநேக சிற்றரசர்கள் பெரிய யானைப் படைகளோடும் குதிரைப் படைகளோடும் அவரைப் பின்பற்றிப் போருக்குச் சென்றூர்கள். டில்லி அரசர்களோடும், மாளவ அரசர்களோடும் அவர் பதினெட்டு முறை சண்டை செய்து வெற்றி பெற்ரூர். கடைசியாக அவர் பாபர் சக்கரவர்த்தியால் பாத்பூர் சிக்ரி என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டார்.

அவருக்குப் பின் மீவார் ராஜ்யத்தின் ஆதிக்கம் குறைந்தது. குஜராத் அரசரான பகதூர் ஷா என்பவர் 1534ம் வருஷத்தில் சித்தூரை இரண்டாவது முறையாக முற்றுகை செய்து கைப்பற்றினர்.

1567ம் வருஷத்தில் அக்பர் சக்கரவர்த்தி தாமே சேனைகளை நடத்திச் சென்று சித்தூரை முற்றுகை செய்தார். நான்கு மாதங்கள் முற்றுகை நடந்தது. கடைசியில் சித்தூர்க்கோட்டை பிடிக்கப்பட்டதே தவிர ராணு அக்பருக்குக் கீழ்ப்படியவில்லை. அவர் உதய புரி என்ற ஒரு புதிய தலைநகரம் உண்டாக்கிக்கொண்டு, கடைசிவரையில் சுயேச்சையாகவே இருந்தார்.

அவரது குமாரர் **பிரதாப சிங்கர்** சித்தூரை மறு படியும் மொகலாயர்களிடமிருந்து கைப்பற்ற வேண்டு மென்று தீர்மானம் செய்தார். 1579ம் வருஷத்தில் அவருக்கும் **ராஜா மான்ஸிங்** நடத்தி வந்த மொகலாய சேனைக்கும் ஒரு கடுமையான போர் நடந்தது. அதில் ராணு முற்றிலும் தோல்வியடைந்தார். அவரது மலைக் கோட்டைகளை ஒவ்வொன்ருக மூகலாயர்கள் பிடித்துக் கொண்டார்கள். ஆனல் பிரதாபர் விடாமுயற்சியுடன் போர் செய்து, மீவார் ராஜ்யத்தின் பெரும் பாகத் தைத் திரும்பவும் அடைந்தார்.

### பயிற்சி

1. மீவார் ராஜ்யத்தின் தலை நகரம் எது?

3. அலாவுதீன் கைப்பற்றிய சித்தூரை எந்த அரசர் மீண்டும் அடைந்தார்?

3. கும்பராணுவைப் பற்றி உனக்குத் தெரிந்ததைச் சுருக்கிக் கூறு.

4. அக்பர் எவ்விதம் சித்தூரைக் கைப்பற்றினுர்?

## 8. விஜயநகர ராஜ்யம்

**விஜய நகரின் ஸ்தாபனம்:**— முகம்மது துக்ளக் வாரங்கல் நாட்டின்மீது படையெடுத்து ஜயித்தபோது அங்கே ராஜாங்கத்தில் இருந்து வந்த ஹரிஹரர், புக்க ராயர் என்ற இரண்டு சகோதரர்கள் அதை விட்டு வெளியேறித் துங்கபத்திரா நதியின் வடகரையிலிருந்த ஆனகோந்தி என்னும் நாட்டிற்குச் சென்று, அங்கு அரசாட்சி செய்து வந்தனர்.



விஜய நகர சபா மண்டபம்

அக்காலத்தில் வித்தியாரண்யர் (மாதவாசாரியார்) என்ற ஆசாரியஸ்வாமி வாழ்ந்து வந்தார். அவருடைய கடாக்ஷத்தினலும் உபதேசத்தினலும் ஹரிஹரர் துங்கபத்திராவின் தென் கரையில் 1336ல் ஒரு புதிய நகரைக் கட்ட ஆரம்பித்தார். ஹரிஹரர் தமது குருவின் ஞாபகார்த்தமாக அதற்கு வித்தியாரண்ய நகரம் என்று பெயரிட்டனர். அதுவே விஜய நகரம் என்று வழங்கப்பட்டது.

ஹரிஹரருக்குப் பின் அவர் சகோதரர் புக்க ராயர் விஜய நகரத்தை ஆண்டு வந்தார். அவருடைய வமிசம் கி. பி. 1486-ல் முடிவடைந்தது. பின்னால் விஜய நகரத்து அரசருக்குக் கீழ்ப்பட்டிருந்த சாளுவ மன்னராகிய **நரசிம்மர்** விஜய நகரத்தைக் கைப்பற்றி ஆண்டு வந்தார். அவருடைய வமிசம் அந்த ராஜ்யத்தை ஆண்டுவந்த இரண்டாம் ராஜ வமிசம்.

**கிருஷ்ணதேவ ராயர்:—** மூன்றும் வமிசம் துளுவ வமிசம். அதில் மிக்க கீர்த்தி வாய்ந்தவர் **கிருஷ்ணதேவ ராயர்.** அவர் கி.பி. 1509 முதல் 1530 வரையில் செங்கோல் செலுத்தினர். அவர்பட்டத்திற்கு வந்ததும் தம் முன்னோர்களாகிய பழைய அரசர்கள் இழந்துவிட்ட பல நாடுகளை ஜயித்து, விஜய நகரத்துடன் சேர்த்துக் கொண்டார்; புதியனவாகச் சில நாடுகளையும் பிடித்தார். துங்கபத்திரா, கிருஷ்ணா ஆகிய இவற்றுக்கு இடையிலிருந்த ரெய்ச்சூர், முத்கல் ஆகிய இரண்டையும் ஜயித்தார்; தெற்கே தமிழ் நாட்டு மன்னர்களையும் அடக்கித் தமக்குக் கப்பம்

கிருஷ்ணதேவ ராயர்

கட்டிவரும்படி செய்தார்; மதுரையிலும் தஞ்சாவூரிலும் நாயக்க மன்னர்களை ஏற்படுத்தி ஆளும்படி செய்தார்; பின்னல் 1520-ல் பீஜப்பூர் அரசருடன் போர் செய்து அவரைத் தோற்கடித்தார். இவ்வாறு துங்கபத்திரா வுக்குத் தெற்கேயுள்ள நாடனைத்தும் தமக்கு அடங்கி இருக்குமாறு செய்வித்துப் பெரிய ஒரு வெற்றி வீரராக மிகுந்த சிறப்புடன் கிருஷ்ணதேவ ராயர் ராஜாதி ராஜராய் விளங்கிவந்தார்.

அவர் காலத்தில் விஜய நகரத்திற்கு விஜயம் செய்த வெளி நாட்டு வர்த்தகர்களும் யாத்திரிகர்களும், அவரையும் அவர் நகரத்தையும் அவருடைய வெற்றி யையும் பற்றிப் புகழ்ந்து எழுதியிருக்கிறார்கள்.

**கிருஷ்ணதேவ ராயரின் குணங்கள்:**—கிருஷ்ண தேவ ராயர் பார்வைக்கு வெகு அழகானவர். கம்பீரமான தோற்றமும், அரசருக்குரிய மற்ற லக்ஷணங்களும் அவரிடம் அமைந்திருந்தன. அவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்; தெலுங்கில் மகா பண்டிதர்; அப்பாஷையில் கவிகள் எழுதவும் வல்லமை பெற்றிருந்தார்; அவர் சமஸ்தானத்தில் சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகளில் வல்லவர்களாகிய பல பண்டிதர்கள் ஆதரிக்கப்பட்டு வந்தார்கள். அவர் மந்திரிகளாகிய திம்மரசு, பெத்தண்ணு என்பவர்களும் சிறந்த வித்துவான்கள். அவர்கள் அநேக நூல்களை எழுதியுள்ளார்கள்.

கிருஷ்ணதேவ ராயர் வைஷ்ணவ மதத்தில் விசேஷமான பற்றுதலுடையவர்; எனினும், பிற மதத்தினரை வெறுக்கவில்லை. விஜய நகரத்திலும், தென்

னிந்தியாவில் பிற இடங்களிலும் அவர் பல ஆலயங்களைக் கட்டினர்; புகழ் பெற்ற பழைய ஆலயங்களுக்கு மண்டபமும் கட்டி வைத்தார். அவர் கி. பி. 1530-ல் விண்ணுலகடைந்தார்.

**விஜயநகர ராஜ்யம் அழிதல்:**—கிருஷ்ணதேவ ராயருக்குப் பின் ஆண்ட அரசர்கள் திறமையில்லாதிருந்ததால் அவர்கள் காலத்தில் விஜய நகர ராஜ்யம் பலம் குன்றித் தாழ்வடையத் தலைப்பட்டது. பீஜப்பூர் சுல்தான் முன்னர் இழந்துவிட்ட நாடுகளை மறுபடி அவர்களிடமிருந்து பிடித்துக்கொண்டார். சில சிற்றரசர்கள், சுயேச்சை பெற்று, விலக ஆரம்பித்தார்கள். சதாசிவ ராயர் என்னும் அரசருக்கு **ராம ராயர்** என்னும் ஒரு மந்திரி இருந்தார். அரசரைப் பெயரளவில் மாத்திரம் வைத்துவிட்டு, அவரே ராஜ்ய காரியங்களை எல்லாம் தம் இச்சைப்படி நடத்தி வந்தார்.

ராம ராயர் வீரமும் பலமும் பெற்றவர். அவர் முகம்மதியர்களை அவமதித்தார். அவருக்கும் முகம்மதியர்களுக்கும் ஏற்பட்ட மத விரோதத்தினல் முகம்மதிய சுல்தான்கள் தமக்குள் இருந்த மனக் கசப்பையும் உட்பகையையும் விட்டுவிட்டு, அனைவரும் ஒன்று சேர்ந்து, விஜய நகரத்தின்மீது படை எடுத்து வந்தனர்.

1565ஹு, ஜனவரிமீ, **தலைக்கோட்டை** என்னுமிடத்தில் இரு திறத்தாருக்கும் கொடிய யுத்தம் நடந்தது. ராம ராயரின் சேனை மிகப் பெரிதாய் இருந்தது. முதலில் யுத்தம் முகம்மதியருக்கு அனுகூலமாகத் தோன்றவில்லை. ராம ராயரும் யுத்த களத்திலே இருந்து

கொண்டு சைனியங்களை உற்சாகப் படுத்தி வந்தார். அவர் வயது முதிர்ந்தவராயிருந்த போதிலும், தைரியத் துடன் யுத்த முனையில் நின்று போர் நடத்தினர். எனி னும், ராம ராயர் கொல்லப்பட்டார். விஜய நகரச்சேனை ஓடஆரம்பித்தது. முகம்மதியர், விஜயநகரப்போர்வீரர் அநேகரைக் கொன்றனர். வெற்றி பெற்ற முகம்மதியர் கள் விஜய நகரத்துக்குள் நுழைந்து, ஐந்து மாதங்கள் வரையில் அங்குத் தங்கியிருந்து, ஏராளமான பொருள் களைக்கவர்ந்து, அங்குள்ள கோயில்களையும் அரண்மனை களையும் இடித்து, ஊரைப் பாழாக்கினர்கள்.

விஜய நகரம் இருந்த இடத்தில் இப்பொழுது ஹம்பி என்னும் ஒரு சிறு கிராமம் இருக்கிறது. அது பல்லாரி ஜில்லாவில் துங்கபத்திராவின் கரையிலிருக்கின்றது.

**விஜயநகர ராஜ வமிசத்தின் முடிவு:**— ராம ராயரின் இளைய சகோதரர் திருமலை ராயர் என்பவர். அவர் **பேனு கோண்டா** என்னும் இடத்திற்குச் சென்று, ஒரு சிறு ராஜ் யத்தை அமைத்துக்கொண்டு, ஆள ஆரம்பித்தார். பின் னல் அந்த ராஜ்யம் சித்தூர் ஜில்லாவிலுள்ள **சந்திரகிரிக்கு** மாற்றப்பட்டது. திருமலை ராயருடைய வமிசமே விஜய நகர மன்னர்களின் கடைசி ராஜ வமிசம். இந்த வமிசத் துக் கடைசி அரசர் **ஸ்ரீரங்க ராயர்.** அவருடைய கவர்ன ரான சென்னப்பனிடமிருந்து சென்னையில் கோட்டை கட்டுவதற்கு ஆங்கிலேயர் நிலம் வாங்கினர். விஜய நகர அரசருக்கு அடங்கி இருந்த சிற்றரசர்கள் தென்னிந்தி யாவில், மைசூர், தஞ்சை, திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் பல சிறு ராஜ்யங்களை அமைத்து, அவற்றை ஆளத் தொடங்கினர்கள்.




பாமினி-விஜய நகர இராஜ்யங்கள்

## பயிற்சி

1. விஜய நகர ராஜ்யத்தை ஸ்தாபித்தவர் யார்? எங்கு அதனை ஸ்தாபித்தார்?

2. அவ்விராஜ்யத்தை ஆண்ட சிறந்த அரசர் யார்? அவரைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

3. தலைக்கோட்டை யுத்தம் யார் யாருக்கு நடந்தது? எப்பொழுது, ஏன் நடந்தது? அதன் முடிவென்ன?

காலக் குறிப்பு:—

| | | |
|---|---|---|
| கி. பி. | 1303 | சித்தூர்க் கோட்டையை அலாவுதீன் முற்றுகை செய்தல் |
| ,, | 1336 | விஜய நகரம் ஸ்தாபிக்கப்பட்டது |
| ,, | 1346 | பாமினி ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது |
| ,, | 1486 | விஜய நகர முதல் ராஜ முடிவு |
| ,, | 1489 | யூஸுப் அடில் ஷா பீஜப்பூர் சுல்தான் ஆனது |
| ,, | 1509-1530 | கிருஷ்ண தேவ ராயரின் ஆட்சி |
| ,, | 1530-1542 | அச்சுத ராயர் |
| ,, | 1565 | தலைக்கோட்டைச் சண்டை |
| ,, | 1567-1650 | சந்திரகிரியில் விஜய நகர அரசரின் சந்ததியார் |

# மோகலாயரின் ஆட்சி

## 9. மோகலாயர்களின் முதல் படையெடுப்பு (1398)

துக்ளக் வமிசத்துக் கடைசி அரசரான முகம்மது ஷா காலத்தில் மத்திய ஆசியாவிலிருந்து மோகலாயர் (மங்கோலியர்) என்னும் ஒரு ஜாதியார் இந்தியாவின் மேல் படையெடுத்து வந்தார்கள், அவர்களின் தலைவர் தைமூர் என்பவர். அவர் பராக்கிரமும் தைரிய சித்தமும் உடையவர்; துருக்கி ஜாதியைச் சேர்ந்தவர். அவருக்கு ஒரு கால் ஊனம். ஒரு பெருஞ்சேனையுடன் அவர் ஆப்கானிஸ்தானத்தின் வழியாகப் பஞ்சாபிற்கு வந்து, பல நகரங்களை ஜயித்துக்கொண்டு டில்லிக்கு வந்தார். டில்லியில் பயந்து நடுங்கிக் கொண்டிருந்த முகம்மது ஷா, தைமூரை எதிர்த்துத் தோல்வியுற்று ஓடிவிட்டார். தைமூர் ஜயத்துடன் நகரத்திற்குள் புகுந்தார். ஜனங்கள் அவரைச் சிறிது எதிர்த்தார்கள். அதனால் தைமூர் கோபங்கொண்டு, ஜனங்களுடன் போர் புரிந்து வென்றார். இவ்வாறு அவர் இந்தியாவில் பல நாட்கள் தங்கி அளவிட முடியாத திரவியங்களுடன் துருக்கி போய்ச் சேர்ந்தார். அவர் இந்தியாவில் செய்த போர்களினால் ஜனங்கள் வெகுகாலம் தலையெடுக்க முடியாமல் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியன எல்

தைமூர்

லாம் க்ஷீணித்துப் பஞ்சத்தினல் வருந்திப் பல கஷ்டங் களுக் காளானர்கள்.

பயிற்சி

1. மொகலாயர் என்பவர் யார்?

2. முதன் முதலில் இந்தியாவைப் படையெடுத்த மொக லாயர் யார்?

3. அவர் இந்தியாவில் செய்த தென்ன?

---

## 10. பாபர்
### (கி. பி. 1526—1530)

**பாபரின் வாழ்க்கை:—** ஆப்கானிஸ்தானத்திலிருந்து **பாபர்** என்னும் மொகலாயத் தலைவர் படை யெடுத்து வந்தா ரென்று முன்னொரு பாடத்தில் படித்தீர்கள். பாபர் தைமூருடைய வமிசத்தவர்; 1482-ல் பிறந்தவர். அவர் தந்தையார் துருக்கியர்; தாய் மொகலாய ஜாதியைச் சேர்ந் தவள். அவருடைய தந்தை யார் இறந்த பொழுது அவர் ஆண்டுவந்த **பர்கான** என்னும் ராஜ்யம் பாபருக்குக் கிடைத் தது. அப்பொழுது அவருக்கு

பாபர்

வயது பன்னிரண்டு. **ஸாமர்க்கண்டு** என்னும் வேறொரு மா காணத்தை ஆண்டுவந்த அவருடைய சிற்றப்பன் இறந்து போனவுடன் பாபர் அதையும் பிடித்து ஆள முயன்றார்; ஆனல், முடியவில்லை; மேலும், தம் சொந்த நாடாகிய பர்கானவையும் இழந்தார். அதன் பின்பு,

அவர் காபூலே நோக்கி வந்து, 1504ல் அதைக் கைப்பற்றிக் கொண்டு ஆளத் தொடங்கினர். பின்னர், கஜினி, காண்டஹார் முதலிய ராஜ்யங்களையும் அவர் பிடித்துக் கொண்டார்; இந்தியாவின் செல்வத்தைக் கேட்டு, அதன்மேலும் படையெடுக்கச் சமயம் பார்த்திருந்தார்.

**பாபர் செய்த காரியங்கள்:—** இச்சமயம், பஞ்சாபிலிருந்த தௌலத் கானும் இப்ராஹிம் லோடியின் மாமனரான அலாவுதீனும் பாபரை டில்லியின் மேல் படையெடுத்து வருமாறு வேண்டினர். தக்க சமயம் கிடைத்ததென்று அவர் படை எடுத்து வந்தார்.

1526-ல் பானிப்பட்டில் பாபருக்கும் இப்ராஹிம் லோடிக்கும் கடும்போர் நடந்தது. பாபர் பலத்த குதிரைப்படை வைத்திருந்தார்; துப்பாக்கிக் குண்டுகளை உபயோகித்தார். அதனுல் சுல்தானின் சைனியம் முழுதும் அழிக்கப்பட்டு, இப்ராஹிம் லோடியும் களத்தில் மாண்டு போனர். பின்னர் பாபர் வெற்றியுடன் விரைந்து சென்று, டில்லியையும் ஆக்கிராவையும் பிடித்துக்கொண்டார். வட இந்தியாவில் மொகலாய ராஜ்யத்தை ஸ்தாபித்தார்.

இதோடு அவருடைய கஷ்டங்கள் எல்லாம் நீங்கி விடவில்லை. சித்தூர் அரசர் சங்கராம சிங்கர் ஆக்கிராவைத் தாக்குவதற்காகப் புறப்பட்டார். சிக்கிரி என்னுமிடத்தில் அவருக்கும் பாபருக்கும் யுத்தம் நடந்தது. அதில் பாபர் தோல்வியுற்ருர். கான்வாஹா என்னுமிடத்தில் மறுபடியும் ராஜபுத்திர அரசரோடு யுத்தம்செய்து, அவர் வெற்றி பெற்ருர். சங்கராம சிம்மர் யுத்தத்தில் இறந்தார். பின்னர், பாபர், மாளவத்திலிருந்த சாண்டரீ என்னும் கோட்டையையும் மாளவ ராஜ்யத்யையும்

பிடித்துக்கொண்டார். அதன் பின், 1529ல் அவர் பீஹார் மாகாணத்தை ஆண்டு வந்தவரும், தமக்கு இடையூறு செய்து வந்தவருமான லோடி வமிசத்தாரைத் துரத்தி விட்டு, அதையும் ஜான் பூரையும் பிடித்துக் கொண்டார்; பின், வங்காளம் முதலிய வட இந்தியா மாகாணங்கள் பலவற்றையும் ஜயித்து, ஒரு பெரிய ராஜ்யத்தை அமைத்துக்கொண்டு,டில்லி நகரத்தில்அமர்ந்து, ஒரு சக்கரவர்த்தியா யிருந்து அரசாண்டு வந்தார்.

**பாபரின் குணங்கள்:**— வாலிபத்தில் பாபருடைய பெயர் **ஸஹிர் உதீன் முகம்மது** என்பது. அவர் சிங்கம் போன்ற வீரமுடையவராயிருந்ததால், பின்னல், அப்பொருள்படும் **பாபர்** என்னும் பெயர் அவருக்கு உண்டாயிற்று. அவர் மிகுந்த திட காத்திரமும் பலமும் உடையவர். அவர் அறிவிலும் கல்வியிலும் சிறந்து விளங்கினர். அவருக்குக் கவி பாடும் திறமையும் இருந்தது. அவர் தமது சமஸ்தானத்தில் பல கற்றோரை வைத்து, நன்கு ஆதரித்து வந்தார். இந்தியாவில் ஆண்ட முதல் மொகலாயச் சக்கரவர்த்தி அவரே. அவர் கி. பி. 1530ல் காலஞ் சென்றார். அவர் குமாரர் ஹுமாயூன் என்பவருக்கு நோய் கண்டதாயும், பாபர் அந்நோய் தமக்கு வரவேண்டு மென்று கடவுளைப் பிரார்த்தித்ததாயும், அதன்படி ஹுமாயூன் நோயிலிருந்து குணமடைய, பாபர் நோயுற்று இறந்தார் என்றும் சொல்லுகிறார்கள்.

## பயிற்சி

1. பாபர் எங்கு அரசராயிருந்தார்? அவர் இந்தியாமீது படையெடுத்து வரக் காரணமென்ன? பாணிப்பட்டில் நடந்த சண்டையில் அவர் ஏன் எளிதில் வெற்றி பெற்றார்?

டில்லிக்குப் போக முடியாமலும் டில்லியிலுள்ளார் அவருக்கு உதவியாக வர முடியாமலும் பாதைகளை அடைத்துவிட்டார். 1540ல் அவ்விருவருக்கும் பக்ஸா ருக்கருகே ஒரு பெரிய யுத்தம் நடந்தது. அதில் ஹுமா யூன் தோல்வி அடைந்து ஓடினர். அவர் ராஜ்யத்தை இழந்து, உதவி செய்வாரின்றிப் பஞ்சாபிலும் சிந்துவி லும் ஊர் ஊராகத் திரிந்தார்.

**ஸுமாயூன் ஆப்கானிஸ்தானத்தில் அரசராதல்:**—வழியில் ராஜ புதனத்தில் அமரக்கோட்டை என்னும் இடத்தில், 1542ல் அவர் மனைவி ஓர் ஆண் குழந்தையை ஈன்றாள். அக்குழந்தைதான் பின்னல் இந்தியாவில் புகழுடன் சக்கரவர்த்தியாய் விளங்கிவந்த அக்பர். ஹுமாயூன் வடமேற்குக் கணவாயின் வழியாக ஆப்கானிஸ்தானத் தைக் கடந்து பாரசீகம் சென்றார். அவர், பாரசீகத்தில் சில வருஷங்கள் இருந்து, பின்பு அந்த அரசர் உதவி யால் தம் தம்பி காமரானிடமிருந்த காபூலையும் காண்ட ஹாரையும் கைப்பற்றினர்.

**ஷேர்ஷா:**—1540ல் ஷெர்கான் ஹுமாயூனை வென்ற பிறகு, தாமே **ஷேர்ஷா** என்ற பெயர் வைத்துக்கொண்டு டில்லியிலிருந்து ஆளத்தொடங்கினர். அவர் நீதிமான்; ஜனங்களிடம் பக்ஷமாயிருந்து பல நன்மைகள் செய் தார். அவர் பல கால்வாய்களை வெட்டினர்; நாடெங் கும் சுலபமாய்ப் பிரயாணம் செய்வதற்கும் பெரிய ரஸ் தாக்களை அமைத்தார்; குதிரைகள் மூலமாகத் தபால் களை அனுப்புவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தார்; பிரயாணிகளும் மிருகங்களும் தங்குவதற்கு வேண்டிய சத்திரங்களும் மரங்கள் அடர்ந்த பல சோலைகளும்

2. பாபர் மொகலாய ராஜ்யத்தை எவ்வாறு ஸ்தாபித்தார்?
3. பாபரின் குணாதிசயங்களென்ன?

---

## 11. ஹுமாயூன்
### (கி. பி. 1530—1556)

**ஹுமாயூனது கஷ்டங்கள்:**— ஹுமாயூன் 1530ல் டில்லி ராஜ்யத்தைப் பெற்றுச் சிம்மாசனம் ஏறினார். அவர் அரசு புரியத் தொடக்கியது முதல் அவருக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. அவர் முதலில் கூர்ஜரத்தை ஆண்டு வந்த **பகதூர் ஷா**வைத் தோற்கடித்துக் கூர்ஜரத்தையும், அவ்வரசரால் ஜயிக்கப்பட்ட மாளவத்தையும் பிடித்துக்கொண்டார். கூர்ஜர சுல்தான் தந்திரமாய்த் தம் ராஜ்யத்தைத் திரும்ப அடைந்துவிட்டார். அக் காலத்தில் **ஷேர்கான்** என்னும் ஆப்கானியர் கலகஞ் செய்ய ஆரம்பித்தார். அவர் தமது முயற்சியினால் வங்காளத்தைப் பிடித்துக்

ஹுமாயூன்

கொண்டு, அங்கே ஆண்டு வந்தார். ஹுமாயூன் அவருடன் யுத்தம் செய்து, பீஹாரிலுள்ள சுனார்க் கோட்டையைப் பிடித்துக் கொண்டார்; பிறகு வங்காளத்தின் மேல் படையெடுத்துச் சென்றார். ஆனால், ஷேர்கான், மறுபடி சுனார்க்கோட்டையைப் பிடித்துக் கொண்டார்; மேலும், ஹுமாயூன் வங்காளத்திலிருந்து

அமைத்திருந்தார். ஷேர்ஷா, டில்லியில் ஓர் அழகிய மசூதியையும் கட்டி முடித்தார்.

ஷேர்ஷா, ராஜ புத்திரர்களுடன் அடிக்கடி சண்டை செய்துகொண்டே இருந்தார். அப்படி அவர் சண்டை செய்து, ஜோட்பூரையும் சித்தூரையும் பிடித்துக்கொண்டு, 1545ல் **கலிஞ்சர்** என்னுமிடத்தை முற்றுகை செய்த பொழுது, தற்செயலாய் ஒரு துப்பாக்கி வெடித்ததினல் அடிபட்டு உடனே இறந்துபோனார்.

**திரும்பவும் ஹுமாயூன் டில்லி சாம்ராஜ்யத்தைப் பெறுதல்:**—ஷேர்ஷாவுக்குப் பின்பு பட்டத்தை அடைந்தவர்கள் பலவீனர்கள். அவர்கள் காலத்தில் ஆப்கானியர் அடங்காமல் கலகம் செய்து வந்தனர். அதுவே தக்க சமயமென்று காபூலிலிருந்த ஹுமாயூன் பாரசீக மன்னரின் உதவி பெற்று, ஒரு படையுடன் வந்து, லாகூரைப் பிடித்துக்கொண்டு டில்லியை நோக்கி வந்தார். 1555ல் **ஸர்ஹிண்டு** என்னுமிடத்தில் அச்சமயம் ஆண்டு வந்த **ஸிக்கந்தர்ஷா**வைத் தோற்கடித்து, டில்லிக்கு அரசரானர். இவ்வளவு கஷ்டப்பட்டு மறுபடி பிடித்த ராஜ்யத்தை அவர் வெகுகாலம் ஆள்வதற்கில்லை. டில்லியைக் கைப்பற்றிய ஆறு மாதத்திற்குள் (1556ல்) அவர் தமது அரண்மனை மாடிப் படிக்கட்டிலிருந்து தவறி விழுந்து இறந்துபோனார்.

பயிற்சி

1. ஷேர்கான் யார்? அவர் எவ்வாறு டில்லிக்கு அரசரானர்? எவ்வளவு காலம் அரசாண்டார்? அவர் குடிகளுக்குச் செய்த நன்மைகள் என்ன?

2. ஹுமாயூன் தாம் இழந்த நாட்டை எவ்வாறு திரும்பவும் கைப்பற்றினர்.

## 12. அக்பர்

(கி. பி. 1556—1560)

I. **இளமை:**—ஹுமாயூன் இறந்ததும் அவர் குமாரர் அக்பர் பட்டத்திற்கு வந்தார். அப்பொழுது அவருக்குப் பதின்மூன்று வயது. அப்பருவத்தில் ராஜ்ய பாரத்தை வகிக்கமுடியாதல்லவா? அதனால் அவர் அத்தை புருஷரான **பைராம்கான்** என்பவர் அரசாங்கத்தை நடத்தி வந்தார். பைராம்கான் அவருக்கு வாள் வீச்சு, குதிரை ஏற்றம் முதலிய பயிற்சிகளைச் செய்து வைத்தார்.

**அக்பருக்குக் கிடைத்த ராஜ்யத்தின் அளவு:**—அக்பர் பட்டத்திற்கு வந்த போது, அவருக்குச் சொந்தமாயிருந்தவை, டில்லியைச் சுற்றிலும் இருந்த பிரதேசமும், பஞ்சாபுமேயாகும். சிந்து, கூர்ஜரம் முதலிய மாகாணங்களில் பலமுள்ள ஆப்கானிய அரசர்கள் இருந்தார்கள். ராஜபுதனத்திலுள்ள ராஜ புத்திரர்கள் தங்கள் ராஜ்யங்களில் ஆங்காங்கே பலமுள்ள கோட்டைகளைக் கட்டிக்கொண்டு அரசாண்டு வந்தார்கள்.

**அக்பரும் ஆப்கானியரும்:**—அக்பரின் விரோதிகளில் ஹேமு என்பவர் முக்கியமானவர். இவர் ஆப்கானிய அரசனுடைய சேனைத் தலைவர். இவர் ஒரு ராஜ புத்திரர்; வட இந்தியாவில் ஒரு ஹிந்து ராஜ்யத்தை ஸ்தாபிக்க எண்ணி, வங்காளத்தையும் ஆக்கிராவையும் டில்லியையும் கைப்பற்றிக்கொண்டார். அக்பரும் பைராம்கானும் ஒரு பெருஞ்சேனையுடன் இவரைப் **பானிப்பட்டில்** சந்தித்தனர். 1556௵, நவம்பர்௴, 5௳ அக்பருடைய சைனியத்துக்கும் ஹேமுவின் சைனியத்துக்கும் பெரிய

யுத்தம் நடந்தது. ஹெமு தோற்கடிக்கப்பட்டுப் பைராம் கானல் கொல்லப்பட்டார்.

அக்பருக்கு வயது பதினெட்டு ஆனதும், பைராம் கானுடைய கடுமையான குணத்துக்கு அடங்கி நடக்கப் பிரியமில்லாததால், தம் ராஜ்யத்தைத் தம்மிடம் ஒப்பு விக்கும்படி பைராம்கானை வேண்டினர். பைராம்கான் சம்மதிக்காது கலகம் செய்தார். அக்பர் அவரை அடக்கி, மெக்காவுக்குப் போகும்படி செய்து விட்டுத் தாமே அரசரானர். பைராம்கான் மெக்காவுக்குப் போகும் வழியில் ஒரு விரோதியால் கொலை யுண்டு உயிர் துறந்தார்.

**II. அக்பரின் வெற்றிகள்; வட இந்தியாவைத் தம்வசம் ஆக்குதல்:** பொதுவாக எல்லா ராஜபுத்திர அரசர்களும் அக்பருக்குக் கீழ்ப்படிந்தார்கள். மீவார் நாட்டிலிருந்த உதய சிம்மர் மட்டும் எவ்வித சமாதானமும் செய்துகொள்ள மறுத்துவிட்டார். அதனல், அக்பர் உதயசிம்மரின் தலை நகராகிய சித்தூரின் மேல் 1568-ல் படை எடுத்துச் சென்று முற்றுகை செய்தார். உதய சிம்மர் மட்டும் அரவல்லி மலையிலுள்ள வனங்களுக்குள் ஓடிவிட்டார். அவர் பின்னல் உதயபுரி என்னுமிடத்தைத் தலை நகராய் வைத்துக்கொண்டு ஆண்டுவந்தார். அவருடைய குமாரர் பிரதாப சிம்மர் அக்பரோடு 25 வருஷங்கள் யுத்தஞ்செய்து 1580ல் வெற்றி பெற்று, உதயபுரியை முன்போலவே பலப்படுத்திக்கொண்டு அரசாட்சி புரிந்தார்.

இதற்குள் அக்பர் வட இந்தியாவிலுள்ள குஜராத்து, மாளவம், பீஹார், வங்காளம் முதலிய நாடுகளையும், காபூல், காஷ்மீரம், காண்டஹாரையும் ஜயித்துத்

தம் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். இவ்வாறாக அக்பருடைய ராஜ்யம் இந்துகுஷ்ஷிலிருந்து தெற்கில் விந்திய மலை வரையிலும், கிழக்கில் வங்காளம் வரையிலும் பரவிற்று.

**அக்பரும் தக்காணமும்:**—பின்பு அக்பர் தக்காணத்தையும் ஜயிக்கக் கருதினார். அப்பொழுது தக்காணத்தில் **பாமினி** ராஜ்யம் ஐந்து பிரிவுகளாய்ப் பிரிந்திருந்தது. அக்பர் அவற்றுள் வட கோடியிலிருந்த ஆமது

சாந்து பீபி

நகரை முதலில் எதிர்த்தார். அப்பொழுது அங்கே ராஜ்யாதிகாரம் செய்து வந்த சாந்து பீபி என்னும் இராணி

மிகுந்த வீரமும் பலமும் உடையவளாய் இருந்தாள். முதலில் அக்பருடைய குமாரர் மூராத்து என்பவர் இவ்வளவு வீரமுள்ள சாந்து பீபியுடன் எதிர்க்க முடியாதென்று சமாதானஞ் செய்துகொண்டார். ஆனால், மறு வருஷம் அக்பர் தாமே ஆமது நகரத்தை முற்றுகை செய்தார். அவராலும் வெல்ல முடியாதது போலத் தோன்றினது. ஆயினும், சாந்து பீபி விரோதிகளால் கொல்லப்பட்டாள். ஆனதால், ஆமது நகரம் 1600-ல் பிடிபட்டது. இதற்குமேல் அக்பர் தக்காணத்தில் வேறு நாடொன்றையும் ஜயிக்கவில்லை. அக்பருடைய அந்திய காலத்தில் அவர் கஷ்டப்படும்படி ஏற்பட்டது. அவருடைய குமாரர் ஜஹாங்கீர் அவருக்கு விரோதமாகக் கலகஞ் செய்தார். 1605-ல் அக்பர் மரணமடைந்தார். அப்பொழுது அவருக்கு வயது அறுபத்து மூன்று.

**அக்பரின் குணாதிசயங்கள்:—** அக்பர் ஒரு சிங்கத்திற்குச் சமமான பலமுடையவர். அவர் குரல் கம்பீரமாயும், பேச்சுத் தெளிவாயும் இருந்தன. அவருக்குப் பாரசீகப் பாஷையும் துருக்கிப் பாஷையும் தெரியும். கால் நடையாகச் செல்லுவதிலும், குதிரைச் சவாரியிலும், வேட்டையாடுவதிலும் அவருக்குப் பிரியம் அதிகம். யுத்தங்களில் அவர் மிக்க நேர்மையுடன் நடந்துகொண்டார். சிறைப்பட்டவர்களை அவர் கொல்வதில்லை; தோற்றவர்களின் நாடுகளைப் பாழாக்கி அழிக்க

அக்பர்


அக்பரது இராஜ்யம்
காபூல்
பிஷாவர்
காஷ்மீர்
சிந்துநதி
முல்டான்
பானிபட்டு
டில்லி
கன்னோசி
ஜான்பூர்
ஆக்ரா
ஆஜ்மீர்
அமர்கோட்டை
சித்தூர்
குவாலியர்
பக்ஸார்
காலஞ்சர்
ஹூக்ளி
குஜராத்
நர்மதாநதி
கான்தேசம்
ஆமதுநகரம்
பம்பாய்
பிடார்
கோல்கொண்டா
பீஜப்பூர்
கிருஷ்ணா
துங்கபத்ரா
காவேரி
பிரமபுத்திராநதி
அராபிக்கடல்
வங்காளக்
குடாக்கடல்

வுமில்லை. அவர் பகைவர்களையும் மதித்து மரியாதை செய்தார். அக்பர் சமஸ்தானத்தில் பல கல்விமான்கள் இருந்துவந்தார்கள். அவர்களுள் மந்திரி பதவியிலிருந்து வந்த **அபுல் பாஜல், அபுல் பெயிஸ்** முதலியோர் முக்கியமானவர்கள். அபுல் பாஜல், **'அக்பர் நாமா'** என்ற அக்பர் சரித்திரத்தை எழுதியுள்ளார். அதில் **'அயினி அக்பரி'** என்னும் பாகத்திலிருந்து அக்பருடைய அரசியலைப் பற்றி நன்ருய்த் தெரிந்து கொள்ளலாம். சித்திரவேலையிலும் சங்கீதத்திலும் அவருக்குப் பிரியம் உண்டு.

III. **அக்பரின் மதம்:**-அக்பர் ஆதியில் இஸ்லாம் மார்க்கத்தில் விசேஷப் பற்றுடையவராயிருந்தார்; பின்னல், பல மதத்தினரையும் வரவழைத்து,டில்லிக்குச் சமீபத்திலிருந்த **பாதிப்பூர் ஸிக்கிரியில்** தமது அரண்மனையில் பல உபந்நியாசங்கள் செய்யச் சொல்லிக் கேட்டு, எல்லா மதங்களிலும் உண்மை இருப்பதைக் கண்டார். இந்துக்களும் முகம்மதியர்களும் பேதமில்லாமல் ஐக்கியப்பட்டு அனுசரிக்கத்தக்க ஒரு புதிய மதத்தை அக்பர் உண்டாக்க வேண்டுமென்று முயன்று வந்தார்.

அக்பர் இந்துக்களிடத்தில் மிக்க பிரீதியுடன் நடந்துகொண்டார். இந்துக்களே இந்தியாவில் பெரும்பான்மையோராய் இருந்தனர். அவர்களிலும் ராஜபுத்திரர்கள் விசேஷ பலமும் தைரியமும் வாய்ந்தவர்களாயிருந்தார்கள். அவர்களை விரோதித்துக்கொண்டால், இந்தியாவில் அரசாள்வது கஷ்டமென்பதை அக்பர் நன்கு அறிந்தார். ஆகையால், இந்துக்களின் அன்பையும் ஆதரவையும் அடையும்பொருட்டு அவர்களுக்கு விதித்திருந்த **ஜிஸியா** என்னும் மத வரியை நீக்

கினர். மேலும், ராஜபுத்திர ஸ்த்ரீகளைத் தாமும் மணந்து கொண்டு, தம் குமாரருக்கும் கலியாணம் செய்வித்தார். ராஜபுத்திரர்களும் மொகலாயர்களும் விவாக சம்பந்தம் செய்துகொண்டால், இரு ஜாதியாரும் ஒன்றுபட்டுத் தங்களுக்குள்ள விரோதத்தினின்றும் பகையினின்றும் நீங்குவர் என்பது அவர் எண்ணம். இந்துக்களை உயர்ந்த உத்தியோகத்தில் அவர் அமர்த்தினர். இவ்வாறு இந்துக்கள், அவர் காலத்தில் கஷ்டமின்றி வாழ்ந்தார்கள்.

**IV. அக்பருடைய அரசியல் நிர்வாகம்:**—ராஜ்ய நிர்வாகத்தில் ஒவ்வொரு பகுதியையும் அக்பர் தாமே நேரில் கவனித்து வந்தார். உதவி நிர்வாகஸ்தர்களான **பகவான் தாஸ், ராஜா மான்சிங்கர், பீர்பால், ராஜா தோடர்மால்** முதலியோர் மிகச் சிறந்தவர்கள். தோடர்மால் மகா நிபுணர். அரசாங்க வரவு செலவும், பொருளாதார நிலையும் இவர் கையிலிருந்தன. அவர் ராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு நிலத்தையும் நன்கறிந்து, விளைவுக்குத் தக்கவாறு பல பிரிவுகளாகப் பிரித்து வரி விதித்தார்;

அக்பர் காலத்து நாணயங்கள்.

தீர்வை வசூல் செய்பவர்கள் ஜனங்களைத் துன்புறுத்தாதபடி கவனித்து வந்தார். ஏழைக் குடியானவர்கள் கஷ்டமில்லாமல் விவசாயத்தை நடத்துவதற்கு அரசாங்கத்திலிருந்து வேண்டிய பணம் கொடுத்து உதவப்பட்டது. சிற்சில காலங்களில் வரிகள் வஜா

செய்யப்பட்டு வந்தன. வரிகள் சம்மந்தமான கணக்குகள் யாவும் நன்ருய்க் கவனித்துப் பரிசோதிக்கப்பட்டு ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. அரசாங்கக் (ரிஜிஸ்தர்) கணக்குப் புத்தகத்தைப் பார்த்தால், ஒவ்வொரு நிலஸ்வானுடைய பெயரும், அவன் நிலத்தின் அளவும், விளைவும், செலுத்த வேண்டிய வரியும் தெளிவாய்க் காணப்படும்.

அக்காலத்தில் பாரசீகப் பாஷையே ராஜ பாஷையாய் இருந்து வந்தது. அரசாங்கக் கணக்குகளெல்லாம் பாரசீகப் பாஷையிலேயே எழுதப்பெற்றன. இதனுல், ஹிந்துக்களும் அப்பாஷையைக் கற்றுக்கொண்டார்கள். முகம்மதியர்களும் ஹிந்திப் பாஷையைக் கற்று வந்தார்கள். ஹிந்தியும் பாரசீகப் பாஷையும் கலந்து, உருது என்னும் ஒரு புதிய பாஷை உண்டாயிற்று.

இந்தியாவில் ஆண்ட முகம்மதியச் சக்கரவர்த்திகளில் மிகவும் சிறந்து விளங்கியவர் அக்பரே. அக்பர் கட்டிய ஆக்கிராக் கோட்டை, ஹுமாயூன் சமாதி, ஸிக்கிரியிலுள்ள பெரிய மசூதி முதலியவை சிற்பத்தில் சிறந்த கட்டடங்கள். அவர் காலத்தில் வங்காளத்தில் பல வைஷ்ணவ வித்வான்கள் தோன்றிப் பல நூல்களை இயற்றினுர்கள். **துளசி தாஸர்** இராமாயணத்தை ஹிந்திப் பாஷையில் எழுதி வைத்தார். தமிழிலும் தெலுங்கிலும் பல நூல்கள் வெளி வந்தன.

பயிற்சி

1. பைராம்கான் யார்? அவர் அக்பருக்குச் செய்த உதவி யாது? பைராம்கான் முடிவு எவ்வாருயிற்று?

2. அக்பர் இந்துக்களிடம் எவ்வாறு நடந்து கொண்டார்?

3 அக்பரின் மதக்கொள்கை என்ன?

4. அக்பரின் குணாதிசயங்கள், அரசியல் நிர்வாகம் ஆகிய இவைகளைப் பற்றி எழுதுக.

5. தோடர்மால், அபுல் பாஜல், துளசி தாஸர் ஆகிய இவர்களைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

6. இந்தியா படம் வரைந்து, அதில் அக்பர் ராஜ்யத்தைக் குறிப்பிடுக.

---

## 13. ஜஹாங்கீர்
## (கி. பி. 1605—1627)

**ஜஹாங்கீரின் குணங்கள்:**—அக்பருக்குப் பின் அவருடைய குமாரர் **ஸலீம் ஜஹாங்கீர்** என்னும் பெயருடன் சிம்மாசனம் ஏறினர். அவருக்கு மதுபானத்தில் பிரியம் அதிகம். அவர் பந்து விளையாட்டிலும் பந்தயச் சண்டைகளைப் பார்ப்பதிலும் நடனங்களிலும் காலத்தைக் கழித்து வந்தார், என்றாலும் அவர் நன்றாய்ப் படித்தவர்; தமது ஆட்சியின் ஆரம்பத்தில் பல சிறிய சீர்திருத்தங்கள் செய்தார்; ராஜ்ய காரியங்களை நன்கு கவனித்தார். அவருக்குப் பல ராஜபுத்திர மனைவியர் இருந்தனர், இருந்தும் அவர் **நூர்ஜஹான்** என்னும் அழகிற் சிறந்த ஒரு பாரசீகப் பெண்ணை அவள் கணவனாகிய ஷேர் ஆப்கன் இறந்துபோன பின்னர் மணந்து கொண்டார்.

**நூர்ஜஹான்:**—நூர்ஜஹான் ஒரு பாரசீகப் பெண். அவள் தந்தையார் அக்பருடைய பொக்கிஷதாராயிருந்தார். அச்சமயம் இளவரசராய் இருந்த ஜஹாங்கீர்

அவள் அழகையும் திறமையையுங் கண்டு அவளைக் காத லித்தார். அதையறிந்த அக்பர் அவரைக் கண்டித்து, நூர்ஜஹானை ஷேர் ஆப்கன் என்பவருக்கு மணம் செய் வித்து வங்காளத்திற்கு அனுப்பிவிட்டார். பின்னர், ஜஹாங்கீர் பட்டத்திற்கு வந்ததும், ஷேர் ஆப்கன் இறந்த பின் நூர்ஜஹானை வசப்படுத்திக் கொண்டார்.



ஜஹாங்கீர், நூர்ஜஹான்.

முடிவில் நூர்ஜஹானும் அவரை மணஞ் செய்து கொண்டாள். நூர்ஜஹான் மிகுந்த திறமையுடையவள். ராஜ்ய காரியங்களை எல்லாம் ஜஹாங்கீர் அவள் வசம் ஒப்புவித்து விட்டார். நூர்ஜஹான் திறமையுடன் கல கங்களை அடக்கிக் கண்டிப்புடனும் ஒழுங்குடனும் ராஜ் யத்தை நடத்தி வந்தாள்.

**குஸ்ருவின் கலகம்:**—குஸ்ரு ஜஹாங்கீரின் மூத்த குமாரர். இவர் தாமே சக்கரவர்த்தியாக வேண்டு

மென்று ஆசைகொண்டு தகப்பனுருக்கு விரோதமாகக் கலகம் செய்தார். ஆனுல், ஜஹாங்கீர் கலகத்தை அடக்கிக் குஸ்ருவையும் சிறையிலிட்டு, அவரது கண் களேயும் கெடுத்துவிட்டார். இதற்குப் பின் குஸ்ரு தம் சகோதரர் குர்ரத்தின் சூழ்ச்சியால் கொலே செய்யப் பட்டார்.

ஜஹாங்கீரின் ஆட்சியில் வேறு கலகங்களும் ஏற் பட்டன. அவரது மூன்ரும் மைந்தரான குர்ரம் அவரை எதிர்த்தார்; ஆனுல், வெற்றி பெறவில்லே.

நூர்ஜஹானுக்கு அவளது முதல் கணவராகிய ஷெர் ஆப்கனிடம் பெற்ற ஒரு பெண் இருந்தாள். அவளே ஜஹாங்கீரின் வேரொரு மனேவியின் குமார ரான **ஷாரியர்** என்பவருக்கு மணம் செய்வித்துத் தன் மருமகனுக்கே பட்டம் கட்டவேண்டுமென்று நூர்ஜ ஹான் சூழ்ச்சிகள் செய்தாள். இதனுலேதான் குர்ரம் ஜஹாங்கீரை எதிர்த்தார். குர்ரம் தோல்வியுற்ற போதிலும் நூர்ஜஹான் எண்ணம் நிறைவேற வில்லே.

ஜஹாங்கீரின் சேனுதிபதியாகிய மகபத்கானும் நூர்ஜஹானிடம் பொருமையால் அரசரை எதிர்த்து, அவரைச் சிறைப்படுத்தினன். ஆனுல், நூர்ஜஹான் மிகவும் தந்திரமாகத் தன் கணவரை மீட்டு, மஹபத் கானேத் தோற்கடித்தாள்.

**ஆங்கிலேயர்கள் விஜயம்:**—ஜஹாங்கீர் காலத்தில் இங் கிலாந்து அரசராகிய முதலாம் ஜேம்ஸ் என்பவர் **ஸர் தாமஸ் ரோ** என்பவரை ஜஹாங்கீர் சமஸ்தானத்துக்கு

ராஜ தூதராக 1615ல் அனுப்பி இருந்தார். ரோ ஜஹாங்கீரால் வரவேற்கப்பட்டார்; ஆங்கிலேயர்கள் இந்தியாவில் தங்கி வியாபாரம் செய்து வருவதற்குச் சக்கரவர்த்தியிடம் சில சுதந்திரங்களைப் பெற்ருர். அவர் மூன்று வருஷம் அவ்வரண்மனையில் தங்கியிருந்தார். அவர் அக்காலத்துச் சரித்திரத்தை மிக விவரமாக எழுதி வைத்திருக்கிருர்.

ஜஹாங்கீர் 1627ல் மரணமடைந்தார். அவர் காலத்திலேயே அவருடைய மூத்த குமாரர் இருவரும் ஒருவர்பின் ஒருவராய் இறந்து போயினர். ஆகையால் அவருடைய மூன்ரும் மைந்தரான குர்ரம், ஷாஜஹான் என்னும் பெயருடன் சிம்மாசனமேறினர்.

பயிற்சி

1. ஜஹாங்கீரின் குணுதிசயங்களெவை?

2. நூர்ஜஹான், குஸ்ரு, மகபத்கான் ஆகிய இவர்களைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

4. ஜஹாங்கீர் காலத்தில் இந்தியாவுக்கு வந்த ஆங்கிலத் தூதர் யார்? அவர் எதற்காக வந்தார்?

## 14. ஷாஜஹான்
### (கி. பி. 1627—1658)

ஷாஜஹான் காலத்தில் மொகலாய ராஜ்யம் மிக்க செழிப்பான நிலையை அடைந்தது. எங்கும் அதிகமான செல்வம் பொங்கிச் செழிப்பாயிருந்தது. ஷாஜஹான் பட்டத்திற்கு வந்ததும், தம் சகோதரர் ஷாரியரையும் அவர் குழந்தைகளையும் கொன்று, ராஜ்யத்திற்குத் தம்மைத் தவிர வேறு வாரிசு இல்லாமல் செய்துகொண்

டார். அவருடைய தாய் ஒரு ராஜபுத்திரப் பெண். தந்தையாரும் ராஜபுத்திரஸ்திரீக்குப் பிறந்தவரல்லவா? அதனுல், அவரிடம் ராஜபுத்திர குணங்களே மிகுதியும் காணப்பட்டன. அவர் நூர்ஜஹானை அன்புடன் நடத்தி, உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தார். அவர்



ஷாஜஹான், மும்தாஜ்மஹால்

மதுபானம் செய்வதில்லை. வாலிபத்தில் அவர் தைரியமுள்ள யுத்த வீரராயிருந்தார். பிற்காலத்தில் அவர் கட்டிடங்கள் கட்டுவதிலும், நகரங்கள் அமைப்பதிலும் ஈடுபட்டு, என்றும் அழியாத பெரும் புகழைச் சம்பாதித்துக் கொண்டார்.

**அழகான கட்டிடம் தாஜ்மஹால்:—** நூர்ஜஹானுடைய சகோதரர் மகளான மும்தாஜ் மஹால் என்னும் அழகில் சிறந்த நங்கையை ஷாஜஹான் மணந்திருந்தார். அவளிடம் மிக்க அன்பு கொண்டிருந்தார். சில வருஷங்

களில் மும்தாஜ் மஹால் இறந்து விட்டாள். அவளுக்கு வாக்கு அளித்தபடி அவள் இறந்த பின் அவர் வேறு விவாகம் செய்துகொள்ளவே இல்லை. அவள் ஞாபகார்த்தமாக அவளை அடக்கம் செய்த இடத்தில் உலகப் பிரசித்தியா யுள்ளதும் மிகவும் அற்புதமானது மாகிய தாஜ் மஹால் என்னும் ஒரு கட்டிடத்தை அவர் கட்டினர். அது ஆக்ரா நகரில் யமுனை நதிக்கரையில் உள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் உலகத்தின் பல பாகங்களிலிருந்து வந்து அதைப் பார்த்து அதிசய மடைந்து செல்கின்றார்கள். அது போன்ற ஓர் அழகிய கட்டிடம் உலகத்தில் வேறு எங்கும் இல்லை.



தாஜ் மஹால்.

தாஜ் மஹால், இரத்தினங்கள் இழைக்கப்பட்ட பலவித வர்ணமுள்ள சலவைக் கற்களால் கட்டப் பெற்றிருக்கின்றது. அதிலுள்ள சாளரங்களிலும் சுவர்களி

ளுடைய பெயர் தாரா, ஷுஜா, ஒளரங்கஸீப், மூராத் என்பன. அவர்களுள் தாரா தம் தகப்பனுருடன் ராஜ்ய காரியங்களைப் பார்த்து வந்தார். அவருக்கு இந்துக்களிடம் பிரியமுண்டு. ஷுஜா வங்காளத்தில் ராஜப் பிரதிநிதியாயிருந்தார். ஒளரங்கஸீப் தக்காணத்திலும், மூராத் கூர்ஜரத்திலும் ராஜப்பிரதிநிதிகளாய் இருந்தார்கள். 1657-ல் ஷாஜஹானுக்கு நோய் கண்டது. உடனே அவருடைய நான்கு பிள்ளைகளும் ராஜ்யத்திற்காகச் சண்டை செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களில் ஒளரங்கஸீப் தந்திரசாலி. அவர் தமக்கு ராஜ்யத்தில் ஆசையில்லை என்றும், தாம் மெக்காவிற்கு யாத்திரை செல்லவே விரும்புவதாகவும் சொல்லித் தம் தம்பி மூராதை ஏமாற்றித் தம் பக்கம் சேர்த்துக்கொண்டார். அவருக்கும் மற்றைச் சகோதரர்களுக்கும் சண்டைகள் நடந்தன. தாராவும் ஷுஜாவும் தோற்கடிக்கப் பட்டார்கள். அவர்கள் இறந்ததின் பின்னர் ஒளரங்கஸீப் மூராதை வஞ்சகமாய்க் கொன்று, நோயுற்ற ஷாஜஹானையும் உடனே சிறைப்படுத்தி 1658-ல் சிங்காதனம் ஏறினர்.

ஷாஜஹான் முப்பது வருஷம் ஆட்சி புரிந்து, கடைசியில் இவ்வாறு தம் மைந்தராலேயே சிறையில் வைக்கப்பட்டு, ஏழு வருஷத்துக்குப் பின்பு, சிறைச் சாலையிலேயே மாண்டார்.

### பயிற்சி

1. ஷாஜஹான் அரசாட்சி எவ்வாறு மேன்மையுற்றிருந்தது?

2. ஷாஜஹான் குமாரர்கள் யார்? அவர்களில் அவருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்தவர் யார்? அவர் எவ்வாறு பட்டத்துக்கு வந்தார்?

லும் பலவித நுணுக்கமான சித்திர வேலைகள் செய்யப் பட்டிருக்கின்றன. அது முப்பது லக்ஷ ரூயாய் செலவில் முப்பது வருஷங்களில் கட்டி முடிக்கப் பெற்றதாம். இவ்வளவு அருமையான அழகு நிறைந்த கோரியைக் கட்டிய சிற்பிகளின் திறமையை அளவிட்டுச் சொல்ல முடியாது. அதைச் சுற்றிலும் தோட்டங்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன. காலை வேளைகளிலும் மாலை வேளைகளிலும் வெவ்வேறு சமயங்களிலும் அதைச் சென்று பார்த்தவர்கள் அதைப் பலவிதமாக வருணித்து எழுதியிருக்கிறார்கள்.

அதைத் தவிர ஷாஜஹான் வேறு சில கட்டிடங்களையும் கட்டியுள்ளார். டில்லியிலுள்ள ஜும்மா மசூதியும், திவானிகாஸ் என்னும் 'பூலோக சுவர்க்க'மும் அவரால் கட்டப்பெற்றவை. ஆக்கிராவில் முத்து மசூதியையும் அவர் கட்டியுள்ளார். கோடிக்கணக்கான பொருட் செலவில் அவர் ஒரு மயிலாசனம் செய்து வைத்திருந்தார். டில்லிக்கு அருகில் ஷாஜஹானுபாத்து என்னும் ஒரு நகரமும் அவரால் கட்டப்பெற்றது. அதன் சுற்றளவு ஒன்றரை மைல். நகரைச் சுற்றி 60 அடி உயரமுள்ள ஒரு கோட்டை இருந்தது. நகருக்குள்ளே நீராடுவதற்குரிய இரமணீயமான ஸ்தலங்களும், மண்டபங்களும், மசூதிகளும், நந்தவனங்களும் அமைக்கப்பட்டிருந்தன. அங்கே இருந்த சலவைக்கல்லாற் செய்யப்பட்ட வாய்க்காலில் எப்பொழுதும் பளிங்கு போன்ற நீர் ஓடிக் கொண்டே இருந்ததாம்.

**ஷாஜஹான் புதல்வர்கள்:**—ஷாஜஹானுக்கு நான்கு பிள்ளைகள் இருந்தார்கள். வரிசைக் கிரமமாக அவர்க

## 15. ஔரங்கஸீப்
## (கி. பி. 1658—1707)

**ஔரங்கஸீப்பின் குணங்கள்:**—அவர் மிகவும் மதப்பற்றுள்ளவர்; இஸ்லாம் மார்க்கச் சட்டங்களைச் சிறிதும் வழுவாமல் பின்பற்றி வந்தார்; மது மாமிசங்களை அறவே தள்ளிவிட்டார். அவர் சிம்மாசனத்தில் இருக்கும் பொழுது மாத்திரம் உயர்ந்த ஆபரணங்களையும் ஒப்பற்ற ராஜ உடைகளையும் கௌரவமாக அணிந்து கொள்வது வழக்கம். மற்ற நேரங்களில் சாதாரண உடை தரித்தும் சாதாரண உணவு அருந்தியும் வந்தார்.

ஔரங்கஸீப்

பட்டத்திற்கு வரும்பொழுது அவருக்கு வயது நாற்பது. சுமார் ஐம்பது வருஷ காலம் அவர் ஆட்சி புரிந்தார். தாக்ஷண்யமில்லாமல் நீதி செலுத்துபவர் என்று அவர் புகழப்பட்டிருக்கிறார். இவ்வளவு நற்குணங்கள் வாய்ந்த ஔரங்கஸீப் காலத்திலேயே மொகலாய ராஜ்யம் க்ஷீணிக்கத் தலைப்பட்டுவிட்டது.

ஔரங்கஸீப் அதிக மதப்பற்று உடையவராயினும், பிற மதத்தினரிடம் கொஞ்சமும் விரோதங் கொள்ளவில்லை. அக்பர் காலத்தில் போலவே இவர் காலத்திலும் ராஜபுத்திரர்களும் இந்துக்களும் பெரிய உத்தியோகங்களை வகித்தனர். ஆனால் அக்பரைப் போல இவர் விவாக சம்பந்தங்கள் வைத்துக்கொள்ளவில்லை; ஜிஸியா வரியையும் திரும்ப விதித்தார். இதற்கு

ஒரு உ-தாரணம் உண்டு. ஜனங்களுக்குப் பொதுவாக இவர் பல கடினமான வரிகளைத் தள்ளி யிருந்தார். அதனால் அரசிறை குறைந்தது. வருமானத்தை வேறு வழிகளில் அதிகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால் தான் அவர் இவ்வரி விதித்தார்; வேறு மதத்துவேஷ புத்தியாலல்ல.

எனினும் ராஜபுத்திரர்களும்இந்துக்களும் ஔரங்கஸீப்பிற்கு விரோதமாகக் கலகம் செய்தனர். காரணம் என்ன வென்றால் ராஜபுத்திர ராஜ்ஜியங்களை ஔரங்கஸீப் ஜயித்துத் தம் ராஜ்ஜியத்தைப் பெருக்க நினைத்தார். மேலும் அப்பிரதேசங்கள் தம் கைவசமிருந்தால் தான் மேனாட்டு, முகமதிய நாட்டு வியாபாரத்தைச் சரிவர மேற்பார்வையிட முடியும் என ஔரங்கஸீப் எண்ணினார். தங்களது சுதந்திரத்தையும் நாடுகளையும் இழக்க மனமில்லாத ராஜ புத்திரர்கள் விரோதங் கொண்டனர். அவ்வாறே சீக்கியர்களும் மற்ற இந்துக்களும் விரோதிகளாயினர்.

தக்காணத்தில் பீஜப்பூர், கோல்கொண்டா ராஜ்யங்களை ஆண்ட அரசர்கள் மகாராஷ்டிரர்களுக்கு உதவி செய்ததாலும், அவர்களின் ராஜ்யங்கள் செல்வப் பெருக்குள்ளவையாதலாலும், ஔரங்கஸீப் அவர்களது ராஜ்யங்களின் மேல் படையெடுத்துச் சென்றார். கி. பி. 1685ல் அவர் பீஜப்பூரை முற்றுகையிட்டு, மிகவும் கஷ்டப்பட்டு அதைப் பிடித்துக் கொண்டார். அங்கே ஆண்டு வந்த அடில்ஷா வமிசம் முடிவடைந்தது. பீஜப்பூர் நகரம் அவருடைய வீரர்களால் அழிக்கப்பட்டு, நாசமடைந்தது. பின்னர் ஔரங்கஸீப் கோல்கொண்டாவை எதிர்த்தார். அங்கிருந்த சுல்தானை அபுல் ஹாஸன் திறமையற்றவர். எனினும், சிறந்த வீரர் சிலர் அவரது சைனியத்தில் இருந்தனர். ஔரங்



அவுரங்கசீப் காலத்திய
மொகலாய இந்தியா
காஷ்மீரம்
பெஷாவார்
லாகூர்
டில்லி
யமுனை
கங்கை
ஜோத்பூரம்
ஆக்ரா
கோக்ரா
குவாலியர்
அலஹாபாத்
சந்திர நாகூர்
கல்கத்தா
சித்தூர்
உதையபுரி
உஜ்ஜயினி
நர்மதாநதி
மஹாநதி
தபதி
சூரத்
அவுரங்கபாத்
ஆமதுநகரம்
கோதாவரி
பம்பாய்
பூனா
பீஜப்பூர்
கோல்கொண்டா
கிருஷ்ணா
மசூலிப்பட்டணம்
வங்காளக்
குடாக்கடல்
ஜிஞ்ஜி
மதராஸ்
புதுச்சேரி
அராபிக்கடல்
மாங்களூர்
காவேரி

களாய் விளங்கி, நாளடைவில் அதை வேரறுத்துக் கொண்டே வந்தார்கள்.

ஔரங்கஸீபுக்குப் பிறகு ஆண்ட மொகலாய மன்னர்களில் முக்கியமானவர்கள் பஹதூர்ஷாவும், முகம்மதுஷாவும். முகம்மதுஷா ஆட்சி செய்யும் பொழுது பாரசீக தேசத்தரசரான நாதர்ஷா இந்தியாவின் மேல் படையெடுத்து வந்து, டில்லியை அழித்துவிட்டு, ஷாஜஹானல் செய்யப்பட்ட மயிலாசனத்தையும், கோஹினூர் என்ற வைரத்தையும், ஏராளமான செல்வத்தையும் தமது நாட்டுக்குக் கொண்டுபோனர்.

**ஷாஆலம்:—** மொகலாய சக்கரவர்த்திகளில் ஷா ஆலம் என்பவர் ஒருவர். அவர் சக்கரவர்த்தியாய் இருக்கும் பொழுது வங்காளத்திலிருந்த நவாபு **மீர் காஸிம்** என்பவருக்கும் ஆங்கிலேயருக்கும் பகை ஏற்பட்டது. 1764-ல் **பக்ஸார்** என்னுமிடத்தில் இருதிறத்தாருக்கும் யுத்தம் நடந்தது. ஷா ஆலம் வங்காள நவாபுடன் சேர்ந்து கொண்டார். எனினும், முடிவில் ஆங்கிலேயர் ஜயமடைந்துவிட்டதால், அவர் அவர்களுடன் சமாதானம் செய்து கொண்டார். ஆங்கிலேயர் அவருக்கு 26 லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுப்பதாய் ஒப்புக் கொண்டு, அவரிடமிருந்து வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களில் வரி வசூலித்துக்கொள்ள அனுமதி பெற்றுக் கொண்டனர். அந்த வரிப்பணத்தில் தமக்கு எவ்வித உரிமையுமில்லை என்று ஷா ஆலம் எழுதிக் கொடுத்துவிட்டார்.

அச்சமயம் **மஹதோஜீ ஸிந்தியா** என்ற மகாராஷ்டிர வீரர் அதிக வலிமையுடன் பிரசித்தி பெற்றிருந்தார்.

கஸீப் அவர்களை வஞ்சகமாக வசப்படுத்திக் கொண்டு சுல்தானையும் சிறை செய்தார். அதனால் கோல்கொண்டாவும் அவர் வசப்பட்டது.

**ஔரங்கஸீப்பின் கடைசிக் காலம்:—** பீஜப்பூர், கோல்கொண்டா ராஜ்யங்கள் அழிந்தவுடன், மகாராஷ்டிரர்கள் புதிய பலம் பெற்று முன்னேறினார்கள். அவர்கள் மொகலாய ராஜ்யத்தையே சிதைக்க வழி தேடி வந்தார்கள். ஔரங்கஸீப், சிவாஜியின் குமாரர் சாம்பாஜியையும், அவர் குமாரர் ஸாஹுவையும் பிடித்துச் சிறையிலிட்டார். எனினும், மகாராஷ்டிரர்களின் ஊக்கம் அடங்கவில்லை. நாடெங்கும் கலகங்கள் ஏற்பட்டன. வட இந்தியாவில் சீக்கர் முதலிய ஜாதியார்கள் பிரபலமடைந்து வந்தார்கள். ஔரங்கஸீப் தளர்ந்த காலத்தில் அவர்களை அடக்கத் திறமை இல்லாமலிருந்தார்; அதனால் பெருங்கவலையடைந்து, தமது 90-ம் வயதில் 1707ஹு, மார்ச்சுமீ 4உ ஆமது நகரத்தில் இறந்தார்.

பயிற்சி

1. ஔரங்கஸீப்பினிடமிருந்த நற்குணங்கள் யாவை?
2. ராஜபுத்திரர்கள் ஏன் அவரிடம் விரோதம் கொண்டார்கள்?
3. ஔரங்கஸீப் தக்ஷிண முகம்மதிய ராஜ்யங்களை அழிக்கக் காரணமென்ன? அதனால் அவருக்கு என்ன கஷ்டம் ஏற்பட்டது?
4. ஔரங்ஸீப்பின் கடைசிக் காலத்தில் மொகலாய ராஜ்யத்தின் நிலைமை எவ்வாறிருந்தது?

---

## 16. மொகலாய ராஜ்யத்தின் அழிவு

ஔரங்கஸீப்புக்குப் பின் மொகலாய ராஜ்யம் க்ஷீணித்துக்கொண்டே வந்தது. ராஜபுத்திரர்கள், மகாராஷ்டிரர்கள், சீக்கர்கள், முகம்மதிய சிற்றரசர்கள் ஆகிய எல்லோரும் மொகலாய ராஜ்யத்தின் பகைவர்

அவர் ஷா ஆலத்தைத் தம் வசப்படுத்திக் கொண்டார். இதை அறிந்த ஆங்கிலேயர் ஷா ஆலத்துக்கு அளித்து வந்த உதவிச் சம்பளத்தை நிறுத்திவிட்டனர். ஷா ஆலம் ஒரு சக்கரவர்த்திக்கு உரிய மரியாதையுமின்றி, செல்வமு மிழந்து பரம ஏழையாய் வாழ்ந்து வந்தார். அவரது கஷ்டங்களுக்குக் குறைவில்லை. குலாம் காதர் என்னும் ரோகில்லா வீரர் 1778-ல் டில்லியின் மேல் படையெடுத்து வந்து, அதைப் பிடித்துக்கொண்டு ஷா ஆலத்தைச் சிறைப்படுத்தினர்; அவர் கண்களையும் பிடுங்கிவிட்டார். அதன் பின்னர் ஸிந்தியா 1779ல் டில்லியை மறுபடி வந்து பிடித்துக்கொண்டார். ஷா ஆலம் இவ்வாறு மிகுந்த துன்பங்களை அனுபவித்து 1806ல் இறந்தார்.

**பஹதூர் ஷா:—** அவருக்குப் பின் அவர் மைந்தர் இரண்டாம் அக்பரும், அக்பருக்குப் பின் அவர் மைந்தர் **பஹதூர் ஷாவும்** பட்டத்திற்கு வந்தார்கள். பகதூர் ஷா மொகலாய வமிசத்துக் கடைசிச் சக்கரவர்த்தியாவார். அவரும் பெயரளவில் சக்கரவர்த்தியாயிருந்தாரே ஒழிய எவ்வித அதிகாரமும் அடையவில்லை. 1867-ஆ இந்திய சிப்பாய்கள் ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கலகம் செய்த பொழுது அவர்கள் பஹதூர் ஷாவைத் தங்கள் தலைவராக நியமித்துக்கொண்டார்கள். அந்தக் கலகம் அடக்கப்பட்ட பின்னர், ஆங்கிலேயர் அவரை ரங்கூனில் கொண்டுபோய் வைத்திருந்தார்கள். பஹதூர் ஷா அங்கே 1862ல் மரண மடைந்துவிட்டார். அவரோடு மொகலாய வமிசம் முற்றிலும் அழிந்தது.

**மொகலாய ராஜ்யம் அழிந்ததற்குக் காரணங்கள்:—** பாபரால் ஸ்தாபிக்கப்பட்ட மொகலாய ராஜ்யம் சுமார்

இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் சீர்குலைந்தது. இதற்குப் பல காரணங்களுண்டு. தக்காண முகம்மதிய ராஜ்ஜியங்களை ஜயிப்பதற்கும், மகாராஷ்டிரர்களை அடக்குவதற்கும் சுமார் இருபது வருஷங்கள் ஔரங்கஸீப் தக்காணத்திலேயே இருந்து விட்டார். அச்சமயத்தில் வட இந்தியாவில் குழப்பம் உண்டாகியது. உடனே ராஜபுத்திரர்கள், சீக்கியர்கள், ஜாட்டுகள் முதலானோர் மொகலாய ராஜ்யத்தை எதிர்த்தார்கள் அக்காலத்தில் இந்தியாவில் போக்குவரவு சாதனங்கள் சரியானபடி இல்லை. தேசத்தில் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்குச் செல்லப் பல நாட்களாகும். அதனால் வடஇந்தியாவிற்கு உடனே சென்று அக்கலகங்களை அடக்குவதற்கு ஔரங்கஸீப்பால் முடியவில்லை. தக்காண முகம்மதிய ராஜ்யங்களை ஔரங்கஸீப் அழித்து விட்டபடியால், அவர் வட இந்தியாவில் கலகங்களை அடக்கிக் கொண்டிருக்கும் பொழுது, தக்காணத்தில் மகாராஷ்டிரர்கள் பலம்பெற்று மொகலாய ராஜ்யத்தின்மீது படையெடுத்தனர். இவர்களை உடனே அடக்குவதற்கு ஔரங்கஸீப்பால் முடியவில்லை.

மொகலாயர் இந்தியாவிற்கு வந்தபோது மிகுந்த தீரமும் பலமும் வாய்ந்திருந்தனர். ஏனெனில் அவர்கள் முன் வசித்துவந்த இடம் மலைப்பாங்கானதும் குளிர்ச்சியுமுள்ள தேசம். ஆனால் அவர்கள் இந்தியாவில் உஷ்ணமானதும் செழிப்பானதுமான சமவெளிகளில் குடியேறி விட்டமையால், பலங்குன்றி விட்டார்கள். ஆகையால் போர்த் திறமையும் ஊக்கமும் வாய்ந்த ராஜ புத்திரர்களுடனும் மகாராஷ்டிரர்களுடனும்

சண்டை செய்து வெற்றிபெற இயலா வண்ணம் மொகலாய சைனியம் திறமை யற்றதாயிற்று.

ஔரங்கஸீப் காலத்தில் மொகலாய ராஜ்யம் மிகப் பெரிதாயிருந்தது. இப்பெரிய ராஜ்யத்தை அவரே பிறரை நம்பாமல் நேரில் ஆண்டுவந்தார். அவருக்குப் பின் வந்த மொகலாய அரசர்களுக்கு இப்பெரிய ராஜ்யத்தை அரசாளத் திறமையில்லை. அதனால் இப்பெரிய ராஜ்யம் சிதறுண்டு பலங்குன்றியது.

இவ்வாறு பலவீனப் பட்ட ராஜ்யத்தை நாதர்ஷா, ஆமதுஷாதுரானி முதலான ஆப்கானிய அரசர்கள் படையெடுத்து, நாசஞ்செய்து சென்றார்கள். ஆங்கிலேயர் என்ற ஐரோப்பியர் கொஞ்சங் கொஞ்சமாக நாடுகள் ஜயிக்க ஆரம்பித்துப் பலமடைந்து வந்தனர். இக்காரணங்களால் மொகலாய ராஜ்யம் க்ஷீண தசையையடைந்து, கடைசியில் அழிந்து போயிற்று.

பயிற்சி

1. ஷா ஆலத்தைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

2. கடைசி மொகலாய அரசர் யார்? அவரைப் பற்றிச் சில வரிகளெழுதுக.

3. மொகலாய ராஜ்யம் அழிவுற்றதன் காரணங்கள் யாவை?

காலக் குறிப்பு:

1398 தைமூரின் படையெடுப்பு

1526 பாபர் டில்லியில் சிம்மாசனம் ஏறுதல்

1540 ஷெர்கான் ஹுமாயூனைத் தோற்கடித்து டில்லியைக் கைப்பற்றுதல்

1555 ஹுமாயூன் திரும்பவும் சிம்மாசனம் பெறுதல்

1560 அக்பர் மாளவத்தைக் கைப்பற்றுதல்

1600 ஆமது நகரத்தை அக்பர் பிடித்துக்கொள்ளுதல்

1611 ஜஹாங்கீர் நூர்ஜஹானை மணத்தல்
1622 குர்ரத்தின் கலகம்
1659 ஷாஜஹானைச் சிறையிலிட்டு ஔரங்கஸீப் சிம்மாசனம் ஏறுதல்
1681 ஔரங்கஸீப் தக்காணத்தின்மேல் படையெடுத்தல்
1686-7 ஔரங்கஸீப் பீஜப்பூர், கோல்கொண்டாவைக் கைப்பற்றுதல்
1707 பகதூர் ஷா சிம்மாசனம் ஏறுதல்

---

## 17. மகாராஷ்டிரர்களின் சரித்திரம்

### சிவாஜி (கி. பி. 1627—80)

**மகாராஷ்டிர வமிசங்கள்:**—சாத்பூரா மலைக்குத் தெற்கில் கோவா நகரம் வரையிலும், அரபிக் கடலிலிருந்து கிழக்கே நாகபுரி வரையிலும் உள்ள தேசத்திற்கு **மகாராஷ்டிரம்** என்பது பெயர். அந்நாடு முழுதும் குன்றுகளடர்ந்தது. அதில் வசித்து வந்த ஜனங்கள் மகாராஷ்டிரர்கள். அவர்கள் ஹிந்துக்கள்; அதிக தைரியமுள்ளவர்கள். அவர்களுக்குள் பல பிரிவுகள் இருந்தன. அவர்கள் ஒரே பாஷையைப் பேசி வந்தார்கள்; ராஜபுத்திரர்களைப் போல வீரத்திற் சிறந்து விளங்கினர்கள்; பகைவர்களுடன் ஆவேசத்தோடு போர் செய்தார்கள். அவர்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தி, மாகாராஷ்டிரரை ஒரு ஜாதியாக்கி, அவர்களுக்குச் சுதேச உணர்ச்சியை உண்டாக்கி, மகாராஷ்டிர ராஜ்யத்தை ஸ்தாபித்தவர் சிவாஜி.

**சிவாஜியின் பிறப்பு:**— மகாராஷ்டிரர்களுள் பான்ஸ்லே வமிசத்தில் **ஷாஜி** என்றொருவர் இருந்தார். அவர் மனைவி **ஜீஜி பாய்**. இவ்விருவருக்கும் 1627-ஆம் வருஷத்தில் சிவாஜி பிறந்தார். ஷாஜி பீஜப்பூர் சுல்தானிடம்

வேலை பார்த்துவந்தார். ஷாஜிக்கு ஆமது நகரச் சுல்தானால் அளிக்கப்பட்ட ஜாகீர் ஒன்று புனாவில் இருந்தது. பீஜப்பூர் சுல்தானும் அவருக்குத் தெற்கே தஞ்சாவூரில் ஒரு ஜாகீர் அளித்தார். சிவாஜி புனா நகரத்திலே வளர்ந்து வந்தார். புனா ஜாகீரை மேல் பார்த்து வந்த அவர் தாயும், தாதாஜி கோண்ட தேவர் என்னும் அந்தணரும் அவரை மிகவும் பக்ஷமாய் வளர்த்து வந்தார்கள்.



சிவாஜியின் புரந்தர்க் கோட்டை

**சிவாஜியின் குணங்கள்:**—சிவாஜிக்கு எழுதப் படிக்கத் தெரியாது. சிறு வயதிலேயே அவர் குதிரை ஏற்றம், வாள் வீச்சு, வில் வித்தை, மற்போர் முதலிய பயிற்சிகளில் சிறந்து விளங்கினர். அவர் தாய் அவருக்கு அடிக்கடி இராமாயணம் முதலிய நூல்களிலுள்ள வீரர்களுடைய அற்புதச் சரித்திரங்களைச் சொல்லி வந்தாள்.

துக்காராம் என்ற ஒரு மகான் ஹிந்து மதத்தைப் பற்றிப் பல பிரசங்கங்கள் செய்து வந்தார். இவற்றையெல்லாம் கேட்டு, சிவாஜி அதிக தெய்வ பக்தியும் மதப் பற்றும் உள்ளவர் ஆனார்.

**சிவாஜி மேன்மை அடைதல்:—**ஹிந்து ராஜ்யம் ஒன்று ஸ்தாபிக்க எண்ணிச் சிவாஜியும் அவர் கூட்டத்தாரும் ஆயுதங்களைச் சேகரித்துக்கொண்டு பீஜப்பூர் அரசனுக்குச் சொந்தமான **புரந்தர், டோர்ன, ராய்கர்** முதலிய பிரபலமான கோட்டைகளைப் பிடித்துக்கொண்டனர்.

**சிவாஜியும் பீஜப்பூரும்:—** சிவாஜியை அடக்கும் பொருட்டுப் பீஜப்பூர் சுல்தான் ஷாஜியைச் சிறைப் படுத்தினர். சிவாஜி தம் தந்தையை முதலில் சிறை மீட்டுக் கொண்டார்; பின்னர் சுல்தானுடைய நாடுகளில் சிலவற்றைக் கொள்ளை அடித்தார். பீஜப்பூர் சுல்தான் 1659ல் சிவாஜியைக் கொன்று வரும்படி **அப்ஸல்கான்** என்னும் வீரரை அனுப்பினர். சிவாஜி அவருடைய சேனையை எளிதில் வெல்ல முடியாதென்று கண்டு அப்ஸல்கானுடன் சமாதானம் செய்து கொள்ளுவதாகச்சொல்லியனுப்பி, அவரை நேரில் வந்து தனியே பேச

சிவாஜி

ஏற்பாடு செய்தார். அதன்படி இருவரும் கோட்டை வாயிலில் சந்தித்தனர். அப்ஸல்கான் சிவாஜியை வஞ்சகமாகக் கொல்ல முயன்றபோது, சிவாஜி முன் ஜாக்கிரதையுடன் சென்றிருந்ததால், அப்ஸல்கானைப் புலி நகத்தால் குத்திக்கொன்றுவிட்டார். பின்பு சிவாஜியின் போர்வீரர்கள் சுல்தான் சேனையை எதிர்த்து முறியடித்தார்கள். பீஜப்பூர் சுல்தான் முடிவில் சிவாஜியுடன் சமாதானம் செய்துகொண்டு, அவருக்குக் கொங்கு நாட்டையும் கொடுத்தார். அதுமுதல் சிவாஜியின் பராக்கிரமச் செயலும் புகழும் எங்கும் பரவ ஆரம்பித்துவிட்டன.

**சிவாஜியும் ஔரங்கஸீபும்:—** சிவாஜி தக்காணத்தில் மொகலாயர்களுக்கு உட்பட்ட சில நாடுகளைத் தாக்கினார். சிவாஜியின் புகழையும் பலத்தையும் கேள்வியுற்ற ஔரங்கஸீப், தமக்குப் பகைவர் தக்காணத்திலும் தோன்றிவிட்டார் என அறிந்து, சிவாஜியை அடக்குவதற்குத் தம் மாமனரான **ஷயிஸ்டகான்** என்பவர் வசம் 1663ல் 40,000 குதிரை வீரர்களடங்கிய படையை அனுப்பினார். சிவாஜி தம் சகாக்களுடன் மாறுவேடம் பூண்டு, ஆயுதங்களை மறைத்து வைத்துக்கொண்டு இரவில் ஒரு கலியாண ஊர்வலத்துடன் சென்றார்; ஷயிஸ்டகான் தங்கியிருந்த வீட்டை அடைந்ததும், அதனுள் நுழைந்து அங்கிருந்தவர்களைக் கொன்றார். ஷயிஸ்டகான் தப்பி ஓடிவிட்டார்.

அதன் பின் 1661ல் சிவாஜி ஐரோப்பியரின் பெரிய வியாபார ஸ்தலமாகிய **சூரத்** நகரைத் தாக்கி, ஏராளமான செல்வத்தைக் கொள்ளை கொண்டார். அதற்கடுத்த வருஷம் ஔரங்கஸீப் சிவாஜியை வென்று

வரும்படி மறுபடி ஒரு பெருஞ் சேனையை அனுப்பினர். ஜயசிங்கர், திலவர்கான் என்பவர்கள் அச்சேனையை நடத்தி வந்தார்கள். அவர்கள் புரந்தர்க் கோட்டையை முதலில் முற்றுகை செய்தார்கள். சிவாஜி அவர்களுடன் சமாதானம் செய்துகொண்டு, இருபது கோட்டைகளைச் சக்கரவர்த்தியாருக்குக் கொடுத்துவிடுவதாக ஒப்புக்கொண்டார். பீஜப்பூர் சமஸ்தானத்தில் சௌத் என்னும் வரி வசூலித்துக்கொள்ள அவருக்கு உரிமை கொடுக்கப்பட்டது. பின்பு ஔரங்கஸீபின் அழைப்புக்கிணங்கிச் சிவாஜி டில்லிக்குச் சென்றார். அங்கே தர்பாரில் ஔரங்கஸீப் அவரை மரியாதையான முறையில் வரவேற்கவில்லை. சிவாஜி சினங்கொண்டார். அதனால் அவரை ஔரங்கஸீப் சிறையில் அடைத்து விட்டார். சிவாஜி தந்திரமாகத் தப்பித் தம் கோட்டைக்கு வந்து சேர்ந்தார்.

அதன் பின் ஔரங்கஸீப் ஜோதிபுரத்தரசரைப் படையுடன் அனுப்பி, சிவாஜியுடன் யுத்தம் புரியச் செய்தார். சிவாஜி அவருடன் சமாதானம் செய்து கொண்டார். அதன்படி சிவாஜி ஒரு ராஜா என்று அங்கீகரிக்கப் பெற்றார். சிவாஜியின் குமாரர் சாம்பாஜி 5000 குதிரை வீரர்களுக்குத் தலைவராக நியமிக்கப் பெற்றார். பீராரில் ஒரு ஜாகீரும் அவருக்கு விடப்பட்டது.

**சிவாஜியின் மகுடாபிஷேகம்:**—1674ல் ராய்கார் என்னுமிடத்தில் சிவாஜி மகாராஷ்டிரர்களுக்கு ராஜாவாக மகுடம் புனைந்துகொண்டு சிம்மாசனம் ஏறினர். அவருடைய ராஜ்யம் தெற்கே துங்கபத்திரா நதி வரையில்

பரவியிருந்தது. அவருக்குக் கீழ்ப்பட்ட அரசர்கள் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியாகிய சௌத் வரியைச் செலுத்தி வந்தார்கள். அக்காலத்தில் ஆங்கிலேயர்களும் அவருடன் சமாதானஞ் செய்துகொண்டு, தங்கள் வர்த்தகத்துக்காக மேற்குக் கரையில் சில இடங்களையும் பெற்றுக்கொண்டார்கள். பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்களும் சிவாஜிக்குக் கப்பங் கட்ட ஒப்புக்கொண்டார்கள்.

சிவாஜியின் ஆளுகை:— சிவாஜியின் ராஜ்யம் பதினுன்கு ஜில்லாக்களாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் ஒரு பிரிவுக்குத் தஞ்சாவூர் தலை நகரமாயிருந்தது. அவருக்குக் கீழே எட்டு மந்திரிகள் இருந்தார்கள். அவர்களுள் பிரதான மந்திரிக்குப் பீஷ்வா என்பது பெயர். மந்திரிகள் ராஜாங்க நிர்வாகத்தைச் செவ்வையாய்க் கவனித்து வந்தார்கள். நியாய விசாரணை மிக ஒழுங்காய் நடந்து வந்தது. சிவாஜி பெரிய யுத்த வீரர் மட்டுமல்லர். அவர் நல்லொழுக்கமும் காருணியமும் உடையவர். சிவாஜி ஸ்திரீகளையும் குழந்தைகளையும் துன்புறுத்தியதே இல்லை. இவ்வாறு புகழ் பெற்று அரசாண்டு கொண்டிருந்தபோது, 1680-ஆம் தம் ஐம்பத்து மூன்றாம் வயதில் சிவாஜி காலஞ் சென்றார்.

### பயிற்சி

1. சிவாஜியின் பிறப்பு வளர்ப்பைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லுக.

2. சிவாஜி மகாராஷ்டிரர்களுக்குச் செய்த நன்மை என்ன?

3. சிவாஜியின் நோக்கமென்ன? அதற்காக அவர் எந்த அரசர்களுடன் போர் புரிய நேர்ந்தது?

4. சிவாஜியின் குணாதிசயங்களையும் அரசியலையும் பற்றிச் சுருக்கி எழுதுக.

---

## 18. சிவாஜிக்குப் பின் வந்த அரசர்கள்: பீஷ்வாக்களும் மகாராஷ்டிரத் தலைவர்களின் ஐக்கியமும்

**சாம்பாஜி;**—சிவாஜிக்குப் பின் அவர் குமாரர் சாம்பாஜி பட்டத்திற்கு வந்தார். ஔரங்கஸீப் சாம்பாஜியைச் சிறைசெய்து கொன்றார். சாம்பாஜிக்குப் பின்னால் அவர் குமாரர் சாஹு பட்டத்திற்கு வந்தார். அவர் இன்பப் பிரியர். அவருக்குத் தக்க வயது வராததால், அவருடைய சிறிய தந்தையான **ராஜாராம்** என்பவர் ராஜ்யத்தை நடத்தி வந்தார். ஔரங்கஸீப் சாஹுவையும் சிறையில் அடைத்து வைத்தார். பிறகு மகாராஷ்டிரர்கள் **தாராபாயின்** தலைமையின்கீழ் மறுபடியும் முன்னேறலாயினர். ஔரங்கஸீப்பால் அவர்களை முற்றிலும் அடக்க முடியவில்லை.

**சாஹு:**—ஔரங்கஸீப் இறந்தபின் சாஹு விடுவிக்கப்பட்டுத் திரும்பி வந்தார்; ஆனால், ராஜ்ய பாரத்தை வகிக்கச் சக்தியற்றிருந்தார், அவர் நற்குணமுள்ள ஒரு பிராமணரைப் பீஷ்வாவாக நியமித்து ராஜ்யத்தை அவர் கையில் ஒப்புவித்தார். அப்படி நியமிக்கப்பட்ட முதல் பீஷ்வா (முதல் மந்திரி) **பாலாஜி விஸ்வநாதராவ்.** அவர் 1713 முதல் 1720 வரை ராஜ்ய காரியங்களை

நடத்தி வந்தார். சாஹு பெயரளவில் அரசராயிருந்தாரே யன்றி, உண்மையில் ஆண்டு வந்தவர் பீஷ்வா தான். விஸ்வநாத ராவ் மொகலாயச் சக்கரவர்த்தியான முகம்மது ஷாவுக்கு உதவிசெய்து, காண்டேஷ், ஔரங்கபாத், பீரார், பீடார், பீஜப்பூர், ஹைதராபாத் முதலிய பாகங்களில் சௌத் வரி வசூலித்துக் கொள்ளச் சக்கரவர்த்தியாரிடம் அனுமதி பெற்றார்.

**பாஜி ராவ்:**— பாலாஜி விஸ்வநாதருக்குப்பின் அவர் குமாரர் **பாஜி ராவ்** இரண்டாம் பீஷ்வாவானார். பாஜி ராவ் மிகவும் வல்லமையுள்ளவர்; பெரிய ராஜ தந்திரி. அவர் இந்துஸ்தானமெங்கும் மகாராஷ்டிரர்களின் அதிகாரத்தையும் புகழையும் பரவச் செய்தார், 1736-ல் அவர் டில்லியை ஜயித்து வரும்படி ஒரு படையை அனுப்பினார். ரோஹில்கண்டு, மாளவம், கூர்ஜரம் முதலிய பல ராஜ்யங்களும் மகாராஷ்டிரர் ஆதிக்கத்துக்குட் படுத்தப்பட்டன. அங்கெல்லாம் சௌத் வரி வசூலிக்கப்பட்டது.

**பாலாஜி பாஜி ராவ்:**—பின்பு அவர் குமாரர் **பாலாஜி பாஜி ராவ்** பீஷ்வாவானார். அவர் காலத்தில் ஜனங்கள் பீஷ்வாவையே அரசராக மதித்து வந்தார்கள். சாஹு வயது முதிர்ந்து தளர்ந்து போயிருந்தார். அவர் இறப்பதற்கு முன்பு பீஷ்வாக்களுக்கு மகாராஷ்டிர ராஜ்யத்தை ஆளும் உரிமை முழுவதையும் எழுதிக் கொடுத்தார். பாலாஜி தீக்ஷண்ய புத்தியும், ஆராய்ச்சித் திறமையும் உடையவர். அவர் காலத்தில் மகாராஷ்டிரர்கள் நாலா பக்கங்களிலிருந்தும் சௌத் வரி வசூலித்து வந்தார்.

கள். அவருக்கு ரகுநாத ராவ் என்னும் சகோதரர் ஒருவர் இருந்தார். ரகுநாத ராவ் பெரிய வீரர்; வடக்கேயிருந்த மகாராஷ்டிர சேனைக்கு அதிபதி. அவர் கூர்ஜரம், மாளவம், பஞ்சாப் முதலியவற்றைப் படையெடுத்து ஜயித்தார்.

**மகாராஷ்டிரத் தலைவர்களின் ஐக்கியம்:—** அக்காலத்தில் மகாராஷ்டிர சைனியத்தில் சில பிரதானமான தளகர்த்தர்கள் இருந்தார்கள். மகாராஷ்டிர ராஜ்யத்தை மொகலாயரிடமிருந்து காப்பதற்காக இவர்கள் வெவ்வேறு இடங்களில் தங்கள் அதிகாரத்தை ஸ்தாபித்துக் கொண்டார்கள். **நாகபுரி** ராஜ்யத்தை ஸ்தாபித்தவர் **ரகூஜி பான்ஸ்லே** என்பவர். **பரோடாவை** ஸ்தாபித்தவர் **பிலாஜி கெயிக்வார். இந்தூரைத்** தலைநகராகக் கொண்டு மாளவத்தை ஆண்டு வந்தவர் **மல்ஹார் ராவ் ஹோல்கார். ராணோஜி ஸிந்தியா** என்பவர் **குவாலியரில்** ஆண்டு வந்தார். இவர்கள் தனித்தனி ஒவ்வொருவரும் சமமான அந்தஸ்தும் அதிகாரமும் உடையவர்கள்; தங்கள் இஷ்டப்படி மொகலாய ராஜ்யத்துக்குச் சொந்தமான இடங்களின் மீது படையெடுத்து ஜயித்துக் கொண்டார்கள். நாளடைவில் இவர்களது அதிகாரம் வளர்ந்து விட்டதனால் **பூனாவில்** அரசாண்ட **பீஷ்வா** அவர்களைச் சுயேச்சாதிகாரிகளாக ஒப்புக்கொண்டார். ஆயினும் அவர்கள் தங்களது சுஜாதி அபிமானத்தினால் முதலில் ஒற்றுமையாகவே யிருந்தார்கள். ஆனால் மகாராஷ்டிர ராஜ்யம் ஐந்து பாகங்களாகப் பிரிந்து போய்விட்டதனால், நாளடைவில் அவ்விராஜ்யம் க்ஷீணித்துப் போவதற்கு இதுவே காரணமாயிற்று.

**மூன்றும் பானிப்பட் யுத்தம்:—** அக்காலத்தில் டில்லியின்மீது ஆப்கானியர் படையெடுத்து வந்தனர். நாதர்ஷா இறந்த பின்பு, அவர்குமாரர் **ஆமதுஷா துரானி** என்பவர் ஆப்கானிஸ்தானத்தை ஆண்டு வந்தார். 1747ல் அவர் பஞ்சாபின் மீது படையெடுத்து, மூல்தான், லாகூர் முதலிய பட்டணங்களைப் பிடித்துக்கொண்டார்; 1756-ல் டில்லியைப் பிடித்துக்கொண்டு, ஜனங்களைத் துன்புறுத்தி, அங்கிருந்த செல்வத்தை எல்லாம்கவர்ந்து கொண்டு தம் நாடு சென்றூர். அதன் பின்பு டில்லிச் சக்கரவர்த்தியின் வேண்டுகோளுக் கிணங்கி, மகாராஷ்டிரர்கள் பஞ்சாபின் மீது படையெடுத்து லாகூரைக் கைப் பற்றினர்கள்.

பஞ்சாப் மாகாணம் ஆமதுஷா துரானியைச்சேர்ந்த தல்லவா? ஆகையால், ஆமதுஷா துரானி உடனேபடையெடுத்து வந்தார்; லாகூரைப் பிடித்துக்கொண்டு, அங்கிருந்த மகாராஷ்டிரப் பிரதிநிதியைத் துரத்திவிட்டார். பின்னர் துரானி ஸிந்தியாவையும் ஹோல்காரையும் தோற்கடித்தார்; டில்லியையும் எளிதில் கைப்பற்றினர்.

பீஷ்வா பாலாஜியும் மற்ற மகாராஷ்டிரர்களும் ஒரு பெரும்படையைத் திரட்டினர்கள். அவர்களிடம் ஏராளமான பீரங்கிகளும் இருந்தன. இந்த மகாராஷ்டிர சேனையை ரகுநாத ராவ், பீஷ்வாவின் குமாரர் விசுவாச ராவ், சேனைத்தலைவர் சதாசிவ ராவ் ஆகிய மூவரும் நடத்திக்கொண்டு துரானியை எதிர்க்கச் சென்றூர்கள். இவ்வாறு ஒன்று சேர்ந்த மகாராஷ்டிரப் படை டில்லியை அடைந்தபொழுது அதில் ஒரு லக்ஷத்திற்கு அதிகமான போர் வீரர்கள் அடங்கியிருந்தார்கள்.

துரானி யுத்த சன்னத்தரானார். பானிப்பட் என்னுமிடத்தில் 1761ஆம் ஜனவரி 7ந் இரு திறத்தார்க்கும் கொடிய யுத்தம் நடந்தது. மகாராஷ்டிர வீரர்கள் ஆப்கானியர்களுடைய இடப் பக்கத்தை அழித்து, மத்திய பாகத்திலிருந்தவர்களையும் பின்னிட்டு ஓடும்படி அடித்தார்கள். ஆனால், துரானி பின்னாலிருந்து பதினாயிரம் குதிரை வீரர்களுடன் விரைவாய் ஓடி வந்து, அவர்களைத் தாக்க ஆரம்பித்தார். மகாரராஷ்டிரர்கள் மிகுந்த வீரத்தோடு போர் செய்தார்கள். என்றாலும், ஆப்கானியரை எதிர்க்க முடியவில்லை. லக்ஷக் கணக்கான மகாராஷ்டிரர்கள் சண்டையில் மடிந்தார்கள். ஆப்கானியரே ஜயமடைந்தனர். அந்த மன வருத்தத்தினால் அதே வருஷத்தில் பீஷ்வா பாலாஜி பாஜி ராவ் இறந்து போனார். பீஷ்வாக்களின் அதிகாரம் அழிந்தது. ஆனால் தனித்தனி மகாராஷ்டிர ராஜ்யங்கள் சிறப்புடன் இருந்தன.

வெற்றி பெற்ற துரானி டில்லியிலிருந்து இந்தியாவை ஆண்டுவர ஆசை கொண்டிருந்தார். ஆனால், அவருடைய சேனா வீரர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்ப வேண்டுமென்று பிடிவாதம் செய்தார்கள். அதன்படி அவர் இந்தியாவை விட்டுத் திரும்பிச் சென்றுவிட்டார்.

பயிற்சி

1. பீஷ்வாக்கள் யார்? அவர்கள் எவ்வாறு அரசர்களானார்கள்? முதல் மூன்று பீஷ்வாக்கள் யார்?

2. மூன்றாவது பானிப்பட் யுத்தம் யார் யாருக்கு நடந்தது? அதன் காரணமென்ன? முடிவென்ன?

## 19. பிந்திய பீஷ்வாக்களும், ஆங்கிலேயர்களும்; மகாராஷ்டிர அதிகாரத்தின் அழிவு

பீஷ்வா பாலாஜி பாஜி ராவ் இறந்ததும் அவர் குமாரர் மாதவ ராவ் பீஷ்வா ஆனார். அவருக்குப் பின் அவர் சிற்றப்பன் ரகுநாத ராவும், அவர் சகோதரர் குமாரரான மாதவ ராவ் என்ற குழந்தையும் பீஷ்வா பதவிக்குப் போட்டியிட்டனர். நானபர்னவிஸ் என்ற மகா ராஷ்டிரராஜதந்திரி, குழந்தையாகிய மாதவராவ்பக்கம் சேர்ந்தார். ரகுநாதராவ் ஆங்கிலேயர்களின் உதவி பெற்றார். அக்காலத்தில் வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாயிருந்தார். சில சண்டைகள் நடந்த பிறகு ஆங்கிலேயருக்கும் மகாராஷ்டிரர்களுக்கும் ஒரு உடன் படிக்கை நடந்தது. அதன்படி ஆங்கிலேயர் ஸால் ஸெட்டை அடைந்தனர். ரகுநாத ராவுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டது. மாதவ ராவ் பீஷ்வா ஆனார்.

நானபர்னவிஸ் இறக்கவும், பீஷ்வாவின் அதிகாரம் குறைந்தது. ஸிந்தியா, ஹோல்கார் என்ற மகாராஷ் டிரத் தலைவர்களுக்குள் சண்டை வந்தபொழுது பீஷ்வா ஸிந்தியாவுடன் சேர்ந்துகொண்டார். ஹோல்கார் பீஷ் வாவைப் பூனவிலிருந்து விரட்டினர்; அப்பொழுது வெல்லஸ்லி பிரபு கவர்னர் ஜெனரலாக இருந்தார். பீஷ்வா ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொண்டார். ஸிந்தியா, பான்ஸ்லே, ஹோல்கார் என்ற மகாராஷ்டிரத் தலைவர்கள் ஆங்கிலேயர்களுடன் பல விடங்களில் போர்செய்து தோற்றனர்.

வெல்லெஸ்லி பிரபு இங்கிலாந்து சென்றதும் பீஷ்வா தம் அதிகாரத்தைத் திரும்பப் பெற முயற்

சித்தார். அப்பொழுது ஹேஸ்டிங்ஸ் பிரபு கவர்னர் ஜெனரலா யிருந்தார்.

பீஷ்வா சில சமயங்களில் ஆங்கிலேயருடன் சண்டைசெய்து தோல்வியுற்றார். ஆங்கிலேயர் அவருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துப் பித்தூருக்கு அனுப்பி விட்டனர். ஹோல்காரும், பான்ஸ்லேயும் மறுபடியும் ஆங்கிலேயருடன் யுத்தம் செய்து தோற்றனர். இவ்வாறு மகாராஷ்டிரரின் அதிகாரம் ஒழிந்தது. சடாராவில் சிவாஜியின் சந்ததியார் ஒருவர் பெயரளவில் அரசராக்கப்பட்டார். பீஷ்வாவின் நாடுகளெல்லாம் பம்பாய் இராஜதானியில் சேர்ந்தன.

பயிற்சி

1. ஆங்கிலேயர்களுக்கும் மகாராஷ்டிரர்களுக்கும் என்னென்ன சண்டைகள் நடந்தன? அவைகளின் முடிவு என்ன?

2. மகாராஷ்டிரர்களின் அதிகாரம் எவ்வாறு அழிவுற்றது?

காலக் குறிப்பு:—

கி. பி. 1659 சிவாஜி அப்ஸல்கானைக் கொன்றது
,, 1664 சிவாஜி சூரத் நகரைத் தாக்கியது
,, 1674 சிவாஜி சிம்மாசனம் ஏறியது
,, 1714 பாலாஜி விஸ்வநாத்-முதல்பீஷ்வா
,, 1720 பாஜி ராவ்-இரண்டாவது பீஷ்வா
,, 1740 பாலாஜி பாஜிராவ்-மூன்றாவது பீஷ்வா
,, 1761 மூன்றாவது பானிப்பட் யுத்தம்
,, 1817 கடைசி மகாராஷ்டிர யுத்தம்

## 20. சீக்கியர்கள்.

**சீக்கியரின் எழுச்சி; குரு நானக்:—** சீக்கிய மத ஸ்தாபகரான குரு நானக் என்பவர் 1470ல் பஞ்சாபில் அவதரித்தார். அவர் கடவுள் ஒருவரே என்றும், ஹிந்துக்களும் முகம்மதியர்களும் வேற்றுமை இல்லாது அவரை வழிபட வேண்டுமென்றும் உபதேசித்தார். அவருக்கு அநேக சிஷ்யர்கள் ஏற்பட்டார்கள். அவர்களுக்குச் சீக்கியர்கள் (சிஷ்யர்கள்) என்பது பெயர். நானக் தேவர் 1539-ல் பரகதியடைந்தார்.



குரு நானக்

அவருக்குப் பின் ஒருவர் பின் ஒருவராய்ச் சில குருமார்கள் ஏற்பட்டுச் சீக்கியர்களுக்குத் தலைமை வகித்து உபதேசித்து வந்தார்கள்.

**சீக்கியர்களின் சரித்திரம்; சீக்கிய மதம் பரவுதல்:—** அப்படி ஏற்பட்ட குருமார்களில் நான்காம் குருவுக்கு அக்பர் சக்ரவர்த்தி லாகூருக்குப் பக்கத்திலுள்ள அமிர்த ஸரஸில் ஒரு கோயிலும் குளமும் அமைத்துக்கொள்ள இடம் கொடுத்தார். அங்குக் கட்டப்பட்ட கோயிலே சீக்கியர்களுடைய சிறந்த பொற்கோயில். அக்பருக்குப் பின்னால் வந்த சக்கரவர்த்திகள் காலத்தில் சீக்கியர்களுக்குப் பல விதத் துன்பங்கள் ஏற்பட்டன. சீக்கியர்களுடைய ஐந்தாம் குரு அர்ஜுன தேவர். அவர் சீக்கியர்களுடைய மத நூலாகிய கிரந்த ஸாகிபைத் தொகுத்து வைத்தார். சீக்கியர்

விக்கிரகத்தை வணங்குவது இல்லை. இந்தக் கிரந்த ஸாகிபு தான் அவர்களுடைய கோயிலில் வைக்கப்பட்டிருக்கும். எல்லா மரியாதைகளும் இதற்கே செய்யப்படும். அக்காலத்தில் சீக்கியர்கள் மொகலாய சக்கரவர்த்திக்கு விரோதமாக அவரது குமாரர் குஸ்ருவுக்கு உதவி செய்ததால், அவர் கோபங்கொண்டு, குரு அர்ஜுன தேவரைக் கொலை செய்துவிட்டார். அவருடன் பல சீக்கியர்களும் கொல்லப்பட்டார்கள்.

**குரு ஹரி கோவிந்தர்** சீக்கியர்களின் ஆறும் குரு. அவர் காலத்தில் சீக்கியர்கள் யுத்தப்பயிற்சி பெற்று முகம்மதியர்களை எதிர்த்து வந்தார்கள். ஜஹாங்கீர் ஹரி கோவிந்தரைப் பன்னிரண்டு வருஷம் காவலில் வைத்திருந்தார். அவர் காலத்தில் சீக்கியர்களுக்கும் முகம்மதியர்களுக்கும் பல சண்டைகள் நடந்தன. பின்னர் 9-ஆம் குருவாக வந்தவர் **குருதேஜ் பகதூர்**. ஔரங்கஸீப்பின் கட்டளைக்கு மீறிச் சீக்கிய மதத்தை அவர் போதித்ததால், அவரால் கொடூரமாகக் கொல்லப்பட்டார்.

பத்தாம் குரு கீர்த்தி பெற்ற **குரு கோவிந்த சிங்**. 1664-1708-ல் அவர் சீக்கியர்களைத் திரட்டி நல்ல யுத்தப் பயிற்சி செய்து வைத்தார். அவர் சிஷ்யர்களுக்கு முகம்மதியர்களுடன் போர் புரிய வேண்டிய அவசியத்தை எடுத்துச் சொல்லி, அதுவே தருமமென்றும் போதித்து வந்தார். சிஷ்யர்கள் யாரும் மதுபானம் செய்தல், இலாகிரி வஸ்துக்கள் உபயோகித்தல் முதலிய துர்

வழக்கங்களை விட்டுவிட வேண்டுமென்று ஆணையிட்டார். சீக்கியர் எல்லோரும் சேர்ந்த மகாசபைக்குக் **கால்ஸா** என்பது பெயர், அந்தக் கால்ஸாவுக்குக் கீழே பன்னிரண்டு **மிஸில்கள்** என்ற சபைகள் இருந்தன. ஒவ்வொரு மிஸிலின் தலைவருக்கும் **ஸர்தார்** என்று பெயர். ஒவ்வொரு ஸர்தாரும் ஒரு பெரிய கோட்டையை அமைத்துக்கொண்டு பதினாயிரம் வீரர்களுக்கு அதிபதியாய் இருந்து வந்தார்.



குரு கோவிந்த சிங்

1708-ல் குரு கோவிந்த சிங் ஓர் ஆப்கானியரால் கொல்லப்பட்டார். அவருக்குப் பின் வந்த **குரு பந்தா** என்பவர் சீக்கிய சேனைக்கும் தலைவராயிருந்து வந்தார். அவர் மொகலாயர்களுடன் போர் செய்து டில்லி வரையில் மொகலாய ராஜ்யத்தைப் பாழ்படுத்தினர்.

சீக்கியர்கள் நாளடைவில் பலம் மிகுந்த ஒரு ஜாதியாராய்க் கிளம்பினர்கள். அவர்கள் ஒரு சமயம் ஆப்கன் அரசர் துரானியின் சைனியத்தைத் தோற்கடித்தார்கள். இப்பொழுதும் சீக்கியர்கள் எல்லாராலுமே புகழ்ந்து பாராட்டத் தக்கபடி மிகுந்த வீரமுள்ளவர்களா யிருக்கிறார்கள்.

பயிற்சி

1. சீக்கிய மதத்தை யார், எப்போது ஸ்தாபித்தார்?
2. சீக்கியர்களுக்கு அப்பெயர் வரக் காரணமென்ன?

3. சீக்கியர்கள் ஏன், யாரால் யுத்தப்பயிற்சி செய்விக்கப் பட்டார்கள்?

கி. பி. காலக் குறிப்பு:—

,, 1470-1539 குரு நானக்

,, 1664-1708 குரு கோவிந்த சிங்

,, 1708-1751 குரு பந்தா

---

## ஐரோப்பியரின் வருகை

## 21. இந்தியாவில் போர்ச்சுகீசியரும் டச்சுக்காரரும்

இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் நீண்ட காலமாக வர்த்தகம் நடந்து வந்திருக்கிறது. இங்கிருந்து ஏராளமான வாசனைத் திரவியங்களும், அவுரிச் சாயமும், பருத்தி, பட்டு வஸ்திரங்களும், அரிசி முதலிய தானியங்களும் முத்துக்களும் இரத்தினங்களும் ஐரோப்பாவிலுள்ள கிரீஸ், ரோம் தேசங்களுக்கும் பின்னர் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் அனுப்பப்பட்டு வந்தன. ஐரோப்பிய வியாபாரிகளும் இங்கு அவர்களுடைய இரும்புச் சாமான்களையும், தாமிரம், கண்ணாடிச் சாமான்களையும் விற்று வந்தனர். அக்காலத்தில் மூன்று வியாபார மார்க்கங்களிருந்தன. ஒன்று இந்தியாவின் வடமேற்கிலுள்ள ஆப்கானிஸ்தானம், பாரஸீகம், சிறிய ஆசியா முதலிய நாடுகளின் வழியாகக் கான்ஸ்டான்டிநோபிலுக்கும், மற்றொன்று அரபிக் கடல், பாரஸீக வளைகுடா, மெஸொபொடோமியா, ஸீரியா முதலான பிரதேசங்களின் வழியாக மத்தியதரைக் கடற்கரைக்கும், மூன்றாவது மார்க்கம் அரபிக் கடல், செங்கடல், எகிப்து முதலியவைகளின் வழியாக அலெக்ஸாண்டிரியாவுக்கும் சென்றன. இவ்வியாபாரத்

தை நடத்திவந்தவர்கள் ரோமானியரும் அரபியருமே. அவர்களிடமிருந்து வெனிஸ், ஜினேவா முதலிய இத்தாலிய நகரங்களின் வியாபாரிகள் இந்திய சாமான்களை வாங்கி இதர ஐரோப்பிய வியாபாரிகளுக்கு விற்று வந்தனர்.

**போர்ச்சுகீசியரின் வருகை:**—15-ம் நூற்றூண்டின் மத்தியில் துருக்கியர் தென்மேற்கு ஆசியாவில் பலமடைந்து, கான்ஸ்டான்டிநோபிலேயும் வியாபார மார்க்கங்களையும் கைப்பற்றி, ஐரோப்பியக் கிறிஸ்தவ வியாபாரிகளைத் துன்புறுத்தினர். ஆகையால் ஐரோப்பிய வியாபாரிகள் இந்தியாவிற்குப் புதிய மார்க்கம் கண்டு பிடித்தல் அவசியமாயிற்று. ஸ்பெயின் நாட்டு அரசரும் போர்ச்சுகல் நாட்டு அரசர்களும் மாலுமிகளுக்கு வேண்டிய உதவி செய்து, புதிய மார்க்கம் கண்டு பிடிக்கும்படி தூண்டினர். அவ்வாறு தூண்டப்பட்டுச் சென்றவர்களுள் **கொலம்பஸும்**, **வாஸ்கோடி காமாவும்** முக்கியமானவர்கள். கொலம்பஸ் பூமி உருண்டை வடிவமாக இருப்பதைக்கருதி, ஸ்பெயின் தேசத்திலிருந்து மேற்காகச் சென்று இந்தியாவை யடைய முயற்சித்தார். இந்தியாவிற்கு வழிகண்டு பிடிக்காவிட்டாலும், உலகத்திற்கு அதுவரை தெரியாதிருந்த **அமெரிக்காக்** கண்டத்தைக் கண்டு பிடித்தார்.

**வாஸ்கோடிகாமா** தெற்கு முகமாகப் புறப்பட்டு, ஆப்பிரிக்காவின் தென் கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனையைச் சுற்றி, இந்து மகா சமுத்திரத்தைக் கடந்து, இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள **கள்ளிக்கோட்டை**யில் 1498-ல் வந்திறங்கி, கள்ளிக்கோட்டை ஜாமொரினல்

வரவேற்கப்பட்டுப் பின் இந்தியச் சரக்குகளை வாங்கிச் சென்றார். 19-ம் நூற்றாண்டின் மத்தியில் சூயஸ் கால்வாய் வெட்டப்படும்வரை இம்மார்க்கம் உபயோகத்திலிருந்தது. தற்காலத்திலும் சூயஸ் கால்வாயின் வழியாகச் செல்லமுடியாத பெரிய கப்பல்களும், சுங்கவரியைத்தவிர்க்க விரும்பும் கப்பல்களும் இம்மார்க்கத்தின் வழியாகவே செல்லுகின்றன.

வாஸ்கோடி காமா

போர்ச்சுகீசியர் இந்தியாவில் பற்பல இடங்களில் பண்டசாலைகளை ஏற்படுத்திக்கொண்டு வர்த்தகம் செய்தனர். அவைகளில் இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள **கோவா, பம்பாய், சூரத்** என்னும் நகரங்களும், **டையூ, டாமன்** என்னும் தீவுகளும், கிழக்குக் கரையிலுள்ள **மைலாப்பூரும்** (ஸான் தோம்) முக்கியமானவை. போர்ச்சுகீசியரின் வர்த்தகம் கீழ்த்திசை நாடுகளில் 16-ம் நூற்றாண்டு முழுவதும் சிறப்பாக நடந்தது; அதன் பின்னர் அழிவுற்றது.

போர்ச்சுகீசியர் இந்தியாவோடும் கிழக்கிந்தியத் தீவுகளோடும் செய்துவந்த வர்த்தகத்தில் அதிக லாபம் சம்பாதித்து வந்தார்கள் என்பதை அறிந்த இதர ஐரோப்பியர்களும் இந்தியாவோடு வர்த்தகம் செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுக்குள் டச்சுக்காரர், இங்கிலீஷ்காரர் பிரெஞ்சுக்காரர் முக்கியமானவர்கள். டச்

சுக்காரர்களும் இங்கிலீஷ்காரர்களும் ஏறக்குறைய ஒரே காலத்தில் வியாபாரம் செய்ய ஆரம்பித்த போதிலும் முதலில் டச்சுக்காரர்களே முன்னேற்றமடைந்தனர்.

**டச்சுக்காரர்கள்:**—அக் காலத்தில் டச்சுக்காரர்கள் கடற் பிரயாணத்தில் தேர்ந்தவர்களா யிருந்தார்கள். அவர்களும் இந்தியாவுக்கு வந்து, போர்ச்சுகீசியருடன் சண்டை செய்து, சிறிது சிறிதாகப் போர்ச்சுகீசியர் வர்த்தகத்தை யெல்லாம் அபகரித்துக் கொண்டார்கள். 16-ம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் டச்சுக்காரர்களே, கிழக்கு இந்தியத் தீவுகளுடனும், இந்தியாவுடனும் பிரபலமாக வியாபாரம் செய்யலாயினர். இந்தியாவின் மேற்குக் கரையில் **சூரத்தும் கோச்சியும்**, கிழக்குக் கரையில் **பழவேற்காடும் மசூலிப்பட்டணமும்**, வட இந்தியாவில் **சின்சூரா** என்பதும் அவர்களுடைய வியாபார ஸ்தலங்களாயின. 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் டச்சுக்காரர்களின் இந்திய வியாபாரம் க்ஷீணிக்கத் தலைப்பட்டது.

பயிற்சி

1. ஓர் படம் வரைந்து நம் தேசத்திற்கும் ஐரோப்பாவிற்கும் ஏற்பட்டிருந்த பழைய மார்க்கங்களைக் காட்டு.

2. ஐரோப்பியர்கள் 15-ம் நூற்றாண்டின் இறுதியில் புதிய மார்க்கம் கண்டுபிடிக்கவேண்டிய அவசியம் எவ்வாறு ஏற்பட்டது?

3. முதன் முதலாக இம்மார்க்கம் யாரால், எவ்வருஷம் கண்டுபிடிக்கப்பட்டது? அவர் நம் நாட்டில் எங்கு வந்து இறங்கினார்?

4. போர்ச்சுகீசியருக்குப் பின் நம் நாட்டில் வியாபாரம் செய்ய வந்த ஐரோப்பயர்கள் யார்?

## 22. இங்கிலீஷ்காரரும், பிரேஞ்சுக்காரரும்

### இங்கிலீஷ் கிழக்கு இந்தியா கம்பெனி

1600-ம் வருஷத்தில் இங்கிலாந்தில் லண்டன் நகரி லுள்ள சுமார் நூறு வர்த்தகர்கள் ஒன்று சேர்ந்து, கிழக்கு இந்தியா கம்பெனி என்று ஒரு வர்த்தகச் சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். அக்காலத்தில் இங்கி லாந்தை ஆண்டுவந்த எலிஸபெத் மகாராணியார், இக்கம்



எலிஸபெத் மஹா ராணியார்

பெனியாருக்குக் கிழக்கு இந்தியத் தீவுகளுடனும் இந்தி யாவுடனும் வர்த்தகம் செய்ய ஒரு உரிமைச் சாசனம் அளித்தார்.

இங்கிலீஷ் வர்த்தகர்களும் டச்சுக்காரர்கள் வியாபாரஞ் செய்துவந்த கிழக்கு இந்தியத் தீவுகளுக்கே சென்றார்கள். இருவருக்கும் போட்டி உண்டாயிற்று. டச்சுக்காரர் மிகுந்த பலமடைந்திருந்தனர். அவர்கள் 1623-ல் அம்பாய்னு என்ற இடத்தில் சில ஆங்கிலேயரை நியாயமின்றிக் கொலை செய்தார்கள். அவர்களுக்குப் பயந்து இங்கிலீஷ்காரர் கிழக்கு இந்தியத் தீவுகளைவிட்டு வெளியேறி, இந்தியாவை அடைந்து வர்த்தகம் செய்யத் தொடங்கினார்கள்.

1611-ல் அவர்கள் மசூலிப்பட்டணத்தில் ஒரு பண்டசாலையை ஏற்படுத்தினார்கள். 1612-ல் போர்ச்சுகீசியர்களைத் தோற்கடித்துச் சூரத்திலும் தங்கள் வர்த்தகசாலைகளை அமைத்துக் கொண்டார்கள். பின்னர் 1615-ல் ஸர் தாமஸ் ரோ என்னும் ஆங்கிலேய தூதர் ஜஹாங்கீரிடம் சில வியாபார உரிமைகள் பெற்றார். இதன் பின் மேற்குக் கரையில் ஆங்கிலேயர்களுடைய வர்த்தகம் விசேஷமாக விருத்தியடைந்து வந்தது.

சென்னபட்டணம்:— தென்னிந்தியாவின் கிழக்குக் கரையில் இங்கிலீஷ் கம்பெனியின் பிரதிநிதியாக இருந்தவர் ஸர் பிரான்ஸிஸ் டே என்பவர். அச்சமயம் சந்திரகிரியில் விஜயநகர ராஜ வம்சத்தைச் சேர்ந்த ஒரு அரசர் அரசாண்டார். அந்த அரசரிடமிருந்து 1639ல் சென்னையில் தற்காலம் செயின்ட் ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்டிருக்கும் நிலத்தைப் பிரான்ஸிஸ் டே விலைக்கு வாங்கி, அங்கே ஒரு வர்த்தகசாலை ஸ்தாபித்தார்.

அக்காலத்தில் கர்நாடகத்தில் நேர்மையான அரசாட்சி இல்லை. அதனால் இங்கிலீஷ்காரருடைய வர்த்தக

சாலேக்கு எந்தச் சமயமும் அபாயம் நேரும் போலிருந்தது. ஆகவே பிரான்ஸிஸ் டே அங்கே ஒரு கோட்டையைக் கட்டி, அதற்குச் செயின்ட் ஜார்ஜ் கோட்டை என்று பெயரிட்டார். இங்கிலீஷ் வர்த்தகர்கள் தங்கள் சாமான்களைக் கோட்டைக் குள்ளேயே வைத்துக் கொண்டு வர்த்தகம் செய்து வந்தார்கள். அவர்களுடன் வர்த்தகம் செய்த இந்தியர்கள் கோட்டைக்கு வெளியே வசித்து வந்தார்கள். அவர்கள் வசித்து வந்த இடத்திற்குப் பிளாக் டௌன் (கறுப்பு மனிதர் பட்டணம்) என்று பெயர் ஏற்பட்டது. 1905-ம் வருஷத்தில் வேல்ஸ் இளவரசராயிருந்த ஜார்ஜ் (பின்னர் ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி) சென்னைக்கு விஜயஞ் செய்தபொழுது இப்பெயர் ஜார்ஜ் டௌன் என்று மாற்றப்பட்டது. முதலில் கூவம் நதி முகத்துவாரத்தில் ஒரு சிறிய கிராமமாய் ஏற்பட்ட சென்னை, காலக்கிரமத்தில் பெரிய நகரமாகி இப்போது நமது மாகாணத்தின் முக்கிய பட்டணமாயிருக்கிறது.

**பம்பாய்:**—பம்பாய்த் துறைமுகம் வெகு காலம் போர்ச்சுகீசியருக்குச் சொந்தமாயிருந்தது. இங்கிலாந்தில் அரசு புரிந்த இரண்டாவது சார்லஸ் என்பவர் போர்ச்சுகீசிய மன்னருடைய புத்திரியை மணஞ் செய்துகொண்டார். அப்பொழுது அத்தேசத்து மன்னர் பம்பாயைத் தம்மகளுக்கு ஸ்திரீதனமாகக் கொடுத்தார். அதனால் சார்லஸ் அரசருக்குப் பம்பாய் உரிமையாயிற்று. அவருக்குப் பம்பாயினால் விசேஷ நன்மை ஒன்றுமில்லாமலிருந்தது. ஆகவே, அவர் 1668-ல் பம்பாயை இங்கிலீஷ் கம்பெனியாருக்கு வருஷம் ஒன்றுக்

அங்கே ஒரு கோட்டையைக் கட்டினர்கள். அதற்குச் செயின்ட் வில்லியம் கோட்டை என்று பெயர்.

**ஐக்கிய கிழக்கு இந்தியா கம்பெனி:**—இவ்வாறு ஒரு இங்கிலீஷ் கம்பெனியார் வர்த்தகம் செய்து லாப மடைவதைக் கண்டு இங்கிலாந்திலிருந்தே வேறு பல இங்கிலீஷ் கம்பெனியாரும் இந்தியாவுடன் வியாபாரம் செய்யத் தொடங்கினர்கள். காலக்கிரமத்தில் இவர்களுக்குள் போட்டியும் பொருமையும் உண்டாகிக் கலகங்கள் ஏற்பட்டன. இம்மாதிரி சுமார் ஒரு நூற்றுண்டு வரை குழப்பங்கள் நடந்துவந்தன. பின் 1708-ல் எல்லா இங்கிலீஷ் வர்த்தகச் சங்கங்களும் 'ஐக்கிய கிழக்கு இந்தியா கம்பெனி' என்ற பெயருடன் ஒரே சங்கமாகச் சேர்க்கப்பட்டன.



ஆங்கிலேய கிழக்கிந்தியா கம்பெனியாரின் நாணயம்

இவ்வாறு ஆங்கிலேயர்கள் இந்தியாவில் பல வியாபார ஸ்தலங்களை அமைத்துக்கொண்டு வெகு காலம் சுதேச ராஜ்ய விஷயங்களில் தலையிடாமல் ராஜாக்களையும், நவாப்புகளையும் நட்புக்கொண்டு வர்த்தகம் ஒன்றையே கவனித்து வந்தார்கள்.

**பிரெஞ்சுக்காரர்கள்:**— பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயரைப் போலவே இந்தியாவோடு வர்த்தகம் செய்ய

குப் பத்துப் பவுன் வாடகைக்குக் கொடுத்துவிட்டார். அக்கம்பெனியார் அங்கேயும் ஒரு வர்த்தகசாலையை அமைத்துக்கொண்டனர். நாளடைவில் பம்பாய் ஒரு பெரிய நகரமாகி, இன்று இந்தியாவிலுள்ள மிகப் பெரிய துறைமுகப் பட்டினமாக விளங்குகிறது.

**கல்கத்தா:**—இங்கிலீஷ் கம்பெனியார் 1633-ல் ஒரிஸ்ஸாவிலுள்ள பாலசூர், பூரி என்னுமிடங்களில் தங்கி வியாபாரம் செய்தனர். பின் ஹூக்ளியில் ஓர் வியாபார ஸ்தலம் ஏற்படுத்தினர். ஷாஜஹான் காலத்தில் ஷூஜா வங்காளக் கவர்னராக இருந்தார். அவர் ஆங்கிலேயரிடம் பிரியமாக இருந்தார். அதன் பின் வந்த வங்காளக் கவர்னர்கள் இங்கிலீஷ் வியாபாரிகளிடம் அதிகச் சுங்கவரி வசூலித்தும் இன்னும் இதர வழிகளில் அவர்களைத் துன்புறுத்தியும் வந்தனர். ஔரங்கஸீப் காலத்தில் ஆங்கிலேயர் அவருடன் போர் தொடுத்தனர். ஆனால் ஔரங்கஸீப் அவர்களைத் தோற்கடித்து நாட்டைவிட்டுத் துரத்திவிட்டார். பின் சமாதானம் ஏற்பட, ஆங்கிலேயர் முன்போல் வியாபாரம் செய்ய அனுமதி பெற்றனர்.

பின்னர் 1690-ல் **ஜாப் கார்னக்** என்னும் ஒரு ஆங்கிலேய வியாபாரி வங்காள நவாப்பிடமிருந்து கங்கை நதியின் முகத்துவாரத்தில் மூன்று சிறு கிராமங்களை விலைக்கு வாங்கினர். அவைகளில் முக்கியமானது காளிக் கட்டம் என்பது. இந்தக் கிராமந்தான் காலக்கிரமத்தில் ஒரு பெரிய நகரமாகி இப்பொழுது **கல்கத்தா** என்றழைக்கப்படுகிறது. ஆங்கிலேயர் தங்கள் சாமான்களைப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வதற்காக

ஆரம்பித்தார்கள். 1664-ம் வருஷம் பிரான்ஸில் மந்திரியாயிருந்த கால்பேர்ட் என்பவரின் உதவியால் ஒரு கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டது. இந்தியாவில் பல வியாபார ஸ்தலங்கள் அந்தக் கம்பெனியாருக்கு ஏற்பட்டன. அவைகளில் காரைக்கால், மாஹி, சந்திரநாகூர், புதுச்சேரி முதலியன முக்கியமானவை. 1674-ல் மார்டின் என்னும் பிரெஞ்சுக் கம்பெனி உத்தியோகஸ்தர் பீஜப்பூர் கவர்னரிடமிருந்து புதுச்சேரியை விலைக்கு வாங்கி, அதில் ஒரு பலமுள்ள கோட்டையைக் கட்டினார்.

பயிற்சி

1. இந்தியா படம் வரைந்து, ஐரோப்பியர் நம் நாட்டில் ஏற்படுத்திக்கொண்ட வியாபாரஸ்தலங்களை அதில் குறிப்பிடு.

2. இங்கிலீஷ் கிழக்கு இந்தியா கம்பெனி எப்பொழுது எவ்வாறு ஆரம்பமாயிற்று? பின்னால் இதற்கு ஐக்கிய கிழக்கு இந்தியா கம்பெனி என்று பெயர் எவ்வாறு ஏற்பட்டது?

3. இங்கிலீஷ் கம்பெனியார் கிழக்கு இந்தியத் தீவுகளில் வியாபாரம் செய்வதை விட்டு ஏன் இந்தியாவிற்கு வந்தனர்?

4. கம்பெனியாருக்கு, பம்பாய் எவ்வாறு கிடைத்தது?

5. கல்கத்தாவும், சென்னையும் எவ்வாறு ஏற்பட்டன?

காலக் குறிப்பு—

1498 வாஸ்கோடிகாமா இந்தியாவுக்கு வந்தது
1510 போர்ச்சுகீசியர் கோவாவைப் பிடித்தது
1600 இங்கிலீஷ் கிழக்கு இந்தியா கம்பெனி ஏற்படுதல்
1602 டச்சுக் கிழக்கு இந்தியா கம்பெனி உண்டானது
1612 சூரத்தில் இங்கிலிஷ் பண்டசாலை ஏற்படுதல்
1615 ஸர் தாமஸ் ரோவின் வருகை
1623 அம்பாய்னுபடுகொலை


இந்தியா-1750
சுதேச இராஜ்யங்களும்
ஐரோப்பிய
வியாபார ஸ்தலங்களும்
டில்லி
ஆக்ரா
அயோத்தி
ராஜபுதனம்
பீஹார்
வங்காளம்
ஹுக்ளி
டாக்கா
சந்திரநாகூர்
பாலசூர்
டையு
டாமன்
சூரத்
பம்பாய்
மராட்டிய இராஜ்யங்கள்
வட சர்க்கார்
பூரி
மசூலிப்பட்டணம்
கோவா
வங்காளக் குடாக்கடல்
பழவேற்காடு
சென்னை
புதுச்சேரி
சென்ட்டேவிட்கோட்டை
கர்நாடகம்
மைசூர்
அராபிக்கடல்
மாஹி
கள்ளிக் கோட்டை
கொச்சி
தஞ்சாவூர்
காரைக்கால்

1639-40 சென்னை ஆங்கிலேய வியாபார ஸ்தலமானது
1664 பிரெஞ்சுக் கிழக்கு இந்தியா கம்பெனி
1668 கம்பெனியாருக்குப் பம்பாய் கிடைத்தல்
1674 புதுச்சேரி பிரெஞ்சு வியாபார ஸ்தலமானது
1690 கல்கத்தா ஆங்கிலேய வியாபார ஸ்தலமானது
1703 ஐக்கிய கிழக்கு இந்தியா கம்பெனி

---

## 23. இந்தியாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக் காரருக்கும் நடந்த சண்டைகள்

**தென்னிந்தியாவின் நிலைமை:—** தென்னிந்தியாவில் பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் தங்கள் வர்த்தகத்தை விசேஷமாக விருத்தி செய்து வந்த காலத்தில் அங்குத் திறமையுள்ள அரசாங்கம் இல்லை. ஔரங்கஸீபுக்குப் பின் தென்னிந்தியா மொகலாய ராஜ்யத்தினின்றும் பிரிந்துவிட்டது. ஹைதராபாத்திலுள்ள ராஜப்பிரதிநிதியான நிஜாம் உல்முல்க் சுதந்தரமடைந்தார். கிழக்குத் தொடர்ச்சி மலைத்தொடரை அடுத்திருந்த கர்நாடகப் பிரதேசத்தில் அன்வாருதீன் என்னும் நவாப் ஆண்டு வந்தார். அவர் ஹைதராபாத் நிஜாமுக்கு அடங்கியவர். தஞ்சாவூரில் சிவாஜி மன்னருடைய சந்ததியார் ஒருவர் ஆண்டு வந்தார். இவர்களைத் தவிரப் பல பாளையக்காரர்கள் தென்னாட்டில் பல கோட்டைகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தார்கள். இவ்வாறு தென்னிந்தியா முழுவதும் ஒரே அதிகாரத்திற்குள் அடங்கி இராததால் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் வர்த்தகம் செய்து பிரபல மடைவதற்கு அனுகூலமா யிருந்தது.

**டியூப்ளேயும் அவருடைய நோக்கங்களும்:—** அக்காலத்தில் புதுச்சேரியில் பிரெஞ்சுக்கவர்னராயிருந்த **டியூப்ளே** வெகு சாமர்த்தியசாலி. அவர் வெகுகாலம் இந்தியாவில் தங்கி இந்நாட்டாருடைய இயல்பை நன்ருய் அறிந்தவர். அவர் ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து துரத்திவிட்டு, ஐரோப்பிய வர்த்தகம் முழுவதையும் தம் நாட்டார்களே நடத்த வேண்டுமென்றும், தென்னிந்தியாவை ஜயித்து ஒரு பிரெஞ்சு ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்றும் எண்ணிஞர். அதற்காக அவர் சுதேச அரசர்களுடன் நட்புச் செய்து கொண்டார். சுதேச வீரர்கள் பலரை ஐரோப்பிய முறையில் நன்ருக யுத்தப் பயிற்சி செய்து பட்டாளத்தில் சேர்த்து வைத்திருந்தார். வேறு பிரெஞ்சு வீரர் பலரும் அவரிடம் இருந்தனர். இவ்வளவு முன்னேற்பாட்டுடன் அவர் ஆங்கிலேயரைத் தாக்குவதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

டியூப்ளே

**முதல் கர்நாடக யுத்தம் (1745-48):—** ஐரோப்பாவில் 1744-ல் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஒரு யுத்தம் ஆரம்பித்தது. இந்தியாவிலும் அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது. 1746-ம் ஞூ **லபோர்டனே** என்பவர் டியூப்ளேக்கு உதவியாக ஒரு பெரிய கப்பற்படையுடன் இந்தியாவுக்கு வந்தார். பிரெஞ்சுக்

காரர்கள் சென்னையை முற்றுகை செய்து எளிதில் கைப்பற்றிக் கொண்டனர்.

ஆங்கிலேயர்கள் கர்நாடக நவாப்பைத் தங்களுக்கு உதவி செய்யும்படி வேண்டினர். அவர் சென்னையைத் திரும்பக் கொடுத்துவிடும்படி டியூப்ளேக்கு உத்தரவு செய்தார். டியூப்ளே அதற்கு இணங்கவில்லை. அதனுல் நவாப் பிரெஞ்சுக்காரரைத் தண்டிக்க ஒரு பெரும் படையை அனுப்பினுர். சென்னைக்கு அருகில் **ஸான் தோம்** என்னுமிடத்தில் சண்டை நடந்தது. பிரெஞ்சுக் காரர் மிகுந்த வீரத்தோடு போர்செய்து நவாப்பின் சைனியங்களைத் தோற்கடித்தனர். இந்தியர்களோடு ஐரோப்பியர் செய்த முதல் யுத்தம் இதுவே யாகும். ஐரோப்பிய சைனியங்கள், பீரங்கிகள் வைத்திருந்ததாலும் நன்ருகப் பழக்கப்பட்டிருந்ததாலும் சுதேச சைனியங்களைக் காட்டிலும் மேலானவை என்பது இந்த யுத்தத்தால் வெளியாயிற்று. பின்பு டியூப்ளே புதுச்சேரிக்குப் பக்கத்தில் ஆங்கிலேயருக்குச் சொந்தமாயிருந்த செயின்ட் டேவிட் கோட்டையை முற்றுகை செய்து பிடிக்க முயன்ருர். பின் ஆங்கிலேயருக்கு உதவியாக இங்கிலாந்திலிருந்து வந்த ஒரு கப்பற்படை புதுச்சேரியைத் தாக்கியது. இரு திறத்தாரும் வெற்றி பெறவில்லை.

**முதல் கர்நாடக யுத்தத்தின் முடிவு:**— 1748-ம் ஆூ ஐரோப்பாவில் இங்கிலீஷ்காரர்களும் பிரெஞ்சுக்காரர்களும் சமாதானஞ் செய்து கொண்டார்கள். அதனுல் இந்தியாவிலும் சமாதானம் ஏற்பட்டது. பிரெஞ்சுக்

காரர் சென்னையை ஆங்கிலேயருக்குத் திருப்பிக் கொடுத்து விட்டனர்.

பிரெஞ்சுக்காரர் மிக நன்றாய்ச் சண்டை செய்து வந்ததால், சுதேச அரசர்கள் தங்களுக்குள் சண்டை நேர்ந்த பொழுதெல்லாம் பிரெஞ்சுக்காரருடைய உதவியை நாடினார்கள்.

**கிளைவின் பாலிய சரித்திரம்:**—இந்தியாவிலிருந்த ஆங்லேயருக்குள் **ராபர்ட் கிளைவ்** என்ற சிறந்த யுத்த வீரர் ஒருவர் இருந்தார். வாலிபத்தில் அவர் பரம துஷ்டராயிருந்தார்; படிப்பதில்லை. அவருடைய ஏழைப் பெற்றோர்களால் அவரை அடக்க முடியவில்லை. அவர்கள் கிளைவினுடைய துஷ்டத் தனத்தைத் தாங்கமாட்டாமல் அவரை எங்கேயாவது ஒழித்துவிட வேண்டுமென்று தீர்மானித்து, இந்தியாவுக்கு அனுப்பினார்கள். 1744-ல் இங்கிலீஷ் கிழக்கு இந்தியா கம்பெனியில் அவர் ஒரு குமாஸ்தாவாக நியமிக்கப்பெற்றார்.

ராபர்ட் கிளைவ்

சென்னையைப் பிரெஞ்சுக்காரர் பிடித்துக்கொண்டபொழுது சிலர் **ஸெயின்ட் டேவிட் கோட்டைக்கு** ஓடிப் போனார்கள். அவர்களுள் கிளைவும் ஒருவர். அந்தக் கோட்டையைப் பிரெஞ்சுக்காரர்கள் பிடிக்க முயன்ற பொழுது, கிளைவ் மேஜர் லாரென்ஸுக்கு உதவியாக இருந்து போர் செய்தார். அதற்குமுன் அவர் போர்

செய்ததில்லை. அச்சமயம் சென்னைக் கவர்னராயிருந்தவர் கிளைவின் வீரத்தைக் கண்டு வியந்து, அவருக்கு ராணுவத்தில் ஒரு உயர்ந்த உத்தியோகம் கொடுத்தார். நாளடைவில் அவர் படிப்படியாக உயர்ந்து சேனைத் தலைவரானார். அவர் எடுத்த காரியத்தைக் கைவிடாமல் ஊக்கத்துடன் நிறைவேற்றுவார்; யுத்த களத்தில் ஆபத்தான இடங்களில் கூசாது நின்று போர் செய்வார். அவருடைய சேனை வீரர்கள் அவரிடம் மிக்க அன்புகொண்டு வீரத்துடன் போர் செய்வார்கள்.

**இரண்டாவதுகர்நாடக யுத்தம் (1749-54):**--1743-ம் வருஷம் ஹைதராபாத் நிஜாமாயிருந்த **நிஜாம் உல்முல்க்** இறந்து போனார். அவருக்குப்பின் பட்டம் அடைவதைப் பற்றி ஒரு கலகம் உண்டாயிற்று. நிஜாமுடைய இரண்டாவது குமாரர் **நாஜர் ஜங்** பட்டத்தை அடைய முயன்றார். நிஜாமுடைய பேரரான **முஜபர் ஜங்** என்பவரும் இவருக்குப் போட்டியாகத் தோன்றினார். அவர் புதுச்சேரியிலிருந்து டியூப்ளேயைத் தமக்கு உதவிசெய்யும்படி வேண்டினார். இதனுடன் ஆற்காட்டிலும் ராஜ்ய விஷயமான சச்சரவு ஒன்று ஏற்பட்டது. ஆற்காட்டில் ஆண்டுவந்த அன்வாருதீனுக்கு விரோதமாக, இதற்கு முன்னிருந்த நவாப்பின் மருமகனான **சந்தா சாகிப்** கலகம் செய்தார். அவரும் டியூப்ளேயின் உதவியை நாடினார். டியூப்ளே அவர்கள் இருவருக்கும் உதவி செய்வதாக வாக்களித்தார்.

டியூப்ளே முதலில் சந்தா சாகிப்புக்கு உதவியாகப் **புஸ்ஸி** என்பவர் வசம் ஒரு படையை அனுப்பினார். 1749-ல் ஆம்பூர் என்ற இடத்தில் நடந்த சண்டையில்

அன்வாருதீன் இறந்தார். அவர் குமாரர் முகம்மது அலி திருச்சினுப்பள்ளிக்குத் தப்பி ஓடினுர். சந்தா சாகிப் ஆற்காடு நவாப்பாக நியமிக்கப்பட்டார்.

ஹைதராபாத்திலிருந்து நாஸர் ஜங் ஒரு சிற்றரசனுல் கொலே செய்யப்பட்டு இறந்துபோனுர். அதனுல் டியூப்ளேயின் உதவிபெற்ற முஸபர் ஜங் நிஜாமாகச் சிம்மாசனம் ஏறினுர். பின்னுல் முஸபர் ஜங்கும் இறந்து போகவே, பிரெஞ்சுத்தளகர்த்தர் புஸ்ஸி சலபத் ஜங் என்பவரை நிஜாமாக்கினுர். அவரிடமிருந்து பிரெஞ்சுக்காரருக்கு வட சர்க்கார் கிடைத்தது. இவ்வாறு பிரெஞ்சுக்காரர் ஹைதராபாத்திலும், கர்நாடகத்திலும் மிகுந்த செல்வாக்கு அடைந்தனர்.

திருச்சினுப்பள்ளிக்கு ஓடிப்போன முகம்மது அலி அங்கிருந்த மலேக் கோட்டையில் ஒளிந்து கொண்டிருந்தார். சந்தா சாகிபும் டியூப்ளேயும் பெரிய சேனேயோடு சென்று திருச்சினுப்பள்ளியை முற்றுகை செய்தனர். முகம்மது அலி அப்போது சென்னேயிலுள்ள ஆங்கிலேயரை உதவி செய்யும்படி வேண்டிக் கொண்டார். பிரெஞ்சுக்காரரின் ஆதிக்கம் பெருகி வருவதைக்கண்டு, கவலே கொண்டிருந்த ஆங்கிலேயர்கள் இச்சமயம் முகம்மது அலிக்கு உதவி செய்யத் தீர்மானித்தனர். அச்சமயம் ஆங்கிலேயருள் சிறந்த வீரராயிருந்த ராபர்ட் கிளேவ் சென்னேக் கவர்னருக்கு ஒரு நல்ல யோசனே சொன்னுர். அதாவது சந்தா ஸாகிப் தம்முடைய பெருஞ் சேனேயுடன் திருச்சினுப்பள்ளியில் இருப்பதால் அவருடைய ராஜதானியாகிய ஆற்காட்டைப் பிடித்துக் கொண்டால், சந்தா ஸாகிப் திருச்சி முற்றுகையைத்

தளரவிட்டுத் தம் படையுடன் ஆற்காட்டுக்கு வந்துவிடக் கூடும்; அப்பொழுது முகம்மது அலியை எளிதில் விடுவித்து விடலாம் என்பதே. கவர்னரும் அதைக் கேட்டு மகிழ்ந்து கிளைவையே ஒரு சிறு படையுடன் ஆற்காட்டுக்கு அனுப்பினர். அந்தப் படையில் 200 ஆங்கிலேயரும் 300 சிப்பாய்களும் இருந்தனர்.

**கிளைவ் ஆற்காட்டைக் கைப்பற்றுதல்:**—கிளைவ் வருவதை அறிந்து, ஆற்காட்டைக் காத்துவந்த சந்தா ஸாகிபின் சேனை ஊரை விட்டு ஓடிவிட்டது. கிளைவ் ஆற்காட்டை உடனே பிடித்துக்கொண்டார். பின் சந்தா ஸாகிப் ஆற்காட்டின் மேல் படை யெடுத்து வரக்கூடும் என்பதை எண்ணிக் கிளைவ் சேனைவீரர்களுக்கு வேண்டிய உணவு முதலிய பொருள்களைச் சேகரித்து வைத்துக் கொண்டார்.

**ஆற்காட்டு முற்றுகை:**—சந்தா ஸாகிப் தமது தலைநகர் பிடிபட்டது என்பதை அறிந்து உடனே தம் குமாரர் ராஜா ஸாகிப் வசம் பதினாயிரம் போர்வீரர்களை அனுப்பினர் (1752). அவர்கள் ஆற்காட்டை 50 நாள் முற்றுகை செய்தார்கள். கிளைவ் அடிக்கடி தம் வீரர்களுடன் வெளியே வந்து, நவாபின் சேனையில் பலரைக் கொன்றுவிட்டு, உடனே கோட்டைக்குள் ஓடி மறைந்துகொள்வார். இவ்வாறு ராஜா ஸாகிபின் சேனையில் பலர் மடிந்தனர். ஆங்கிலேயருள்ளும் படைவீரர்களில் அநேகர் இறந்து போயினர். மிஞ்சி இருந்தவர்கள் பின் வாங்காது கிளைவினுடைய சொற்படியே போர் செய்து வந்தார்கள். அச்சமயம் கிளைவுக்கு உதவியாக ஒரு படை வந்து சேர்ந்தது. அப்பொழுது ராஜா ஸாகிப்

கடைசி முறையாகக் கோட்டையைப் பிடிக்க முயற்சி செய்தார். அதுவும் பயன் படாது போயிற்று. அவருடைய வீரர்களும் இரண்டு மாத காலம் கோட்டைக்கு வெளியே தங்கி இருந்ததால் சலித்துப்போனார்கள். அதனால் அவர் தம் படையுடன் திரும்பிப்போக ஆரம்பித்தார். அச்சமயம் கிளைவ் கோட்டையை விட்டு வெளியேறி, அவரைத் தொடர்ந்து ஆரணி என்ற இடத்தில் தாக்கித் தோற்கடித்தார்.

**பிரெஞ்சுக்காரரின் தோல்வி :—** பின்னர் ஆங்கிலேயர் திருச்சினாப் பள்ளிக்குச் சென்று முற்றுகை செய்து கொண்டிருந்த பிரெஞ்சுக் காரரைத் தாக்கினார்கள். பிரெஞ்சுக் காரர்கள் தோல்வியுற்று, ஸ்ரீரங்கத்திற்கு ஓடினார்கள். ஆங்கிலேயர்கள் அங்கும் சென்று அவர்களைத் தோற்கடித்துத் துரத்தினார்கள். சந்தா ஸாகிப் தப்பியோடித் தஞ்சாவூர் அரசரிடம் அடைக்கலம் புகுந்தார். அந்த அரசருடைய சேனாதிபதி அவரைக் கொன்றுவிட்டார். முகம்மது அலி கர்னாடக நவாப்பாக்கப்பட்டார்.

**டியூப்ளேயின் வீழ்ச்சி:—** இந்த யுத்தத்திற்குப் பின்னர் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சமாதானம் ஏற்பட்டது. கிளைவ் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கே அவர் 'ஆற்காட்டு வீரர்' என்ற பெயருடன் மிகவும் போற்றப்பட்டார். இந்தியாவில் ஒரு பெரிய பிரெஞ்சு ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருந்த டியூப்ளேயும் அனாவசியமான சண்டைகளைச் செய்து கம்பெனியாருக்கு நஷ்டம் உண்டாக்கி விட்டதாகக் கருதப்பட்டார்; ஆகை


ஆங்கிலேயருக்கும்
பிரெஞ்சுக்காரருக்கும்
கர்நாடகத்தில்போர்
(1746-63)
கோதாவரி நதி
கிருஷ்ணா
துங்கபத்திரா
கோவா
வேலூர்
ஆர்காடு
சென்னை
செஞ்சி
செயின்ட் டேவிட் கோட்டை
காரைக்கால்
ஸ்ரீரங்கப்பட்டணம்
திருச்சினப்பள்ளி
தஞ்சாவூர்
நாகப்பட்டணம்
மதுரை
இலங்கை

யால் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அவர் பிரான்ஸ் தேசத்தை அடைந்து, அங்கே தரித்திரத்தினால் மிகவும் கஷ்டப்பட்டு 1764-ல் இறந்தார். இந்தியாவில் ஆங்கிலேய பிரெஞ்சு வர்த்தகர்கள் சிறிது காலம் சமாதானத்துடன் இருந்தார்கள்.

**மூன்றாவது கர்நாடக யுத்தம்:**—1756-ம் வருஷம் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் ஒரு யுத்தம் ஆரம்பித்து ஏழு வருஷகாலம் நடந்துவந்தது. அதனால் இந்தியாவிலிருந்த இங்கிலீஷ் பிரெஞ்சு வர்த்தகர்களுக்குள்ளும் மறுபடி சண்டை ஏற்பட்டது. இதற்குள் கிளைவும் இந்தியாவுக்குத் திரும்பி வந்துவிட்டார். அவர் வங்காளத்தில் சந்திரநாகூரைப் பிடித்துக்கொண்டார். 1758-ல் பிரெஞ்சுத் துரைத்தனத்தார் லாலி என்ற தளகர்த்தரை அனுப்பினார்கள். அவர் இந்தியாவுக்கு வந்ததும் முதலில் செயின்ட் டேவிட் கோட்டையைப் பிடித்துக்கொண்டு, அதை இடித்துத் தள்ளிவிடும்படி உத்தரவு செய்தார். அதன்பின் அவர் சென்னையை முற்றுகை செய்யப் புறப்பட்டார். அதற்கு ஹைதராபாத்திலிருந்து பிரெஞ்சுத் தளகர்த்தர் புஸ்ஸியும் உதவியாக வந்தார். சென்னை முற்றுகை ஆறுமாத காலம் நடந்தது. ஆங்கிலேய தளகர்த்தர் மேஜர் லாரன்ஸ் பிரெஞ்சுக்காரருக்குச் சிறிதும் இடங்கொடாமல் எதிர்த்துநின்றார்.

தென்னிந்தியாவில் இவ்வாறு போராட்டம் நடந்துகொண்டிருந்த சமயத்தில் கிளைவ் வங்காளத்திலிருந்தார். அவர் புஸ்ஸி ஹைதராபாத்தைவிட்டுச் சென்ற சமயமறிந்து **கர்னல் போர்ட்** என்பவர் வசம் ஒரு பெரும் படையை அனுப்பினார். போர்ட் வட சர்க்காரை

அடைந்து, அங்குள்ள பிரெஞ்சுச் சேனையைத் தோற்கடித்து வட சர்க்கார் முழுவதையும் கைப்பற்றினர். (வட சர்க்கார் என்பது கஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி, கிருஷ்ணு ஜில்லாக்களடங்கிய பிரதேசம்). இதனுடன் ஹைதராபாத்தில் பிரெஞ்சுச் செல்வாக்கு முடிவடைந்தது.

சென்னையிலிருந்த ஆங்கிலேயருக்கு உதவியாக இங்கிலாந்திலிருந்து படைவீரர்கள் வந்தார்கள். அயர்கூட் என்னும் ஆங்கிலேய தளகர்த்தர் சென்னையை முற்றுகை செய்துகொண்டிருந்த லாலியையும் அவர் வீரர்களையும் புறங்காட்டி ஓடும்படிசெய்து, 1760-ல் வந்தவாசி என்னுமிடத்தில் முற்றிலும் தோற்கடித்துப் புஸ்ஸியைச் சிறை பிடித்தார். அதற்கடுத்த வருஷம் அவர் புதுச்சேரியையும் பிடித்துக்கொண்டார். லாலி பிறகு பிரான்ஸுக்குச் சென்றபொழுது பிரெஞ்சுக்காரர் தங்களது இந்திய நாடுகளை இழந்ததற்கு அவரே காரணமென்ற குற்றஞ் சாட்டப்பட்டு அங்கே விசாரணை செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார். இவ்வாறு பிரெஞ்சுக்காரருடைய அதிகாரமும் செல்வாக்கும் இந்தியாவில் அடியோடு அழிந்து போயின.

1763-ம் ஆண்டு ஐரோப்பாவில் பாரிஸ் நகரில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அந்த உடன்படிக்கையின்படி இந்தியாவிலும் அவர்களுக்குள் சமாதானம் ஏற்பட்டது. புதுச்சேரியும் சந்திரநாகூரும் பிரெஞ்சுக்காரருக்குத் திரும்பவும் கொடுக்கப்பட்டன.

## பயிற்சி

1. ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரர்களும் இந்தியாவில் வியாபார ஸ்தலங்களை அமைத்துக் கொண்டிருந்தபொழுது, இந்தியாவின் நிலைமை எவ்வாறிருந்தது?

2. முதல் கர்நாடக யுத்தத்திற்குக் காரணங்களென்ன?

3. டியூப்ளேயின் நோக்கங்களென்ன? அவைகளை நிறைவேற்ற அவர் என்ன வழி தேடினார்?

4. கிளைவ் அவருடைய பெற்றோர்களால் ஏன், எப்பொழுது இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார்?

5. முதல் முதலாக எப்படிக் கிளைவ் பெரிய போர் வீரரெனக் கீர்த்தி பெற்றார்?

6. மூன்றாவது கர்நாடக யுத்தம் எவ்வாறு ஏற்பட்டது? அதன் முடிவென்ன?

7. பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் அபஜயமடைந்ததற்குக் காரணமென்ன?

காலக் குறிப்பு:—

| | |
|---|---|
| 1744 | ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இந்தியாவில் சண்டை ஆரம்பம். |
| 1746 | சென்னையைப் பிரெஞ்சுக்கரார் கைப்பற்றியது |
| 1748 | ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சமாதானம் |
| 1751 | கிளைவ் ஆற்காட்டைப் பிடித்தல் |
| 1752 | திருச்சிராப்பள்ளியில் பிரெஞ்சுக்காரரின் தோல்வி |
| 1754 | டியூப்ளே பிரான்ஸுக்குத் திரும்பி அழைக்கப்படுதல் |
| 1758 | வட சர்க்கார் ஆங்கிலேயர் வசமானது |
| 1760 | வந்தவாசிச் சண்டையில் ஆங்கிலேயரின் வெற்றி |
| 1763 | பாரிஸ் உடன்படிக்கை |

## 24. கிளைவ் பிரபு (1758—1767)

**1. ஆங்கிலேயர் வங்காளத்தில் அதிகாரம் பெற்றது:—** தென்னிந்தியாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த சண்டைகளையும் சமாதானத்தையும் பற்றி மேலே சொன்னோம் அல்லவா? இனி வங்காளத்தில் அவர்கள் நிலைமையைப் பற்றிக் கவனிப்போம். வங்காளத்தில் ஆண்டு வந்த **அலிவர்டிகான்** என்பவர் 1756-ம் ஞூ இறந்தார். அவருக்குப்பின் அவருடைய பேரர் இருபது வயதுள்ள **ஸிராஜ் உத் தௌலா** பட்டத்தை அடைந்தார். **மூர்ஷிதாபாத்** அவருடைய தலைநகராயிருந்தது. அவர் சிறு வயது முதல் செல்வமாக வளர்ந்தவர். ஆங்கிலேயரை அவர் மிகவும் பகைத்து, அவர்களை வங்காளத்திலிருந்து துரத்திவிட வேண்டுமென்று எண்ணியிருந்தார்.

**நவாப் கல்கத்தாவைப் பிடித்தல்-இருட்டறைச் சம்பவம்:—** அப்பொழுது ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் மீண்டும் சண்டை ஏற்படக்கூடிய நிலைமை உண்டாயிற்று. அதனல் சந்திரநாகூரிலிருந்து பிரெஞ்சுக்காரர் கல்கத்தாவின் மீது படையெடுத்து வரக்கூடுமென்று ஆங்கிலேயர் பயந்திருந்தார்கள். அப்பொழுது ஆங்கிலக் கவர்னர் கல்கத்தாவிலிருந்த வில்லியம் கோட்டையைப் பழுது பார்த்துப் புதுப்பித்து முன்னரே தற்காப்புச் செய்து கொள்ள ஆரம்பித்தார். ஸிராஜ் உத் தௌலா அவர் அவ்வாறு புதுப்பிக்கக் கூடாதென்றும் கட்டளையிட்டார். கவர்னர் அதைக் கவனிக்கவில்லை. அதனல்

நவாப் மிகவும் வெகுண்டு, ஒரு படையுடன் கல்கத் தாவிற்குச் சென்று அதை முற்றுகை செய்தார். ஆங்கிலேயரிடம் போதுமான படையில்லை. அங்கி ருந்த சில ஆங்கிலேயரும் யுத்தப் பயிற்சி யில்லாதவர் கள். அதனால் ஸிராஜ் உத் தௌலா எளிதில் வெற்றி பெற்று வில்லியம் கோட்டையைப் பிடித்துக் கொண் டார். சில ஆங்கிலேயர் முன்னரே தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் ஓடங்களில் ஏறி இரவிலேயே ஹூக்ளி நதி வழியாகத் தப்பி ஓடினார்கள். கோட் டையில் மிஞ்சி யிருந்தவர்கள் நவாப்பின் சைனியத் தால் சிறைப்படுத்தப் பட்டார்கள். அப்படிச் சிறை செய்யப்பட்டவர்கள் 146 பேர்கள். அவர்களை நவாப் பின் உத்தியோகஸ்தர்கள் இரவில் ஒரு சிறு இருட்டு அறையில் அடைத்து வைத்ததாயும் மறுநாட் பொழுது விடிவதற்கு முன் அவர்களில் 23 பேர்கள் நீங்க லாக மற்றவர் மாண்டு போனார்கள் என்றும் சொல் லுகிறார்கள். ஆனால் தற்காலத்தில் ஆராய்ச்சி செய் தவர்கள் இவ்விஷயத்தின் உண்மையைச் சந்தேகிக் கின்றனர்.

**கிளைவ் கல்கத்தாவைக் கைப்பற்றுதல்:—** சென்னையி லிருந்த கம்பெனி அதிகாரிகள் கல்கத்தாவில் நடந்த விஷயங்களைக் கேட்டவுடன் மிகுந்த மன வருத்தமும் கோபமும் அடைந்தனர். அப்பொழுது கிளைவ் சீமையி லிருந்து சென்னைக்கு வந்திருந்தார். அவர் நவாப் பிடமிருந்து கல்கத்தாவை மீட்டுக்கொண்டு அவருடைய அடாத செயலுக்குத் தண்டனை செய்ய வேண்டுமென் றும் தீர்மானித்தார். உடனே அவர் ஒரு படையைத்

தயாரித்துத் தாமே அதற்குத் தலைமை வகித்துக் கல்கத்தாவிற்குச் சென்றூர். அட்மிரல் வாட்ஸன் என்பவரும் ஒரு கப்பற் படையோடு அவருடன் சென்றூர். இவ்விரு படைகளும் மூன்றுமாத காலம் பிரயாணம் செய்து கல்கத்தாவை அடைந்து போர் தொடுத்து, அங்கிருந்த கோட்டையை நவாப்பிடமிருந்து எளிதில் பிடித்துக் கொண்டன. ஆங்கிலேயரின் வலிமையை அறிந்த நவாப் அவர்களோடு போர் செய்ய முடியாதென்று சமாதானம் செய்துகொண்டார். ஆங்கிலேயர் வங்காளத்தில் முன் போலவே வியாபாரம் செய்து வந்தனர்.

**வங்காளத்தில் நவாப்பின் ஆட்சி:—** ஐரோப்பாவில் 1756ல் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் யுத்தம் தொடங்கிற்று. நவாப் சந்திர நாகூரிலிருந்த பிரெஞ்சுக்காரர்களோடு சேர்ந்து கொண்டு ஆங்கிலேயரை வங்காளத்திலிருந்து துரத்துவதற்கு வழி தேடிக் கொண்டிருந்தார். கிளைவ் இதையறிந்து சந்திர நாகூரின்மீது படையெடுத்து அதைப் பிடித்துக் கொண்டார். ஸிராஜ் உத்தௌலா ஒழுங்காக அரசு செய்யவில்லை. அவர் தம் ராஜ்யத்திலுள்ள பிரபுக்களையும் ஜனங்களையும் கொடுமையாய் நடத்தியதால் அவர்களும் அவரை வெறுத்தார்கள்.

ஸிராஜ் உத்தௌலா

**மீர்ஜாபருடன் இரகசிய உடன்படிக்கை:**— அங்கிலேயில் நவாப்பின் சேனாதிபதியா யிருந்த மீர்ஜாபர் என்பவர் கிளைவுடன் கூடிச் சதியாலோசனை செய்தார்; நவாப்புடன் யுத்தம் செய்து, ஜயித்துத் தம்மை நவாப்பாக்கினால் ஆங்கிலேயருக்கு ஏராளமான திரவியம் கொடுப்பதாகவும் வியாபார உரிமைகளை அளிப்பதாகவும் கிளைவினிடம் சொன்னார். கிளைவும் அதற்குச் சம்மதித்தார். இச் சதியாலோசனையை நடத்தி வந்த உமச்சந்திரர் என்னும் வர்த்தகருக்குக் கிளைவ் 40 லட்சம் ரூபாய் கொடுப்பதாய் ஒரு கள்ளப்பத்திரம் எழுதி, அதில் தம் கையெழுத்தையிட்டு, அட்மிரல் வாட்ஸன் சம்மதமில்லாமலே அவர் கை யெழுத்தையும் தாமே போட்டுக் கொடுத்தார்.

1757-ம் ௵ கிளைவ் ஒரு சேனையுடன் நவாப்பின் தலை நகராகிய மூர்ஷிதாபாத்தை நோக்கிச் சென்றார். இதை யறிந்த ஸிராஜ் உத் தௌலா ஒரு பெரிய சைனியத்துடன் மூர்ஷிதாபாத்துக்கும் கல்கத்தாவுக்கும் மத்தியிலுள்ள பிளாஸி என்னு மிடத்தில் தங்கியிருந்தார். இருதிறத்தாருக்கும் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. மீர்ஜாபர் ஒரு புறமும் சேராமல் ஒதுங்கி யிருந்தார். முடிவில் கிளைவே வெற்றி பெற்றார். நவாப்பின் சேனை முறியடிக்கப்பட்டது. நவாப் தப்பி ஓடுகையில் மீர்ஜாபரின் மகன் அவரைப் பிடித்துக் கொன்று விட்டான்.

வெற்றியடைந்த கிளைவ் மூர்ஷிதாபாத்தை அடைந்து, அங்கே மீர்ஜாபரை வங்காள நவாப்பாகச் செய்தார். மீர்ஜாபர் அவர் செய்த உதவிக்காக

நன்றி பாராட்டி, ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமான திரவியத்தை அவருக்கும் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களுக்கும் வெகுமதியாக அளித்தார். தவிர, இருபத்து நான்கு பர்காணங்கள் என்று சொல்லப்படும் ஒரு பெரிய ஜில்லாவையும் ஆங்கிலேயர்களுக்குக் கொடுத்தார். பின்னல் இந்த ஜில்லாவுக்காக அவர்கள் தமக்குச் செலுத்த வேண்டிய வரிப்பணத்தைக் கிளைவே அனுபவித்துக் கொள்ளும்படி கொடுத்து விட்டார். அதனல் அந்நாடு கிளைவின் ஜாகீர் என்று பெயர் பெற்றது. இந்தப் பர்காணங்கள் தான் ஆங்கிலேயர் இந்தியாவில் முதன் முதலாகப் பெற்ற நிலம்.

மீர் ஜாபர்

II. **வங்காளத்தில் ஆங்கிலேயர் அதிகார வளர்ச்சி:**—ஆங்கிலேயர் மீர்ஜாபரை வங்காள நவாப்பாக நியமித்த பொழுது டில்லியிலிருந்த மொகலாயச் சக்கரவர்த்தியிடம் உத்தரவு பெறவில்லை. பழைய வங்காள நவாப்புகளைப் போல மீர்ஜாபர் டில்லிச் சக்கரவர்த்திக்கு எவ்விதக் கப்பமும் கட்டவில்லை. இதனல் அவர் கோபங்கொண்டு தமது குமாரர் ஷா ஆலம் வசம் மீர் ஜாபரை எதிர்க்கும்படி ஒரு படையை அனுப்பினர். அப்பொழுது அயோத்தியில் நவாப்பாயிருந்த ஷுஜா உத்தெளலா தமது படையுடன் ஷா ஆலத்தோடு சேர்ந்து கொண்டார். அவர்கள் இருவரும் பாட்னவை முற்றுகை

செய்தனர். மீர்ஜாபர் தைரியமும் பலமும் இல்லாதவர். ஆகையால் வங்காளத்திலிருந்த கிளைவ் உதவிக்குச் சென்றார். கிளைவ் வருவதை அறிந்த அயோத்தி நவாப் ஓடிவிட்டார். ஷா ஆலம் தனியே நின்று ஆங்கிலேயரை எதிர்க்கமுடியாமல் சமாதானம் செய்து கொண்டார்.

**மீர்ஜாபரின் ஆட்சி:—** மீர்ஜாபருக்கு ஆளும் திறமையும் சுதந்திரமும் சிறிதளவுகூட இல்லை. ஆபத்துக் காலத்திலெல்லாம் அவர் ஆங்கிலேயரின் உதவியை எதிர் பார்க்க வேண்டியிருந்தது. அப்படி உதவி செய்யும் பொழுதெல்லாம் அவர்களுக்கும் கிளைவுக்கும் ஏராளமான பொருளை வழங்கி வந்ததால் அவருடைய பொக்கிஷம் காலியாயிற்று. அதனால் மீர்ஜாபர் சின்ஸுராவிலிருந்த டச்சுக்காரரின் உதவியைப் பெற்று, ஆங்கிலேயரை வங்காளத்திலிருந்து துரத்திவிட முயன்றார். அப்பொழுது கிளைவ் ஓர் படையை அனுப்பி, சின்ஸுராவில் டச்சுக்காரர்களை முறியடித்து அவ்வூரையும் பிடித்துக்கொண்டனர். பின்னல் டச்சுக்காரர் சமாதானம் செய்துகொண்ட பொழுது சின்ஸுரா அவர்களுக்குத்திருப்பி யளிக்கப்பட்டது. மீர்ஜாபரைக் கிளைவ் மன்னித்தார். கிளைவ் 1750-ல் இங்கிலாந்து சென்றதும் மீர்ஜாபர் வலிமையற்றிருந்த நிலைமையைத் தெரிந்து கொண்டு, டில்லியில் அப்பொழுது பாதுஷாவான ஷா ஆலம், மறுபடியும் அயோத்தி நவாப்புடன் சேர்ந்து கொண்டு வங்காளத்தின் மீது படைஎடுத்துவந்தார். ஆங்கிலேயர் பாதுஷாவையும் அயோத்தி நவாப்பையும் பாட்னு என்ற இடத்தில் தோற்கடித்துத் துரத்தினர்கள்.

**வங்காளத்தின் நிலைமை:—** அக்காலத்தில் வங்காளத்தில் ஆங்கிலேயருடைய பொருளாதார நிலைமை குறைவுற்றதாக இருந்தது. பாட்னுவிலிருந்த படைவீரர்கள் சம்பளப் பாக்கிக்காகக் கலகம் செய்யத் தயாராயிருந்தார்கள். வங்காள நவாப் கம்பெனியாருக்குக் கொடுக்க வேண்டிய பணம் அநேக மாதங்களாகப் பாக்கியிருந்தது. அக்காலத்தில் வங்காளக் கவர்னராயிருந்த **வான்ஸிடார்ட்** இக்கஷ்டங்களை நீக்கவழிதேட வேண்டியிருந்தது. மீர்ஜாபர் வயது மிகுந்து அரசு புரியச் சக்தி யில்லாமலிருந்ததால் கவர்னர் அவரை நீக்கிவிட்டு அவர் மருமகனை **மீர்காஸிம்** என்பவரை நவாப்பாக நியமித்தார். தன்னை நவாப் ஆக்கியதற்காக மீர்காஸிம் ஆங்கிலேயருக்குப் **பர்துவான், மிதுனப்பூர், சித்தகாங்** என்ற மூன்று ஜில்லாக்களையும் கொடுத்தார்.

**மீர்காஸிம் ஆட்சி :—** மீர் காஸிம் மிகுந்த திறமையுள்ளவர். மீர் ஜாபரைப் போல் பெயரளவில் நவாப்பாயிருப்பதில் அவருக்கு விருப்பமில்லை. மீர் ஜாபர் காலத்தில் ஏற்பட்டிருந்த கடனை யெல்லாம் அவர் பட்டத்திற்கு வந்தபின் அடைத்தார்; பின்னர் பொக்கிஷத்தில் திரவியத்தைச் சேர்த்து வைக்க ஆரம்பித்தார். அவர் திறமையும் நல்லெண்ணமும் கொண்டிருந்தும் அவருக்கு ஆங்கிலேயரால் இடையூறுகள் நேர்ந்தன. அடிக்கடி அவர்

மீர்காஸிம்

கள் மீர்காஸிமிடம் பணம் கேட்டுத் தொந்தரவு செய்து வந்தார்கள். இதனால் மீர்காஸிம் அவர்களிடம் வெறுப் படைந்தார்.

**கம்பெனியாருடன் மனஸ்தாபம்:**—கம்பெனி உத்தியோகஸ்தர்களுக்கு அக்காலத்தில் சம்பளம் மிகக் குறைவாயிருந்ததால் அவர்கள் சொந்தத்திலும் வர்த்தகம் செய்யலாம் என்று அனுமதிக்கப்பட்டிருந்தனர். மீர்ஜாபர் காலத்தில் கம்பெனி வர்த்தகச் சரக்குகளுக்கு மட்டுமன்றிக் கம்பெனி உத்தியோகஸ்தர்களுடைய சொந்தச் சாமான்களுக்கும் வரி தள்ளப்பட்டது. அதனால் உத்தியோகஸ்தர்கள் தங்கள் சொந்த லாபத்தைப் பெருக்கிக்கொண்டு கம்பெனி வர்த்தகத்தைக் கவனியாமல் இருந்தார்கள். அவர்கள் விலைகுறைந்த காலத்தில் கம்பெனிச் சரக்குகளை விற்றும், விலையேறிய காலத்தில் தங்கள் சொந்தச் சரக்குகளை விற்றும் வந்தார்கள். ஆங்கிலேயருடைய சரக்குகளுக்கு மட்டும் வரியில்லாமல் இருந்ததே ஒழிய மற்றைச் சுதேச வியாபாரிகள் வரிசெலுத்தவேண்டி யிருந்தது. ஆங்கிலேய வர்த்தகர்கள் சுதேச வியாபாரிகளிடம் பணம் பெற்றுக்கொண்டு, அவர்களும் ஆங்கிலேயக் கொடியை வைத்துக்கொண்டு, நவாப்புக்கு வரி செலுத்தாமல் வர்த்தகம் செய்வதற்கு உதவி செய்தார்கள். இக்காரணங்களால் நவாப்புக்கும் ஆங்கிலேயருக்கும் விரோதம் உண்டாயிற்று.

**மீர்காஸிமுக்கும் கம்பெனியாருக்கும் சண்டை: பாட்னா படுகொலை:**—மீர்காஸிம் மூர்ஷிதாபாத்தை விட்டுத் தம் ராஜதானியை **மாங்கீர்** என்னுமிடத்திற்கு மாற்றி, அங்குள்ள

பழைய கோட்டையில் வசித்து வந்தார். அவர் தம் சொந்தப் பலத்தினால் ஆங்கிலேயரை எதிர்க்க முடியாத தால் டில்லிச் சக்கரவர்த்தியையும் அயோத்தி நவாப்பை யும் உதவிக்கு அழைத்தார். பாட்னாவிலிருந்த பல ஆங்கிலேயரை அவர் சிறைப்படுத்தினார். மீர்காஸிமு டைய விரோதத்தை அறிந்து கல்கத்தாவிலிருந்த ஆங் கிலேயர் மீர்ஜாபரை மறுபடி நவாப்பாக்கினார்கள். **மேஜர் ஆடம்ஸ்** என்னும் ஆங்கிலேயர் ஒரு படையுடன் சென்று மீர்காஸிமை மூன்று முறை தோற்கடித் தார். ஆடம்ஸ் பின்னும் மாங்கீரை எதிர்க்கச் சென்ற பொழுது மீர்காஸிம் அங்கிருந்து பாட்னாவுக்கு ஓடிச் சென்றார். ஆடம்ஸ் பின்னும் தம்மைத் தொடர்ந்து பிடிக்க வந்தால் தம்மிட மிருந்த ஆங்கிலக் கைதிகளை யெல்லாம் கொலைசெய்து விடுவதாக மீர்காஸிம் பய முறுத்தினார். ஆடம்ஸ் மாங்கீரைப் பிடித்துக் கொண்டு பாட்னாவை நோக்கிப் புறப்பட்டார். அதனால் மீர் காஸிம் கோபமடைந்து, தம்மிட மிருந்த ஆங்கிலக் கைதிகளை யெல்லாம் கொலைசெய்ய உத்தரவிட்டார். அவ்வாறே கைதிகள் கொலை செய்யப்பட்டார்கள்.

**பக்ஸார் சண்டை:**—பின்னர் மீர் காஸிம் அயோத் திக்குச் சென்று, ஷா ஆலம், ஷுஜா உத் தௌலா ஆகிய இருவருடனும் சேர்ந்துகொண்டு 1764-ம் வரு மேமீ ஆங்கிலேயரை எதிர்த்தார். ஆங்கிலேய தள கர்த்தர் **ஸர் ஹெக்டர் மன்ரோ** என்பவர் **பக்ஸார்** என் னுமிடத்தில் அம் மூவர்களையும் முற்றிலும் தோற் கடித்தார். ஷா ஆலம் கீழ்ப்படிந்தார். மீர்காஸிமும் ஷுஜா உத் தௌலாவும் பின்வாங்கி ஓடினார்கள்.

மீர்காஸிம் போனவிடம் தெரியவில்லை. ஷூஜா உத்தௌலா பின்னர் ஆங்கிலேயருக்குப் பணிந்தார்.

ஸர் ஹெக்டர் மன்ரோ

பக்ஸார் சண்டை பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் வளர்ச்சிக்குக் காரணமா யிருந்தபடியால் அது மிகவும் முக்கியமானது. ஆங்கிலேய சேனைகளின் திறமையையும் பலத்தையும் வெளிப்படையாகக் காட்டியதுடன் வங்காளத்தில் தகுதியில்லாத ஒருவரை நவாப்பாக வைப்பதனால் விளையக்கூடிய கெடுதிகளையும் அது தெளிவாகத் தெரிவித்தது.

**கிளைவ் வங்காளக் கவர்னர் (1765-67):—** பக்ஸார் யுத்தம் நடந்து கொஞ்ச காலத்திற்கெல்லாம் (1765-ல்) கிளைவ் இந்தியாவுக்குத் திரும்பவும் வந்தார். பாட்னவில் நடந்த படுகொலையையும், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் வங்காளத்தில் செய்துவந்த பல அநீதிகளையும் கேள்விப்பட்டு, வங்காள ஆட்சியை ஒழுங்குபடுத்துவதற்காகச் சீமையிலிருந்த கம்பெனி அதிகாரிகள் அவரை அனுப்பினர்கள். அவர் வங்காளக் கவர்னராயும் சேனதிபதியாயும் நியமிக்கப்பட்டிருந்தார்.

**அலகபாத் உடன்படிக்கை (1765):—** கிளைவ் கல்கத்தா வந்து சேர்ந்ததும் அலகபாத்துக்குச் சென்று, அங்கு ஷா ஆலத்துடனும் ஷூஜா உத்தௌலாவுடனும் ஒரு

உடன்படிக்கை செய்தார். அதன் பிரகாரம் ஷுஜா உத்தௌலா ஆங்கிலேயருக்கு யுத்தத்தில் ஏற்பட்ட நஷ்டத்திற்காக 50-லக்ஷம் ரூபாய் கொடுத்தார். ஷா ஆலம் அலகபாத் கோரா மாகாணங்களைப் பெற்றுக்கொண்டார். வங்காளம் பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களில் ஆங்கிலேயர்கள் வரிவசூல் செய்து கொள்ளலாமென்றும், அதற்காக வருஷத்திற்கு 26-லக்ஷம் ரூபாய் ஷா ஆலத்திற்கு அவர்கள் கொடுக்க வேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று.

ஷுஜா உத்தௌலா

கிளைவ் வங்காளத்தில் வரி வசூல் செய்வதற்குச் சுதேச உத்தியோகஸ்தர்களை நியமித்தார். அவர்களுக்குத் திவான்கள் என்று பெயர். அவர்களுக்குக் கீழும் பல உத்தியோகஸ்தர்களிருந்தனர். நியாய விசாரணை செய்வதற்கும், தேசத்தைப் பாதுகாப்பதற்கும் கிளைவ் இரண்டு நாஜிம்களை நியமித்தார். வங்காள நவாப்பான நாஜிம் உத்தௌலா பெயரளவில் தான் நவாப்பாக இருந்தார்; வருஷந்தோறும் ஏராளமான உபகாரச் சம்பளம் பெற்று வந்தார். கிளைவ் ராணுவத்தை மட்டும் கம்பெனியார் கையில் வைத்துக் கொண்டார். வசூலிக்கப்பட்ட பணத்தைக் கம்பெனியார்கள் பெற்றுவந்தார்கள். இவ்வாறு அதிகாரம் இரண்டு பிரிவாகப் பிரித்து நடத்தப்பட்ட ஆட்சிக்கு இரட்டை ஆட்சி என்று பெயர்.

**கிளைவின் மற்றைச் சீர்திருத்தங்கள்:**-கிளைவ், கம்பெனி உத்தியோகஸ்தர்களிடத்திலும் ராணுவத்திலும் இருந்த சில கெடுதல்களை நீக்கிச் சீர்திருத்தம் செய்தார். கம்பெனி உத்தியோகஸ்தர்கள் குறைந்த சம்பளம் பெற்றதால் சொந்தத்தில் வர்த்தகம் செய்து ஏராளமாகப் பொருள் சம்பாதித்து வந்தார்கள். அச் சொந்த வர்த்தகத்தை நிறுத்தி, அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கும்படி அவர் ஏற்பாடு செய்தார். ராணுவ வீரர்கள் யுத்த காலங்களில் பெற்றுவந்த இரட்டைப் படியையும் அவர் நிறுத்தினர்.

**கிளைவின் வேலை:** —இவ்வாருகப் பல சீர்திருத்தங்களைச் செய்து விட்டு கிளைவ் 1767ல் இங்கிலாந்துக்குத் திரும்பினர். இந்தியாவில் ஆங்கில ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு அவர் செய்த அரிய காரியங்களை மறந்து, சிலர் அவர்மீது குற்றங் கூறியதனல் விசனமுற்று, மனம் நொந்து 1774-ம் வூ அவர் தற்கொலை செய்துகொண்டார்.

பயிற்சி

1. மீர்ஜாபர் ஏன் நவாப் பதவியினின்றும் நீக்கப்பட்டார்?

2. மீர்காஸிமுக்கும் ஆங்கிலேயருக்கும் ஏன் சண்டை ஏற்பட்டது?

3. பக்ஸார் யுத்தம் யார் யாருக்கு நடந்தது? எவ்வருஷம்?

4. அலகபாத் உடன்படிக்கை யார் யாருக்கு எப்பொழுது நடந்தது? அது நம் நாட்டுச் சரித்திரத்தில் எவ்வாறு முக்கிய மானது?

5. இரட்டையாட்சி என்பதென்ன? அதை யார் எவ்விடத்தில் ஸ்தாபித்தார்?

காலக் குறிப்பு:—

| | | |
|---|---|---|
| கி.பி. | 1756 | ஸிராஜ் உத் தௌலா கல்கத்தாவைப் பிடித்தல் |
| ,, | 1757 | பிளாஸிச் சண்டை. மீர்ஜாபர் நவாப்பானது |
| ,, | 1760 | கிளைவ் இங்கிலாந்து செல்லுதல் |
| ,, | 1763 | ஆங்கிலேயருக்கும் மீர் காஸிமுக்கும் சண்டை |
| ,, | 1764 | பக்ஸார் யுத்தம் |
| ,, | 1765 | கிளைவ் வங்காளக் கவர்னர்; அலகபாத் உடன்படிக்கை |
| ,, | 1767 | கிளைவ் இங்கிலாந்துக்குத் திரும்புதல் |

---

## 25. வாரன் ஹேஸ்டிங்ஸ் (1772—85)

ராபர்ட் கிளைவ் ஆங்கிலேய அதிகாரத்தை வங்காளத்தில் எவ்விதம் ஸ்தாபித்தாரென்று முன் பாடத்தில் படித்தீர்களல்லவா? அவருக்குப் பின் வந்த கவர்னர்களும் கவர்னர் ஜெனரல்களும் எவ்விதம் ஆங்கில ராஜ்யத்தை இந்தியாவில் பலப்படுத்தினர்களென்பதைக் கவனிப்போம்.

கிளைவுக்குப் பின் வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார்; இரட்டை யாட்சியால் வங்காளத்தில் அநேக தீங்குகள் உண்டானதால் அதை ஒழித்து விட்டார்; சுதேச உத்தியோகஸ்தர்களுக்குப் பதிலாக வரி வசூலிப்பதற்கு ஐரோப்பியர்களை ஜில்லாக் கலெக்டர்களாக நியமித்தார். அவர்கள் அந்தந்த ஜில்லாக்களில் நியாய விசாரணையும் செய்து வந்தார்கள். கல்கத்தாவில் வாரன்ஹேஸ்டிங்ஸ் இரண்டு

அப்பீல் கோர்ட்டுகளை நியமித்தார். இந்து முகம்மதியச் சட்டங்கள் எழுதப்பட்டன.

## சுதேச மன்னர்களுடன் சம்பந்தம்

I. **முதல் மைசூர் யுத்தம் (1767--69)**:—மைசூர் அரசரான **ஹைதர் அலி** சிறந்த போர்வீரர்; நாட்டை ஆளுவதிலும் சாமர்த்திய முடையவர். அவர் தென்னிந்தியாவையே ஐயிக்க எண்ணம் கொண்டார்; நிஜாம் ராஜ்யத்திலும், முகம்மது அலிக்குச் சொந்தமான கர்நாடகத்திலும் ஒரு பாகத்தைப் பிடிக்க ஆரம்பித்தார். ஆங்கிலேயர்கள் நிஜாமையும் மகாராஷ்டிரர்களையும் சேர்த்துக்கொண்டு அவரை எதிர்க்க நினைத்தனர். ஹைதர் அலி, நிஜாமையும் மகாராஷ்டிரர்களையும் தந்திரத்தினால் ஆங்கிலேயரிடமிருந்து பிரித்து விட்டார். பிறகு அவர் சென்னையின்மேல் படையெடுத்துச் சென்றார்; ஆங்கிலேயர் யுத்தத்துக்குத் தயாராயில்லாததால் அவரோடு சமாதானம் செய்து கொண்டனர்.

II. **முதல் மகாராஷ்டிர யுத்தம் (1778—82)**:—1772ல் நான்காவது பீஷ்வாவான மாதவராவ் இறக்கவும் அவர் தம்பி நாராயண ராவ் பீஷ்வா ஆனார். நாராயண ராவ் தமது சிறிய தகப்பனாரான ரகுநாத ராவின் தூண்டுதலினால் கொலையுண்டார். ஆனால் பிறகு **ரகுநாத ராவ்** பட்டத்துக்கு வந்தார். இப்படி யிருக்கையில் நாராயண ராவ் மனைவிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு **மாதவ ராவ் நாராயண** என்று பெயரிட்டார்கள். சில மகாராஷ்டிரர்கள் அக் குழந்தையைப்

பீஷ்வா ஆக்க வேண்டுமென்று கலகம் செய்தார்கள். அதற்குத் தலைவர் **நானுபர்னுவிஸ்** என்பவர். 1775ல் ரகுநாத ராவ் ஆங்கிலேயர்கள் தமக்கு உதவி புரிந்தால் சால்ஸெட், பஸ்ஸின் தீவுகளை அவர்களுக்குக் கொடுப்பதாகப் பம்பாய் கவர்னரோடு **சூரத்** என்னுமிடத்தில் உடன்படிக்கை செய்து கொண்டார். 1776ல் நானுபர்னுவிஸ் ஆங்கிலேயர்கள் மகாராஷ்டிர விவகாரங்களில் தலையிடாமலிருந்தால் சால்ஸெட்டை அவர்களுக்குக் கொடுப்பதாகப் **புரந்தர்** என்னுமிடத்தில் கவர்னர் ஜெனரலோடு உடன்படிக்கை செய்து கொண்டார். இங்கிலாந்திலுள்ள கம்பெனி அதிகாரிகள் பம்பாய்க் கவர்னரின் உடன்படிக்கையை ஆமோதித்தார்கள். மம்பாய்க் கவர்னர் அனுப்பிய சேனை மகாராஷ்டிரர்களால் தோற்கடிக்கப்பட்டது. பிறகு நடந்த சண்டைகளில் ஆங்கிலேயர் ஆமதாபாத்தையும், குவாலியரையும் பிடித்துக் கொண்டார்கள். ஆனால் அவர்களுக்குச் சில விடங்களில் தோல்வி யுண்டாயிற்று. 1782ல் **சால்பை** என்ற இடத்தில் ஆங்கிலேயர்கள் மகாராஷ்டிரர்களோடு ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அதன்படி ஆங்கிலேயர்கள் **சால்ஸெட்** தீவைப் பெற்றார்கள். ரகுநாத ராவுக்குப் பென்ஷன் கொடுக்கப்பட்டது. 2-வது மாதவ ராவ் பீஷ்வா ஆனார். அவருக்கு நானுபர்னுவிஸ் மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

III. **இரண்டாவது மைசூர் யுத்தம்**(1780-84):—கி. பி. **1778ம் ஹு** ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சண்டை யுண்டாகவே இந்தியாவில்

ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமான புதுச்சேரியைக் கைப்பற்றிய பின் மாஹியையும் கைப் பற்றச் சென்றனர். அவர்கள் ஹைதரின் இராஜ்யத் தின்வழியேபோகவேண்டியிருந்தது. அதனுல் ஹைதர் கர்நாடகத்தின்மேல் படையெடுத்துக் காஞ்சி புரத்தை யும் கொள்ளை யடித்தார். ஹேஸ்டிங்ஸ் சென்னைக்கு அனுப்பிய இரண்டு சேனைகள் ஹைதரால் தோற்கடிக் கப்பட்டன. ஹேஸ்டிங்ஸ் பிற்கு ஸர் அயர்கூட் என் பவரிடம் ஒரு பெரிய சேனையை யனுப்ப, 1781ல் அவர் ஹைதரை, பறங்கிப்பேட்டை, போளிலூர், சோளிங்க புரம், ஆரணி என்ற இடங்களில் தோற்கடித்தார். ஹைதர் இறந்த பிறகு 1784-ம் வூ அவர் குமாரர் திப்பு சுல்தான் ஆங்கிலேயருடன் மங்களூரில் உடன் படிக்கை செய்து கொண்டார். அதன்படி அவரவர்கள் நாடுகள் அவரவர்களிடம் திரும்பக் கொடுக்கப்பட்டன.

IV. **ஹேஸ்டிங்ஸ் பணம் சேகரித்த விதம்:—** ஹேஸ் டிங்ஸ் கம்பெனியின் பொருளாதார நிலைமையைச் சீர் படுத்துவதற்குச் சில ஏற்பாடுகள் செய்தார். வங்காள நவாப்பின் உபகாரச் சம்பளம் பாதியாகக் குறைக்கப் பட்டது. டில்லிச் சக்கரவர்த்தியான ஷா ஆலம் மகாராஷ் டிரர்களுடன் சேர்ந்து கொண்டதனுல் அவருக்குக் கொடுத்துவந்த உபகாரச் சம்பளமான 26 லட்சம் ரூபாயையும் ஹேஸ்டிங்ஸ் நிறுத்திவிட்டார். அவருக்குக் கொடுக்கப்பட்ட அலகபாத், கோரா என்ற நாடுகளை அயோத்தி நவாபுக்கு 50லக்ஷம் ரூபாய்க்கு ஹேஸ்டிங்ஸ் விற்றுவிட்டார்; ரோஹிலருக்கு விரோதமாக அயோத்தி

நவாபுக்கு ஒரு சைனியம் கொடுத்து உதவி, 40 லக்ஷம் ரூபாய் பரிசாகப் பெற்றார்.

மைசூர், மகாராஷ்டிர யுத்தங்களால் ஆங்கிலேயர்களுக்கு ஏராளமான பணம் செலவழிந்து விட்டது. அயோத்தி நவாப் ஆங்கிலேயருக்குப் பெருந்தொகை கொடுக்க வேண்டியதிருந்தது. ஹேஸ்டிங்ஸ் அதைக் கொடுக்கும்படி வற்புறுத்தினர். அவர் தம்மிடம் பணமில்லை யென்றும் தம் தாயாரிடமும் பாட்டியிடமும் ஏராளமான பணமிருப்பதாகவும் சொன்னர். ஹேஸ்டிங்ஸ் ஆங்கிலேயப் படைகளை யனுப்பி, அயோத்தி பீகம்மார்களைத் தொந்தரவு செய்து, அவர்களுடைய திரவியத்தைப் பிடுங்கிக் கொண்டார். ஹேஸ்டிங்ஸ் காசி யரசரான செயித் சிங்கை அதிகப் பொருள் கொடுக்கும்படி கேட்டார். அவர் ஒருதரம் கொடுத்து, மறுபடியும் கேட்டபோது கொடுக்க மறுத்துவிட்டார். ஹேஸ்டிங்ஸ் கோபங்கொண்டு அவரை விலக்கிவிட்டு, அவரது தம்பி புதல்வரை அரசராக்கினர். அதனல் முன் கொடுத்ததைவிட இரண்டு மடங்கு கப்பங்கட்டுவதாக அவர் ஒப்புக்கொண்டார்.

ரெகுலேடிங் ஆக்ட் அல்லது ஒழுங்கு முறைச் சட்டம்:— இந்தியாவில் கம்பெனியார் தாங்கள் செய்த போர்களினல் கடன்காரரானர்கள். ஆகையால் கம்பெனி அதிகாரிகள் இங்கிலீஷ் பார்லிமெண்டாரைத் தங்களுக்கு ஒரு கோடி ரூபாய் கடன் தரும்படி வேண்டினர்கள். பார்லிமெண்டார் பணம் கொடுக்குமுன் கம்பெனியின் அரசியலையும் வரவு செலவு திட்டங்களையும்

மேற்பார்வையிடத் தங்களுக்கு அதிகாரம் கொடுக்கப் படவேண்டுமென்றும், அப்படியானல்தான் பணம் கடனுகக் கொடுக்க முடியுமென்றும் சொல்லிவிட்டார்கள். கம்பெனியார் அதை ஒப்புக்கொண்டதின் பேரில் கி. பி. 1773ல் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அதுவே ஒழுங்குமுறைச் சட்டம் (Regulating Act) எனப்படும். அதன்படி கல்கத்தாவில் உள்ள கவர்னர், **கவர்னர்ஜெனரல்** என்ற பதவியை வகித்து ஆளவேண்டுமென்று ஏற்பாடாயிற்று. சென்னை பம்பாய்க் கவர்னர்கள் அவருக்குட்பட்டு அடங்கி நடக்கவேண்டும். கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூற நான்கு பேர்களடங்கிய ஒரு சபை கொடுக்கப்பட்டது. கல்கத்தாவில் ஒரு உயர்தர நியாய ஸ்தலம் ஏற்படுத்தப்பட்டது.

**ஹேஸ்டிங்ஸின் கடைசிக்காலம்:**—ஹேஸ்டிங்ஸ் வேலையை விட்டு இங்கிலாந்துக்குச் சென்றவுடன், அவரது விரோதிகள் அவர் லஞ்சம் வாங்கியதாகவும், அயோத்தி பீகம் மார்களை வற்புறுத்திப் பணம் பெற்றதாகவும் அவர் மீது குற்றம் சாட்டினர்கள். பார்லிமெண்டில் ஏழு வருட விசாரணைக்குப் பின் அவர் குற்றவாளியல்லவென்பது தீர்மானிக்கப்பட்டது. வருஷம் ஒன்றுக்கு நாற்பதினயிரம் ரூபாய் வீதம் அவருக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டது.

கி. பி. 1784ம் வருஷத்தில் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் “**பிட் இந்தியச் சட்டம்**” என்ற ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அதன்படி கம்பெனியின் இந்திய அரசாங்கத்தை மேற்பார்வையிட இங்கிலாந்தில் **போர்ட்**

ஆப் கன்ட்ரோல் என்ற சபை ஏற்பட்டது. இந்திய அரசாங்கத்தார் பார்லிமெண்டின் அனுமதியின்றிச் சுதேச மன்னர்களுடன் சண்டை, சமாதானங்கள் செய்து கொள்ளக் கூடாது என்பதும் தீர்மானிக்கப்பட்டது.

பயிற்சி

1. ரெகுலேடிங் ஆக்ட் என்றால் என்ன?

2. வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்த சீர்திருத்தங்கள் எவை?

3. அவர் ஆங்கிலக் கம்பெனியாரின் பொருளாதார நிலைமைக்காக என்ன செய்தார்?

காலக் குறிப்பு:—

கி. பி. 1767-69 முதல் மைசூர் யுத்தம்
,, 1773 ரெகுலேடிங் ஆக்ட்
,, 1774 ஹேஸ்டிங்ஸ் முதல் கவர்னர் ஜெனரலாதல்
,, 1778-82 முதல் மகாராஷ்டிர யுத்தம்
,, 1780-84 இரண்டாவது மைசூர் யுத்தம்
,, 1784 பிட் இந்தியச் சட்டம்

## 26. கார்ன்வாலிஸ் பிரபு (1786—93)

**சீர்திருத்தங்கள்:—** கார்ன்வாலிஸ் பிரபு உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களை அதிகப்படுத்தி, அவர்கள் லஞ்சம் வாங்காமலிருப்பதற்குக் கண்டிப்பான ஏற்பாடுகள் செய்தார்; உத்தியோகஸ்தர்கள் சொந்த வியாபாரம் செய்யக் கூடாதென்று ஏற்பாடு செய்தார். ஆங்கிலக் கலெக்டர்கள் வரி வசூல் மாத்திரம் செய்து வரும்படி உத்தரவு செய்யப்பட்டார்கள். நியாய

விசாரணைக்கு ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு ஜில்லா நியாயாதிபதி நியமிக்கப்பட்டார். அவருக்குக் கிரிமினல் அதிகாரமும் போலீசாரை மேற்பார்வையிடும் அதிகாரமும் கொடுக்கப்பட்டன.

**சாஸ்வத நிலவரித் தீர்மானம்:**— கார்ன்வாலிஸ் பிரபு நில சம்பந்தமாக ஒரு சீர்திருத்தம் செய்தார். வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் வங்காளத்திலும் ஒரிஸாவிலும் கம்பெனி நிலங்களை வருஷா வருஷம் ஏலம் போட்டு அதிகத் தொகைக்குக் கேட்பவர்களுக்கு விடுவது வழக்கம். ஜமீன்தார்கள் அவைகளை எடுத்துத் தங்கள் இஷ்டப்படி வரி விதித்து வசூல் செய்து, அதில் ஒரு பாகத்தைக் கம்பெனியாருக்குச் செலுத்திவிட்டு மீதத்தைத் தாங்கள் வைத்துக் கொள்வார்கள். ஆனால் மறு வருஷம் அந்த நிலங்கள் ஒரு வேளை தங்களை விட்டு மற்றவர்களிடம் போகலாமாகையால் ஜமீன்தார்கள் அந்த நிலங்களுக்கு யாதொரு உரமும் போடாமல் விட்டுவிடுவது வழக்கம். ஆகையால் நிலங்கள் நாளடைவில் செழிப்புக் குன்றின. கார்ன்வாலிஸ் பிரபு ஜமீன்தார்களை அவரவரது நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாக்கி, அவர்கள் கொடுக்க வேண்டிய வரியையும் சாஸ்வதமாகத் தீர்மானம் செய்து விட்டார். அந்த ஏற்பாட்டுக்கு **சாஸ்வத நிலவரித் தீர்மானம்** என்று பெயர். ஜமீன்தார்கள் அதன் பிறகு அக்கறை எடுத்துக் கொண்டு, காடுகளை வெட்டிச் சீர்திருத்தி, நிலங்களைப் பண்படுத்தினார்கள். ஜமீன்தார்கள் நிலங்களுக்கு உரம்போட்டு அதன் செழிப்புக் குறையாமல் வைத்திருந்தார்கள். ஆனால் இந்த ஏற்பாட்டின்படி

ஜமீன்தார்களுக்கு நிலங்களின் வரும்படி எவ்வளவு அதிகரித்தாலும் ராஜாங்கத்தார் வரியை அதிகப் படுத்த முடியாது.

**பிரவேசியாக் கொள்கை:**— "இந்தியாவில் சுதேச மன்னர்களின் விவகாரங்களில் கம்பெனியார் தலை யிடாமலிருத்தல்" என்ற கொள்கைக்குப் **பிரவேசியாக் கொள்கை** என்று பெயர். கார்ன்வாலிஸ் பிரபு முதலா வதாக இக் கொள்கையைக் கைக்கொண்டவர்.

**மூன்ருவது மைசூர் யுத்தம் (1790—92):**— கார்ன் வாலிஸ் பிரபு கவர்னர் ஜெனரலாக இந்தியாவுக்கு வரும்பொழுது சுதேச மன்னர்கள் விஷயங்களில் தலையிடக் கூடாதென்ற தீர்மானத்துடன் வந்தார். ஆனல் அது சாத்தியப்படவில்லை.

ஹைதர் அலி இறந்த பின் அவரது குமாரர் திப்பு சுல்தான் மைசூரை ஆண்டு வந்தார். அவர் ஆங்கிலே யரை இந்தியாவை விட்டுத் துரத்தவேண்டுமென்ற கொள்கையுடையவர்; மிக்க தைரியமான யுத்த வீரர். அவரது பலத்தைக் கண்டு ஹைதராபாத் நிஜாமும் மகாராஷ்டிரர்களும் பயந்து ஆங்கிலேயரோடு சேர்ந்து கொண்டு அவரது பலத்தை அடக்கவேண்டுமென்று நினைத்தார்கள். முதலில் கார்ன்வாலிஸ் அவர்களது எண்ணத்துக்கு உடன்பட வில்லை; அவர்களோடு சிநேக உடன்படிக்கை செய்து கொள்ளவுமில்லை. ஆனல் கி. பி. 1790ல் திப்பு சுல்தான் திருவாங்கூர் மீது படையெடுத்தார். திருவாங்கூர் அரசர் ஆங்கி லேயருக்கு நண்பரானதால் கார்ன்வாலிஸ் உடனே

நிஜாம், மஹாராஷ்டிரர் ஆகிய இவர்களது உதவியைப் பெற்றுக்கொண்டு சண்டைக்குத் தயாரானார். கார்ன்வாலிஸ் ஒரு சேனையுடன் மைசூருக்குச் சென்று, 1791ல் பங்களூரைக் கைப்பற்றினார். திப்பு தோல்வியுற்று ஸ்ரீரங்கப்பட்டணத்துக்குச் சென்றார். ஆங்கிலேயர் அப்பட்டணத்தை முற்றுகை செய்தார்கள். திப்பு சுல்தான் ஸ்ரீரங்கப்பட்டணத்தில் கார்ன்வாலிஸுடன் 1792ல் சமாதானம் செய்து கொண்டார். அந்த உடன்படிக்கையின்படி திப்பு ஆங்கிலேயர்களுக்கு யுத்தச் செலவுக்காக 3 கோடி ரூபாயும் தமது இராஜ்யத்தில் பாதியும் கொடுக்கவேண்டியதாயிற்று. அவர் பொக்கிஷத்தில் பணமில்லாததால் அதற்குப் பதிலாகத் தமது இரண்டு குமாரர்களையும் கார்ன்வாலிஸ் பிரபுவிடம் ஒப்புவித்தார். ஆங்கிலேயர்கள் திப்பு கொடுத்த நாட்டில் சேலம், திண்டுக்கல், மதுரை, மலையாளம் என்ற ஜில்லாக்களைத் தாங்கள் வைத்துக்கொண்டு, நிஜாமுக்குக் கடப்பை, பல்லாரி, அனந்தபூர் என்ற ஜில்லாக்களையும், மகாராஷ்டிரர்களுக்குக் கிருஷ்ணா நதிக்குத் தெற்கேயுள்ள நாடுகளையும் கொடுத்தார்கள்.

## பயிற்சி

1. சாஸ்வத நிலவரித் தீர்மானம் என்பது என்ன? அதனால் ஏற்பட்ட நன்மை தீமைகள் எவை?

2. கார்ன்வாலிஸ் ராஜ்ய விஷயத்தில் அநுஷ்டிக்க நினைத்த கொள்கை என்ன?

3. திப்பு சுல்தானுடன் ஆங்கிலேயர் செய்த யுத்தத்தின் முடிவு என்ன?

——

## 27. ஸர் ஜான் ஷோர் (1793-98)

கார்ன்வாலிஸுக்குப் பின் **ஸர் ஜான் ஷோர்** என்பவர் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அவர் சுதேச ராஜ்யங்களின் விவகாரங்களில் தலையிடக்கூடாதென்று தீர்மானித்துக் கொண்டார்.

அதையறிந்த மகாராஷ்டிரர்கள் 1795-ம் வருஷம் பீஷ்வாவின் தலைமையின்கீழ் நிஜாமுக்கு விரோதமாக யுத்தம் செய்ய ஆரம்பித்தனர். **கார்டா** என்ற இடத்தில் நடந்த சண்டையில் நிஜாம் முற்றிலும் தோல்வியடைந்து, தம் நாடுகளில் பாதியையும் மூன்று கோடி ரூபாயையும் மகாராஷ்டிரர்களுக்குக் கொடுக்கும்படி நேர்ந்தது. அதனால் நிஜாம் ஆங்கிலேயர் மீது வெறுப்படைந்து தமது சேனைக்கு யுத்தப் பயிற்சி செய்விக்கப் பிரெஞ்சுத் தளகர்த்தர்களை நியமித்தார்.

**மகாராஷ்டிரர்களின் ஆதிக்கம்:—** அக்காலத்தில் மகாராஷ்டிரர்களுள் முக்கியமான தலைவர்கள் இருவர். அவர்களில் பீஷ்வாவின் மந்திரியாகிய **நானு பர்னுவிஸ்** ஒருவர்; மற்றொருவர் **மகதோஜி ஸிந்தியா**. நானு பர்னுவிஸ் அரசியல் விஷயங்களில் மிகவும் சாமர்த்தியமுடையவர். அவர் மகாராஷ்டிரர்களை வெகுகாலம் ஒற்றுமையுடனிருக்கும்படி செய்தார். அவர் கார்ன்வாலிஸ் பிரபுவோடு சேர்ந்துகொண்டு, திப்புவை எதிர்த்துப் போர் செய்து, "கொடுக்கப்பட்ட ஜில்லாக்களில்" (Ceded Districts) மூன்றில் ஒரு பங்கை அடைந்தார். மகாராஷ்டிரர்கள் நிஜாமை எதிர்த்துப் போர் செய்ததும் இவரது ஏற்பாட்டினலேதான். பீஷ்வா

வான மாதவ ராவ் நாராயணர் இறக்கவும், இரண்டாவது பாஜி ராவ் பீஷ்வா ஆனார். நானா பர்னவிஸ் சிறையிலடைக்கப்பட்டார்; ஆனால் சீக்கிரத்தில் விடுவிக்கப்பட்டார். ஆயினும், அவருக்கு முன்போலச் செல்வாக்கு ஏற்படவில்லை. 1800-ம் வருஷத்தில் அவர் இறந்தார். அதுமுதல் மகாராஷ்டிரர்களுக்குள் ஒற்றுமையில்லாமல் கலகங்கள் உண்டாயின. அதனாலேயே மகாராஷ்டிர அதிகாரம் சீர்குலைந்தது.

குவாலியர் நாட்டை யாண்ட மகதோஜி ஸிந்தியா அயல் நாட்டார்களை இந்தியாவிலிருந்து துரத்தவேண்டுமென்ற கருத்துடையவர். அவர் ராஜ தந்திரத்திலும், யுத்தம் செய்வதிலும் சாமர்த்தியமுடையவர். அவர் தமது படைகளைப் பயிற்றுவிக்கப் பிரெஞ்சு ராணுவ உத்தியோகஸ்தர்களை நியமித்தார். முகம்மதியர்களும் ராஜபுத்திரர்களும் அடங்கிய ஒரு வலிமை பொருந்திய சேனை அவரிடமிருந்தது. அவர் தமது சாமர்த்தியத்தால் ஹிந்துஸ்தானத்துக்கே ஒரு பெரிய தலைவராக ஆய்விட்டார். மகதோஜி ஸிந்தியா டில்லிச் சக்கரவர்த்தியான ஷா ஆலம் என்பவரை ஆங்கிலேயரிட மிருந்து தம்மிடம் வந்து சேரும்படி தூண்டினார்; சக்கரவர்த்தியின் ராஜ்ய காரியங்களைக் கவனிப்பதற்குப் பீஷ்வாவைப் பிரதிநிதியாக நியமிக்கச் செய்தார். அவரது அதிகாரம் பலமடைவதைக் கண்டு ஆங்கிலேயரும் கவலை கொண்டனர். ஆனால் அவர் 1794-ம் வருஷத்தில் இறந்து போனார்.

**அயோத்தி நவாப்:**—ஸர் ஜான் ஷோர் கவர்னர் ஜெனரலாயிருக்கும் பொழுது அயோத்தி நவாபான

அசாப் உத் தௌலா இறந்து போனதினால் யார் பட்டத்துக்கு வருவதென்பதைக் குறித்து விவாதம் ஏற்பட்டது. ஸர் ஜான் ஷோர் முதலில் தப்பிதமாக ஒருவரை நவாபாக ஒப்புக்கொண்டார்; பிறகு 1798-ம் வருஷத்தில் கிரமமான பாத்தியஸ்தராகிய சாதத் அலி என்பவரை நவாபாகச் செய்தார். அப்பொழுது அந்த நவாப் ஆங்கிலேயருக்கு அலகபாத் கோட்டையைக் கொடுத்ததோடு அவர்களுக்குக் கொடுத்துவந்த கப்பத் தொகையையும் அதிகப்படுத்தினர்.

**அஹல்யா பாய்:**—அஹல்யா பாய் என்பவள் இந்தூரை ஆண்ட மகாராஷ்டிரத் தலைவராகிய கண்டேராவின் மனைவி. அவளுடைய கணவர் இறந்ததும் அவள் அந்த ராஜ்யத்தின் அதிகாரத்தைத் தானே வகித்து, தான் இறக்கும்வரை மிகுந்த சாமர்த்தியத்துடன் அவ்வதிகாரத்தைச் செலுத்தி வந்தாள். அவள் தனக்குப்பிள்ளையில்லாததால், பீஷ்வாவின் சம்மதத்தின் பேரில் துக்காஜி ஹோல்கார் என்பவரை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டாள். அவருடைய சந்ததியார்கள் இன்றும் இந்தூரை ஆண்டு வருகிறார்கள். அவள் கல்வியில் சிறந்தவள்; கூர்மையான புத்தியுடையவள். அவள் கடவுளிடம் பக்தியும், ஜனங்களிடம் தயையும் உடையவள்; தன் சாமர்த்தியத்தால் ஒரு கிராமமாயிருந்த இந்தூரை



அஹல்யா பாய்

ஒரு அழகிய நகரமாக்கிவிட்டாள். அவள் தர்பாரில் கொலுவிருந்து ராஜ்ய காரியங்களை நடத்துவாள்; ஆயினும் உத்தம ஸ்திரீகளுக்குரிய குணங்கள் யாவும் அமைந்தவள். அவளுக்குக் கர்வம் என்பதே கிடையாது. அவள் ஹிந்துவாயிருந்த போதிலும் மற்ற மதத்தினரிடம் துவேஷம் கொள்வதில்லை. அவள் தன் நாட்டை மிக்க திறமையுடன் ஆட்சி செய்து 1795-ம் வருஷத்தில் காலஞ்சென்றாள்.

பயிற்சி

1. ஸர் ஜான் ஷோர் காலத்தில் மகாராஷ்டிரர்களின் நிலைமை எப்படியிருந்தது?
2. அஹல்யாபாய் என்பவள் யார்? அவள் குணதிசயங்கள் எவை?
3. ஸர் ஜான் ஷோர் அயோத்தி நவாப் விஷயத்தில் எப்படி நடந்து கொண்டார்?

காலக் குறிப்பு:—

| | | |
|---|---|---|
| கி. பி. | 1790-92 | மூன்றாவது மைசூர் யுத்தம் |
| ,, | 1795 | மகாராஷ்டிரர்கள் நிஜாமைத் தோற்கடித்தல் |
| ,, | ,, | அஹல்யா பாய் மரணம் |

---

## 28. வெல்லெஸ்லி பிரபு (1798—1805)

**உதவிச் சேனை ஏற்பாடு; காரணங்களும் விளைவுகளும்**:-வெல்லெஸ்லி பிரபு கவர்னர் ஜெனரலாக வந்ததும், பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கு சுதேச ராஜ்யங்களில் அதிகமாயிருப்பதைக் கண்டு, அதை அழித்து ஆங்கிலேய அதிகாரத்தை அதிகப்படுத்த ஒரு ஏற்பாடு செய்தார்.

அதற்கு உதவிச்சேனை ஏற்பாடு அல்லது உபகார நியமன உடன் படிக்கை என்று பெயர். அதன்படி சுதேச மன்னர்கள் பிரெஞ்சுக்காரர்களைத் தங்கள் நாட்டி லிருந்து அனுப்பிவிட வேண்டுமென்றும், ஆங்கிலேயப் போர் வீரர்களும், ஆங்கிலேயரால் பயிற்றுவிக்கப் பட்ட இந்தியச் சிப்பாய்களும் அடங்கிய ஒரு சேனையைத் தங்கள் நாட்டின் பாதுகாப்புக்காக வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், அச்சேனையின் செலவுக்கு அவர் களே பணம் கொடுக்க வேண்டுமென்றும், ஆங்கிலேயர் கள் அனுமதியின்றித் தங்களில் ஒருவருக்கொருவரா வது, அயல் நாட்டாரோடாவது சண்டை, சமாதானம் முதலியவை செய்துகொள்ளக்கூடாதென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அந்த ஏற்பாட்டை முதலில் ஒப்புக்கொண்டவர் ஹைதராபாத் நிஜாம். உதவிச்சேனையின் செலவுக்காக அவர் தமக்கு மூன்ருவது மைசூர் யுத்தத்தில் கிடைத்த கடப்பை, பல்லாரி, அனந்தபூர் முதலிய ஜில்லாக் களை ஆங்கிலேயருக்குக் கொடுத்து விட்டார். அதனல் அவைகளுக்கு இன்றும் ‘‘கொடுக்கப்பட்ட ஜில்லாக் கள்’’ (Ceded Districts) என்ற பெயர் வழங்கி வருகிறது.

அயோத்தி நவாபும் உதவிச் சேனை ஏற்பாட்டை ஒப்புக்கொண்டு, கங்கைக்கும் யமுனைக்கும் மத்தியி லுள்ள செழிப்பான பாகத்தை உதவிச் சேனையின் செலவுக்காக ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டார்.

கர்நாடக நவாபான முகம்மது அலியின் குமாரர் ஆங்கிலேயருக்கு விரோதமாகத் திப்புவுடன் சேர்ந்து

கலகம் செய்ய முயற்சித்தார். ஆகையால் அவர் இறந்ததும், கர்நாடகத்தை வெல்லெஸ்லி ஆங்கிலேய ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டு அவர் குமாரர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துவிட்டார்.

தஞ்சாவூர் 150 வருஷங்களாக மகாராஷ்டிரச் சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. அப்பொழுது ஆண்ட அரசர் நாட்டைச் சரியாக ஆட்சி செய்யாததாலும் அவருக்குச் சந்ததி யில்லாததாலும், வெல்லெஸ்லி பிரபு சிம்மாசனத்துக்காக வழக்குச் செய்துகொண்டிருந்த இருவருக்கும் உபகாரச் சம்பளம் கொடுத்துவிட்டுத் தஞ்சாவூரை ஆங்கிலேய நாட்டுடன் சேர்த்துக்கொண்டார்.

**நான்காவது மைசூர் யுத்தம்** (1799-1800):—இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிக்காதவர் திப்பு சுல்தான். அவர் ஆங்கிலேயரிடம் பகைமைகொண்டு பிரெஞ்சுக்காரரின் உதவியை நாடினார்; தமக்கு உதவி செய்யும்படி பிரெஞ்சுத் தளகர்த்தராகிய நெப்போலியனுக்கு ஒரு கடிதம் எழுதினார்; ஆப்கானிஸ்தான அமீரை இந்தியாவின் மேல் படையெடுத்து வரும்படி தூண்டினார். இதையெல்லாம் அறிந்த வெல்லெஸ்லி பிரபு திப்புவுடன் யுத்தத்துக்குச் சென்றார். திப்பு சுல்தான் தோல்வி யுற்று ஸ்ரீரங்கப்பட்டிணத்தில் நுழைந்து கொண்டார். ஆங்கிலச்சேனை ஸ்ரீரங்கப்பட்டணத்தை முற்றுகை செய்தது. கடைசியாகத் திப்பு கோட்டைக்கு வெளியே வந்து வெகு தைரியமாகப் போர்புரிந்து மாண்டார். அதன் பிறகு வெல்லெஸ்லி பிரபு மைசூரை ஆண்ட பழைய ஹிந்து அரச வம்சத்தைச் சேர்ந்த கிருஷ்ண ராஜா

என்பவரை மைசூருக்கு அரசராக்கினர். திப்புவின் குமாரர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டது.

**மகாராஷ்டிரத் தலைவர்களின் ஐக்கியம்** (The Maratha Confederacy):-வெல்லெஸ்லி பிரபு உதவிச் சேனை ஏற்பாட்டை ஒப்புக்கொள்ளும்படி மகாராஷ்டிரர்களையும் கேட்டார். பீஷ்வாவுக்கு மந்திரியாயிருந்த நானு பர்னுவிஸ் மிக்க ராஜ தந்திரமுள்ளவராதலால் தாம் 1800-ல் இறக்கும்வரை பீஷ்வாவை அதற்கு ஒப்புக்கொள்ளாதபடி செய்து விட்டார். அப்பொழுது மகாராஷ்டிர நாட்டில் கெயிக்வார், ஸிந்தியா, ஹோல்கார், பான்ஸ்லே என்னும் நால்வர் பிரபலமாயிருந்த தலைவர்கள். கெயிக்வார் பரோடாவிலும், ஸிந்தியா குவாலியரிலும், ஹோல்கார் இந்தூரிலும், பான்ஸ்லே நாகபுரியிலும் இருந்து வந்தார்கள் என்று முன் ஒரு பாடத்தில் படித்திருக்கிறீர்கள். அவர்களுக்குள் ஒற்றுமையில்லாமல் அடிக்கடி சண்டைகள் உண்டாகிக் கொண்டிருந்தன. பீஷ்வாவான பாஜிராவ் ஹோல்காரின் சகோதரரைக் கொன்றார். அதனல் ஹோல்கார் அவர் மீது கோபங்கொண்டு பூனுவுக்குச் சென்று பாஜிராவோடு சண்டை செய்து அவரைத் தோற்கடித்து விட்டுப் பூனுவில் வேறொருவரைப் பீஷ்வாவாக நியமித்தார். பாஜி ராவ் ஆங்கிலேயரிடம் சென்று, கி. பி. 1802-ம் வருஷ அவர்களோடு பஸ்ஸீன் என்னும் இடத்தில் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி அவர்கள் பாஜி ராவைப் பீஷ்வாவாகச் செய்தால் அவர் உதவிச் சேனை உடன்படிக்கையை ஒப்புக்கொள்ளவேண்டும் என்பது தீர்மானிக்

கப்பட்டது. கெயிக்வாரும் அதேவிதமான உடன்படிக்கைக்கு ஒப்புக்கொண்டார்.

**இரண்டாவது மகாராஷ்டிர யுத்தம் (1803—4):**— இவ்வாறு இரண்டு மகாராஷ்டிரத் தலைவர்கள் ஆங்கிலேயரோடு உடன்படிக்கை செய்து கொண்டதைக் கண்டு பான்ஸ்லேயும் ஸிந்தியாவும் கோபங்கொண்டனர். ஸிந்தியா பிரெஞ்சுத் தளகர்த்தர்களைக் கொண்டு தம் சேனைகளைப் பயிற்சி செய்வித்து, ஆங்கிலேயரோடு யுத்தத்துக்குத் தயாரானார். அதையறிந்த வெல்லெஸ்லி பிரபுவும் யுத்தத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். அவர் தமது தம்பியான **ஜெனரல் ஸர் ஆர்தர் வெல்லெஸ்லியின்** வசம் ஒரு படையை அனுப்பினார். மகாராஷ்டிரர்களை நாலா பக்கங்களிலும் எதிர்க்கும்படி மற்றும் நான்கு படைகளை அனுப்பினார். 1803-ம் ௵ பான்ஸ்லே **அஸ்ஸே, ஆர்காம்** என்ற இரண்டு இடங்களிலும் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டார்; பிறகு அவர்களோடு உதவிச் சேனை ஏற்பாட்டைச் செய்து கொண்டு ஒரிஸாவையும் பீராரையும் அவர்களுக்குக் கொடுத்துவிட்டார். ஆங்கிலேயர்கள் பீராரை நிஜாமுக்குக் கொடுத்து விட்டார்கள். **ஜெனரல் லேக்** என்பவர் 1803-ம் ௵ வெகு திறமையுடன் போர் புரிந்த ஸிந்தியாவை **லாஸ்வாரி** என்ற இடத்தில் தோற்கடித்தார். ஸிந்தியாவும் உதவிச்சேனை ஏற்பாட்டை ஒப்புக்கொண்டார். கங்கைக்கும் யமுனைக்கும் நடுவிலுள்ள சில பாகங்களும், டில்லி, ஆக்ரா, ஆமத் நகரம், புரோச் என்ற நகரங்களும் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டன.

**மூன்ருவது மகாராஷ்டிர யுத்தம் (1804—5):**— ஹோல்காரைத் தவிர மற்றைய மகாராஷ்டிரத் தலைவர்களெல்லாம் வெல்லெஸ்லியின் உதவிச் சேனை யுடன்படிக்கையைச் செய்து கொண்டார்கள். ஹோல்கார் ராஜபுதனத்தைக் கொள்ளையடித்தும் அங்குச் சௌத் வரிவசூல் செய்தும் வந்தார். ராஜபுத்திரர்கள் ஆங்கிலேயர் பாதுகாப்புக் குட்பட்டவர்க ளாகையால் வெல்லெஸ்லி ஹோல்காரிடம் அவர்களைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று சொல்லியும் அவர் கவனிக்கவில்லை. ஆதலால் வெல்லெஸ்லி அவருடன் யுத்தத்துக்குத் தயாராஞர். ஹோல்காருடன் யுத்தம் செய்யப் பல ஆங்கிலேய சேனைகள் அனுப்பப்பட்டன. ஆனல் அவைகளெல்லாவற்றையும் அவர் ஒவ்வொன்ருகத் தோற்கடித்தார். கடைசியில் அவர் டில்லியை முற்றுகை செய்தார். குஜராத்திலிருந்து ஒரு ஆங்கிலச் சேனை அவரது தலை நகராகிய இந்தூரைக் கைப்பற்றியது. உடனே ஹோல்கார் டில்லி முற்றுகையை விட்டுவிட்டுத் திரும்பிஞர். ஜெனரல் லேக் அவரை டிக் என்னும் இடத்தில் தோற்கடித்தார். ஆங்கிலேயர்கள் அவரது நண்பராகிய பரதபுரத்தரசர் கோட்டையை முற்றுகை செய்தார்கள். பரதபுரத்தரசரும் கடைசியில் ஆங்கிலேயரோடு சமாதானம் செய்து கொண்டார். வெல்லெஸ்லி பிரபுவுக்குப் பின் வந்த கவர்னர் ஜெனரல் ஹோல்காரோடு சமாதானம் செய்து கொண்டார்.

**பயிற்சி**

1. உதவிச் சேனை ஏற்பாட்டின் நிபந்தனைகள் எவை? அவ் வேற்பாட்டை முதலில் ஒப்புக்கொண்டவர் யார்?


இந்தியா 1805
ஆப்கானியர்
சீக்கியர்
நேபாளம்
டில்லி
ராஜபுத்திரர்
சிந்து
பாட்னா
கல்கத்தா
ஆர்காம்
நாகபுரி
சூரத்
பம்பாய்
நிஜாம் ராஜ்யம்
வடசர்கார்
மைசூர்
சென்னை
தஞ்சாவூர்
வங்காளக் குடாக்கடல்
அராபிக்கடல்
பிரிட்டிஷ்

2. ஹைதராபாத் நிஜாம் ஆங்கிலேயர்களுக்குக் கொடுத்த நாடுகள் எவை? ஏன் கொடுத்தார்?

3. 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் மகாராஷ்டிரர்கள் எவ்வாறு பலமடைந்திருந்தனர்?

4. இரண்டாவது மகாராஷ்டிர யுத்தம் யார் யாருக்கு நடந்தது? அதன் முடிவு என்ன?

5. ஹோல்கார் எவ்விதம் உதவிச்சேனை ஏற்பாட்டை ஒப்புக் கொண்டார்?

**காலக் குறிப்பு:—**

| | |
|---|---|
| கி. பி. 1798—1805 | வெல்லெஸ்லி பிரபு கவர்னர் ஜெனரல் |
| ,, 1799 | நான்காவது மைசூர் யுத்தம் |
| ,, 1802 | பீஷ்வாவுடன் பஸ்ஸீன் உடன்படிக்கை |
| ,, 1803 | சிந்தியாவுடனும் பான்ஸ்லே யுடனும் யுத்தங்கள் |
| ,, 1804 | ஹோல்காருடன் சண்டை |
| ,, 1805 | வெல்லெஸ்லி இங்கிலாந்துக்குத் திரும்பியது |

## 29. மின்டோ பிரபு (1807-13)

**ரஞ்சித் ஸிங்:**—வெல்லெஸ்லி பிரபு இங்கிலாந்து சென்ற பின் **ஸர் ஜார்ஜ் பார்லோ** என்பவர் இரண்டு வருஷம் கவர்னர் ஜெனரலாயிருந்தார். பிறகு **மின்டோ பிரபு** கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். பஞ்சாபில் **ரஞ்சிட் ஸிங்** என்பவர் முதலில் ஒரு சாதாரண சீக்கியத் தலைவராயிருந்து, தமது சாமர்த்தியத்தினால் கடைசியில் பஞ்சாப் முழுவதுக்குமே அரசரானார். அவர் ஆங்கிலேயருக்கு நண்பராகவே இருந்தார். அவர் 1807-ல் சட்லிஜ் நதியைக் கடந்து, அதற்குக்

கிழக்கேயுள்ள லூதியானுவைப் பிடித்துக்கொண்டார். அப்பக்கத்திலுள்ள சீக்கியத் தலைவர்கள் ஆங்கிலேயர்களிடம் பாதுகாப்பு வேண்டினர். மின்டோ பிரபு, மெட்காப் என்பவரை ரஞ்ஜித் ஸிங்கினிடம் அனுப்பினார். அவர் ரஞ்ஜித் ஸிங்கின் ராஜ்யத்துக்கு சட்லிஜ நதியே கிழக்கெல்லையாக இருக்கவேண்டுமென்று அவரிடம் சொல்லி ஒப்புக்கொள்ளும்படி செய்து விட்டார். அதனால் யமுனைக்கும் சட்லிஜுக்கும் மத்தியிலுள்ள நாடு ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்தது.

**கம்பெனியாரின் சாஸனம் புதுப்பிக்கப்பட்டது:—** கி. பி. 1813 ம் ஹு ஆங்கிலேய கிழக்கிந்தியா கப்பெனியாரின் சாஸனம் புதுப்பிக்கப்பட்டது. அதனால் கம்பெனியார் பூரண சுதந்திரத்துடன் இந்தியாவில் வியாபாரம் செய்யும் பாத்தியதையை இழந்தார்கள். 1813லிருந்து இருபதுவருஷங்களுக்குக் கம்பெனியின் காலம் நீடிக்கப்பட்டது. ராஜ்யத்தை ஆளுவதற்கு மாத்திரம் கம்பெனியார்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. இந்தியக் கவர்ன்மெண்டார் இந்திய ஜனங்களின் கல்விக்காக வருஷம் ஒன்றுக்கு ஒரு லக்ஷ ரூபாய் செலவு செய்யலாமென்று அனுமதித்தார்கள். மாகாண கவர்ன்மெண்டார்களுக்கு வரிவிதிக்கும் அதிகாரம்கொடுக்கப்பட்டது.

பயிற்சி

1. ரஞ்ஜித் ஸிங் என்பவர் யார்? அவர் எவ்விதம் பிரபலமடைந்தார்?

2. ஆங்கிலேயர்கள் ரஞ்ஜித் ஸிங்குடன் என்ன உடன்படிக்கை செய்து கொண்டார்கள்?

3. கம்பெனியாரின் சாஸனம் மின்டோ பிரபு காலத்தில் எவ்வாறு புதுப்பிக்கப்பட்டது?

## 30. ஹேஸ்டிங்ஸ் பிரபு (1813-23)

மின்டோ பிரபுவுக்குப் பின் ஹேஸ்டிங்ஸ் பிரபு கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அவர் வரும் பொழுது சுதேச மன்னர்கள் விவகாரங்களில் தலையிடக் கூடாதென்ற தீர்மானத்துடன் வந்தும், அவரால் அவ்வாறு அனுஷ்டிக்க முடியவில்லை. அவர் நேபாளத்தோடும், பிண்டாரிகளோடும், மகாராஷ்டிரர்களோடும் யுத்தம் செய்து ஆங்கிலேய ராஜ்யத்தை இந்தியாவில் பலப்படுத்தினர்.

**கூர்க்கர்கள் கலகம் — நேபாள யுத்தம்** (1814-16):— நேபாள தேசம் இமயமலைச் சாரலில் திபெத்துக்குத் தெற்கேயுள்ளது. அங்குள்ளவர்கள் கூர்க்கர்கள். அவர்கள் யுத்தத்தில் மிகப் பிரியமுள்ளவர்கள். மலைநாடுகளில் வசிப்பவர்களுக்கு இயற்கையாய் ஏற்பட்ட சுயேச்சை விருப்பம் அவர்களிடம் அதிகமாயிருந்தது. நேபாள தேசத் தரசர் தமது ராஜ்யத்தைப் பெருக்க எண்ணங்கொண்டு ஒரு சைனியத்தை யனுப்பினர். அது அயோத்திக்குப் பக்கத்திலுள்ள சில நாடுகளைப் பிடித்துக்கொண்டது. ஹேஸ்டிங்ஸ் பிரபு நான்கு சேனைகளை நாலு புறங்களிலும் நேபாள தேசத்தைத் தாக்கும்படி அனுப்பினர். அவைகளில் மூன்று சேனைகள் தோல்வியுற்றன. ஆக்டர்லோனி என்பவர் மட்டும் நேபாளத் தளகர்த்தரைத் தோற்கடித்து, மாலூன் கோட்டையைப் பிடித்து, நேபாள தேசத்தின் தலைநகராகிய காட்மாண்டுவையும் தாக்கினர். 1816-ல் சேகௌலி என்ற இடத்தில் ஆங்கிலேயருக்கும் நேபாள

தேச அரசருக்கும் சமாதான உடன்படிக்கை நடந்தது. அதன்படி கூர்க்கர்கள் பிடித்த நாடுகள் திரும்பவும் ஆங்கிலேயரிடம் விட்டுவிடப்பட்டன. மேலும் சிம்லா, நைனிடால் என்ற இடங்களும் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. காட்மாண்டுவில் ஒரு ஆங்கிலேயப் பிரதிநிதி ஏற்றுக் கொள்ளப்பட்டார். நேபாள அரசர் அதிலிருந்து தற்காலம் வரையிலும் ஆங்கிலேயருக்கு நண்பராயிருந்து ஆங்கிலேய சைனியத்துக்குக் கூர்க்கப் போர் வீரர்களைக் கொடுத்து உதவுகிறார்.

**பிண்டாரிகள் (1817):—** பிண்டாரிகள் என்பவர்கள் கூட்டம்கூட்டமாகக் குதிரைகளின் மேலேறிக்கொண்டு, மத்திய இந்தியாவிலுள்ள நாடுகளைக் கொள்ளை யடித்தார்கள். சுதேச அரசர்களின் சைனியங்களிலிருந்து விலகியவர்களும், தண்டனைக்குத் தப்பியோடிய குற்றவாளிகளும் அக்கூட்டத்தில் சேர்ந்திருந்தார்கள். அவர்கள் முதலில் பண்டில்கண்டிலும், பிறகு நிஜாம் ராஜ்யத்திலும், வட சர்க்காரிலும் சென்று கொள்ளையடித்து, ஜனங்களுக்கு அதிகத் தொந்தரவையும் நஷ்டத்தையும் ஏற்படுத்தினார்கள். ஹேஸ்டிங்ஸ் பிரபு அவர்களை யடக்குவதற்குச் சேனைகளை நாலா பக்கங்களிலிருந்தும் அனுப்பினார். அச்சேனைகளுக்கு நடுவில் அகப்பட்டு அவர்களில் அநேகர் கொல்லப்பட்டனர். சிலர் ஆங்கிலேயரைச் சரணமடைந்து விவசாயத் தொழிலைக் கைக்கொண்டனர். அவர்களின் தலைவர்களில் கரீம் ஆங்கிலேயரிடம் சரணம் புகுந்தான். சிட்டு என்பவன் காட்டிற்கு ஓடி அங்குப் புலிக்கு இரையானான். இவ்விதமாகப் பிண்டாரிகள் அழிக்கப்பட்டனர்.

**கடைசி மகாராஷ்டிர யுத்தம்** (1817-18):—வெல்லெஸ்லி பிரபுவுடன் உடன்படிக்கை செய்துகொண்ட இரண்டாவது பாஜிராவ் தாம் சுயேச்சையடைவதற்கு ஏற்ற சமயத்தை எதிர்பார்த்திருந்தார். கி. பி. 1817ல் புனாவிலிருந்த ஆங்கிலேய ரெஸிடென்டை எதிர்த்தார். உடனே ஆங்கிலேய சேனை அவரைக் கர்க்கி என்ற இடத்தில் தோற்கடித்தது. அவர் மறுபடியும் ஒரு சைனியத்தைச் சேர்த்துக்கொண்டு ஆங்கிலேயரோடு யுத்தம் செய்து தோல்வியடைந்தார். ஹேஸ்டிங்ஸ் பிரபு 1818ல் அவரைப் பிடித்து, அவருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துப் பித்தூருக்கு அனுப்பிவிட்டார். ஹோல்காரும் பான்ஸ்லேயும் ஆங்கிலேயருடன் யுத்தம் செய்து தோல்வியடைந்தார்கள். அதனுடன் மகாராஷ்டிரர் அதிகாரம் அழிந்துபோயிற்று. சடாராவில் சிவாஜியின் சந்ததியாரான ஒருவர் அரசராக்கப்பட்டார். பீஷ்வாவின் நாடுகள் பம்பாய் ராஜதானி ஆயின.

**சீர்திருத்தங்கள்**:—ஹேஸ்டிங்ஸ் பிரபு காலத்தில் கல்கத்தாவில் ஹிந்து காலேஜ் என்ற கல்லூரி ஏற்படுத்தப்பட்டது. 1818ல் சுதேச பாஷையில் சமாசாரப் பத்திரிகைகள் வெளியிடப்பட்டன. ரஸ்தாக்களும், பாலங்களும், கால்வாய்களும் வெட்டப்பட்டன. இந்தியர்கள் முதன்முதலில் நியாயாதிபதிகளாக நியமிக்கப்பட்டனர். பிறகு ஹேஸ்டிங்ஸ் பிரபு 1823-ல் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார்.

### பயிற்சி

1. பிண்டாரிகள் யார்? அவர்கள் எவ்வாறு அழிக்கப்பட்டனர்?

2. நேபாள யுத்தத்தில் ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்த லாபம் என்ன?

3. கடைசி மகாராஷ்டிர யுத்தம் யார் யாருக்கு நடந்தது? அதன் முடிவு என்ன?

காலக்குறிப்பு:—

| | |
|---|---|
| கி. பி. 1807-13 | மின்டோ பிரபு |
| ,, 1809 | ரஞ்சிட் ஸிங்குடன் உடன்படிக்கை |
| ,, 1813-23 | ஹேஸ்டிங்ஸ் பிரபு |
| ,, 1814-16 | நேபாள யுத்தம் |
| ,, 1817 | பிண்டாரி யுத்தம் |
| ,, 1817-18 | கடைசி மகாராஷ்டிர யுத்தம் |

2800